www.gnanam.info
www.gnanam.lk

மார்ச் 2020

# ஞானம்

238

கலை இலக்கியச் சஞ்சிகை

விலை : ரூபா 100/=



சர்வதேச மகளிர்தின ஆக்கங்கள்:
- பத்மா சோமகாந்தன்
- ச. முருகானந்தன்
- புலோலியூர் வேல்நந்தன்

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

ஞானம்
ஒளி: 20
சுடர்: 10
238

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.


## ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்

இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்

நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்



## தொடர்புகளுக்கு

**தொ.பேசி.** ☞ 0094-11-2586013
0094-77-7306506

**தொ.நகல்** ☞ 0094-11-2362862

**இணையம்** ☞ www.gnanam.info
www.gnanam.lk
**தளம்.ஞானம்.இலங்கை**

**மின்னஞ்சல்** ☞ editor@gnanam.info
editor@gnanam.lk

**அஞ்சல்** ☞ 3B-46th Lane, Colombo-6,
Sri Lanka

**வங்கி விபரம்** ☞ T. Gnanasekaran
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(**மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்**)

**சந்தா விபரம்** ☞ Sri Lanka
**ஒரு வருடம்** :ரூ 1,000/=
**ஆறு வருடம்** :ரூ 5,000/=
**ஆயுள் சந்தா** :ரூ 20,000/=

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |


***⊙ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.***
***⊙புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.***
***⊙பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.***
***⊙படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.***

# இதழினுள்ளே.....


⊙ **கவிதைகள்**

*பாலமுனை பாறூக்* 12
*புலோலியூர் வேல்நந்தன்* 20
*செல்லையா சுப்ரமணியம்* 24
*சித்தி கருணானந்தராஜா* 29
*சமரபாகு சீனா உதயகுமார்* 32
*செல்லத்தம்பி சிறீக்கந்தராசா* 36
*கனகசபாபதி செல்வனேசன்* 41

⊙ **சிறுகதைகள்**

*என். நஜ்முல் ஹுசைன்* 03
*ஆவூரான்* 13
*எம்.எம். மன்ஸூர் (குறுங்கதை)* 23
*ஏ. எஸ். உபைத்துலா* 26
*நீ.பி. அருளானந்தம்* 33

⊙ **கட்டுரைகள்**

*பத்மா சோமகாந்தன்* 06
*வே. தில்லைநாதன்* 09
*பேராசிரியர் சபா ஜெயராசா* 10
*ச. முருகானந்தன்* 16
*திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு* 18
*நாட்டிய கலாநிதி கார்த்திகா கணேசர்* 19
*என். செல்வராஜா* 30
*பேராசிரியர் சோ. சந்திரசேகரன்* 38

⊙ **பத்தி**

*தமிழ்மணி மானா மக்கீன்* 42
*பேராசிரியர் துரை மனோகரன்* 43

⊙ **சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்**

*கலாபூஷணம் கே. பொன்னுத்துரை* 46

⊙ **வாசகர் பேசுகிறார்** 48

# ஆசிரியர் பக்கம்

## சர்வதேச மகளிர்தினச் சிந்தனைகள்

பிரான்சிய அரசியற் புரட்சியின்போது அந்நாட்டின் தலைநகரிலுள்ள உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த பெண்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள் – சமுதாயத்தில் ஆணுக்கு நிகராகப் பெண்ணுரிமை, வேலைக் கேற்ற ஊதியம், எட்டுமணிநேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, அடிமைத்தளையிலிருந்து விடுதலை போன்றவை தமக்கு வேண்டுமெனக் கையில் கிடைத்த ஆயுதங்களுடன் தெருக்களில் அணிதிரண்டார்கள்.

கொதித்தெழுந்த பெண்களைச் சமாதானப்படுத்த முயன்ற அந்நாட்டு அரசன் லூயிஸ் பிலிப், முடியாது போகவே முடிதுறந்தான். இக்கிளர்ச்சியில் அரசனின் மெய்ப் பாதுகாவலர்கள் இருவர் கொல்லப்பட்டனர். இச்செய்தி ஐரோப்பா எங்கும் பரவி அங்கெல்லாம் பெண்களின் கிளர்ச்சிகள் வெடித்தன. ஜெர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க், இத்தாலி நாடுகளைச் சேர்ந்த பெண் பிரதிநிதிகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் பிரான்ஸில் இரண்டாவது குடியரசை நிறுவிய அரசன் லூயிஸ் பிளாங், அரசவை ஆலோசனைக் குழுவில் பெண்களை இடம்பெறச் செய்யவும், பெண்கள் வாக்குரிமை பெறவும் ஒப்புதல் தந்தான். அந்தநாள் 1848ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதியாகும். அந்த நாளே சர்வதேச மகளிர் தினமாக வருடந்தோறும் கொண்டாடப்பட்டுவருகிறது.

போராடினால்தான் உரிமைகள் கிடைக்கும் என்ற சிந்தனை உலகெங்கும் உள்ள பெண்களிடம் வலுப்பெறத் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து சர்வதேச மகளிர் அமைப்புகள் தோற்றம்பெற்றன.

நமது நாட்டில் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் கொடுமைகளை, துன்புறுத்தல்களை வன்முறைகளை, பாலியல் ரீதியான குற்றங்களை அன்றன்றாடு தினப் பத்திரிகைகளில் படிக்கும்போது மனித நேயம் கொண்டவர்களின் நெஞ்சம் பதறுகின்றது. இந்த அடாத்தனமானசெயல்களை கொடுமைகளைக் கண்டு, மனம் கொதித்து எழுகின்றது. பெண்களைத் தாயாக, மனைவியாக, மகளாக அன்பும் ஆதரவும் அளித்து சம உரிமையுள்ளவர்களாக மதிக்கவேண்டிய நமது சமுதாயம், இவ்வளவு கீழ்த்தரமான நிலைக்கு இறங்கிவிட்டதே என அஞ்சவேண்டியுள்ளது, வெட்கப்பட வேண்டியுள்ளது.

பெண்கள் வெளியே பயணிக்கும்போது, வேலைத்தலங்களில் பணியாற்றும் இடங்களில், ஏன் – பாடசாலைகளில் கூட, பாலியல் சேட்டைகளுக்கும், பலவகை வன்முறைகளுக்கும் ஆளாகி வருகின்றனர். வீட்டு வன்முறைகளுக்கும் குறைவேயில்லை. பெண்களுக்கு எதிரான பாரபட்சங்களையும் வன் முறைகளையும் ஒழிப்பதற்கான அனைத்துலக உடன்படிக்கையை எம்நாடு 1981லேயே ஏற்றுக் கொண் டிருக்கிறது. பாலியல் தொல்லை, தாக்குதல் முதலியவை, குற்றத்துக்குரிய செயல்கள் என 1995, 1998ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட குற்றவியல் சட்டத்திருத்தங்களில் கூறப்பட்டிருகின்ற போதிலும், இலங்கைச் சனத்தொகையில் 51 சதவீதமானவர்களாக விளங்கும் பெண்களில், 60 சதவீதமானவர்கள் வன்முறைகளுக்குள்ளாகி வருகின்றனர் என்பது இச்சட்டங்களை நடைமுறைப் படுத்துவதிலுள்ள பலவீனத்தையும், ஓட்டை உடைசல்களையும், சட்டங்களைச் செயற்படுத்துவோரின் அக்கறையின்மையையுமே அம்பலப்படுத்துவதாயுள்ளன.

வருடந்தோறும் ஆண்டில் ஒருநாள் – மார்ச் 8 அன்று மட்டும், சர்வதேச மகளிர் தினத்தை, பெண்கள் அமைப்புகளும், மனித உரிமை ஆர்வலர்களும், தலைநகரிலும் மற்றும் நகரங்களிலும், ஆர்ப்பாட்டம், ஊர்வலம், உரிமைக்கோஷம் கருத்தரங்கு என நடத்தினால் மட்டும் போதாது, ஏனைய 364 நாட்களிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டிய உரிமைப் போராட்டம் இது. கல்வி அறிவுள்ள, நகரங்களில் வாழும் பெண்கள் மத்தியில் மாத்திரமல்லாமல், கிராமப் பகுதிகளையும் தோட்டப் பிரதேசங்களையும் வாழ்விடமாகக் கொண்ட கல்வியறிவில்லாத அடிமட்ட மக்களிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் போதே பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும் இழி செயல்களையும் ஓரளவுக்கு குறைக்கமுடியும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

❍❍❍




**1967** ஆம் ஆண்டு "சுஜாதா" எனும் தமிழ்-சிங்கள கையெழுத்துச் சஞ்சிகையின் தமிழ் பகுதி ஆசிரியராக இலக்கியப் பிரவேசம் செய்த நஜ்முல் ஹுசைனின் முதல் ஆக்கம் 1968ஆம் ஆண்டு தென்னிந்திய "குமுதம்" சஞ்சிகையில் வெளியாகியது.

மாதத்தின் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் இடைவிடாது கவியரங்கினை நடாத்திவரும் கொழும்புத் தலைநகரில் வெற்றிநடை போடும் தமிழ்க் கவிஞர்களின் தேசிய அமைப்பான 'வகவம்' எனும் வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர். இவ்வமைப்பு இவரது தலைமையின் கீழ் இதுவரை 65 கவியரங்குகளை வெற்றிகரமாக நடாத்தியுள்ளது. இலங்கையின் எல்லாத் தேசியப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. வானொலி தொலைக்காட்சிகளிலும் பங்களிப்புச் செய்து வருகிறார். பாடசாலைக் காலம் முதல் வானொலி முஸ்லிம் சேவையில் குரல் கொடுத்து வந்துள்ள இவர் 'இளைஞர் இதயம்' எனும் நிகழ்ச்சியினை இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் நடாத்தி வந்துள்ளார். இவரது மெல்லிசைப் பாடல்கள், இஸ்லாமிய கீதங்கள், வானொலி, தொலைக்காட்சிகளில் ஒலி, ஒளிபரப்பாகி வருகின்றன.

மேடைக் கவிதைகள் பாடுவதில் ஆர்வம் காட்டி வரும் இவர் பட்டி மன்றப் பேச்சாளரும் ஆவார். 2011இல் மலேசிய கோலாலம்பூரில் இடம்பெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டுக் கவியரங்கில் இலங்கை சார்பாக கவிக்கோ அப்துல் ரகுமான் தலைமையில் கவிதை பாடினார். கொழும்பு கம்பன் கழகத்தின் கம்பன் விழா 2017 உரையாற்றி தமிழறிஞர்களின் பாராட்டையும், வாழ்த்தையும் பெற்றார். தமிழகத்தின் மேடைகளிலும் கவிதை பாடியுள்ளார்.



மரபுக் கவிதை, புதுக்கவிதை என்று எழுதிவரும் இவர் 'பனித்தீ' எனும் கவிதை நூலினை 1992இலும் 'இனிவரும் நாட்களெல்லாம்', 'நஜ்முல் ஹுசைனின் நட்சத்திரக் கவிதைகள்' ஆகிய இரண்டு கவிதை நூல்களை 2018இலும் வெளியிட்டுள்ளார். சிறுகதைகளையும் எழுதி வரும் இவரது சிறுகதைத் தொகுதி விரைவில் வெளிவரவிருக்கிறது.

அரச விருதான கலாபூஷணம் விருது பெற்றுள்ள இவர் 2002ஆம் ஆண்டு இலங்கை அரசின் ஏற்பாட்டில் இடம்பெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் போது 'படைப்பாளர் விருது' வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவரது கவிதை பங்களிப்புக்காக அகில இன நல்லுறவு ஒன்றியம் இவருக்கு 'கவிமணி' பட்டம் வழங்கியது.

**சோ**மசிரி ஆடாது அசையாது அமர்ந்திருந்தான். அவனது இடது காலில் இன்னும் இலேசாக இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

அவனது வீட்டுக்குள் அந்த முஸ்லிம் குடும்பம் ஆனந்தக் கண்ணீரோடு கூடி நின்றது. அவர்கள் காட்டிய அன்பிலே அவனது மனைவி, பிள்ளைகளும் திக்கு முக்காடிக் கொண்டிருப்பது அவனுக்கு நன்றாக விளங்கியது.

கலகெடிஹேன பன்சல தலைமை ஹாமுதுரு கூட சோமசிரியை அழைத்து தனது பாராட்டினைத் தெரிவித்திருந்தார்.

சுற்றியிருந்த ஊரார்கூட அவனை ஒரு வீர புருஷனாக வாயார வாழ்த்திக் கொண்டிருந்தனர்.

தனக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் அத்தனை பாராட்டிற்காகவும் மிகவும் மகிழ்ச்சியடைய வேண்டிய சோமசிரியால் முழுமையாக அப்படி இருக்க முடியவில்லை.

சென்ற சனிக்கிழமை ஒரு வேலையாகத் தனது மோட்டார் வண்டியில் உடுகொடக்கு அருகிலிருந்த சிங்களக் கிராமத்திற்குச் சென்றிருந்தான். வரும் வழியில் திஹாரி ஊடாக வேகமாக வந்து கொண்டிருந்தான். அப்போது நண்பகல் வேளை. திஹாரி ஆற்றுக்கருகில் வந்தபோது ஆறு வழமையை விட வேகமாகச் செல்வதை அவதானித்தான். எங்கேயாவது பெரிய மழை பெய்கிறது என்று ஊகித்துக் கொண்டு வந்து கொண்டிருந்த போதுதான் அந்த வித்தியாசமான சத்தங்கள் அவனது காதில் விழுந்தன.

'என்ன அந்த சத்தம்' என்று எண்ணிப் பார்க்கும் முன்பே சுழன்று ஓடும் ஆற்றைப் பார்த்து விட்டான்.

அங்கே அவன் கண்ட காட்சி அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அங்கே யாரோ ஒருவர் தண்ணீரில் அடிபட்டுப் போய் கொண்டிருந்தார்.

இல்லை ஒருவரல்ல இருவர். நன்றாகப் பார்த்தான். இல்லை மூவர் தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள். இரண்டு பெண்கள். ஒரு சிறுவன். அப் பெண்ணின் ஆடையைப் பார்த்தவுடனேயே தெரிந்துவிட்டது. அவர்கள் முஸ்லிம்கள். சோமசிரி ஒரு கணமும் யோசிக்கவில்லை. மோட்டார் வண்டியை கீழே போட்டு விட்டு சட்டையைக் கழற்றினான்.

அவன் கழற்றிய வேகத்தில் சட்டை கிழிந்தது. பெரிய நீச்சல் வீரனான சோமசிரி ஆற்றில் குதித்தான். முதலில் அவனுக்கு தத்தளித்துக் கொண்டிருந்த சிறிய பெண் பிள்ளையைத்தான் பிடிக்க முடியுமாயிருந்தது. ஒருகையால் அச் சிறுமியைப் பிடித்துக் கொண்டே சிறுவனையும் பிடித்துக் கொண்டான். இருவரையும் ஒருவாறு கரை சேர்த்தான். நேர இடைவெளி விடவில்லை. மீண்டும் நீரில் குதித்தான். தத்தளித்துக் கொண்டிருந்த பெண்ணின் கொண்டையைப் பிடித்தான். வேகமாக இழுத்துக் கொண்டு கரைக்கு வந்தான். அப்போது அங்கே பலர் வந்து கூடி விட்டனர். அந்தச் சிறுவன் சிறுமிக்கு முதலுதவி வழங்கிக் கொண்டிருந்தனர். சோமசிரியும் களைத்துப் போய்விட்டான். அவனது இடது காலும் ஏதோ ஒரு கல்லில் அடிபட்டிருந்தது. அதிலிருந்து இரத்தம் வழிந்தது.

சோமசிரி செய்த காரியம் சாதாரணமானதல்ல. மூன்று உயிர்களைக் காப்பாற்றியுள்ளான். அவன் மட்டும் அந்த நேரத்தில் வராமலிருந்தால் அந்த மூன்று உயிர்களும் பறிபோயிருக்கும்.

அந்தப் பெண் ஆற்றில் குளிக்க வந்த நேரம் யாருமே அங்கு இருக்கவில்லை. தனது மகன் நீச்சல் வகுப்புக்கு போகிறான்தானே என்ற குருட்டுத் தைரியத்தில் ஆற்றில் இறங்கி விட்டாள். ஆற்றின் வேகத்தோடு ஈடுகொடுக்க முடியாது போனதைப் பிறகுதான் உணர்ந்தாள்.

நல்லவேளை இரக்க குணமுள்ள சோமசிரி வந்து சேர்ந்தான். உடனடியாக நீரில் மூழ்கிய மூவரும் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். சோமசிரியை அருகிலுள்ள டிஸ்பென்சரிக்கு தூக்கிச் சென்று அவனது இரத்தம் வழியும் காலுக்கு கட்டுப்போட்டு விட்டனர். அங்கே வந்த அனைவருமே சோமசிரியை மார்போடு அணைத்துக் கொண்டனர். சிறிது நேரத்திலேயே சோமசிரி மூன்று உயிர்களைக் காப்பாற்றிய செய்தி ஊர் முழுக்கப் பரவிவிட்டது. பெண்கள் கூட சோமசிரியைப் பார்க்க வந்தனர். தங்கள் மலர்ந்த வதனத்தினால் சோமசிரிக்கு நன்றி சொன்னார்கள்.

"சோமசிரி, சோமசிரி" என்று எல்லோரும் உச்சரிக்க ஆரம்பித்தனர்.

அந்த ஊரிலே சோமசிரி ஹீரோவாக போயிருந்தான். ஊர் பள்ளிவாசல்கூட அவனுக்கு நன்றி பாராட்டி விழா நடத்தத் தயாராகிக் கொண்டிருந்தது.

இன்று அவனது வீட்டுக்கு அவன் காப்பாற்றிய முஸ்லிம் குடும்பம் வந்திருந்தார்கள். அவர்கள் நன்றியை வெளிக்காட்டிய விதத்தில் சோமசிரியின் முழுக் குடும்பமுமே திக்குமுக்காடிப் போயிருந்தது.

தான் செய்த வீர காரியத்தை எண்ணி மகிழ்ச்சிக் கடலில் திளைக்கவேண்டிய சோமசிரியின் அடிமனதின் ஒரு மூலையில் தாங்க முடியாத சோகம் அவனை முழு மகிழ்ச்சி கொள்ள முடியாத வகையில் வதைத்துக் கொண்டிருந்தது.

‘நான் நல்லவனா கெட்டவனா?’ விடை தேடி அவனது மனச்சாட்சி அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

இப்போது மூன்று முஸ்லிம் உயிர்களைக் காப்பாற்றிய அவன் ஒரு மாதத்திற்கு முன்பு என்ன செய்தான்….?

*000*

மினுவன்கொடை முஸ்லிம்கள் அச்சத்தில் உறைந்து போயிருந்தார்கள். அவசரகால சட்டம் ஊரடங்கு சட்டம் என சட்டங்கள் ஊமையாக ஆட்சி செய்து கொண்டிருக்க சோமசிரியும் நண்பர்களும் கையிலே ஆயுதங்களுடன் முஸ்லிம் வியாபார ஸ்தாபனங்கள் என அடையாளம் தெரிந்த இடங்களை எல்லாம் அடித்து நொறுக்கினர்.

ஆங்காங்கே இருந்த ஆயுதப் படைகள் வெறும் அ∴றிணைகளாகத்தான் அவர்களுக்குத் தோன்றினர்.

சோமசிரியினதும் அவனது நண்பர்களினதும் மனங்களில் வெறியினைத் தவிர எதுவுமே இருக்கவில்லை. முடியுமான இடங்களுக்கெல்லாம் தீ வைத்தனர். ஓர் ஒழுங்கை வழியே சோமசிரி வெறியுடன் சென்றபோது ஒரு மறைவிடத்தில் ஹிஜாப் அணிந்த ஒரு பெண்ணும் அவளை அச்சத்தோடு அணைத்துக் கொண்டு இரண்டு சிறுமிகளும் இருந்தனர். ஹிஜாபுடன் அப் பெண்ணைப் பார்த்தவுடன் சோமசிரிக்கு தங்கள் இனத்தையே அழிக்க வந்த தற்கொலைக் குண்டுதாரியாகத்தான் அவள் தென்பட்டாள்.

மிகவும் மூர்க்கமாக அவளைத் தாக்கினான். அச் சிறுமிகளையும் கொடூரமாகத் தாக்கினான். அவர்கள் அச்சத்தால் அலறினார்கள். தங்களைத் தாக்க வேண்டாம் என்று கூக்குரலிட்டார்கள். அவர்களது அவலக்குரல்கள் எதுவுமே சோமசிரியின் காதுகளுக்கு ஏறவில்லை. அவர்கள் மூவரும் படுகாயப்பட்டு மயக்கமுறும்வரை தாக்கினான். அவர்கள் இரத்த வெள்ளத்தில் மூழ்கினர்.

பின்புதான் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். அது போன்றே இன்னும் பல அப்பாவிகள் அவனதும் நண்பர்களினதும் தாக்குதலுக்கு உள்ளாகினர்.

மினுவான்கொடையை அழித்து விட்டோம் என்று வெற்றி முரசு கொட்டி திரும்பி வந்தார்கள்.

*000*

‘திஹாரி ஆற்றில் தத்தளித்துக் கொண்டிருந்த அந்த முஸ்லிம் குடும்பத்தைப் பார்த்த போது எதுவுமே யோசிக்காமல் அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வு எனக்கு ஏன் ஏற்பட்டது?. ஊர் மாறிச் சென்று முஸ்லிம்கள் என்ற காரணத்துக்காக வெட்டி விட்டு வந்த என்னால் இவர்கள் சாகட்டும் என்று போகமுடியாமல் போனதே ஏன் ? ஏன் ? ’

சோமசிரி தன்னையே கேட்டுக் கொண்டான். விடை அவனுக்கு கிடைத்தது.

“ஆம் நான் ஒரு நல்ல பௌத்தன்.

மனிதர்கள் மீது இரக்கத்தை மட்டுமே காட்டிய புத்தபிரானின் அடியொற்றி வாழ்பவன்.

புத்தர் சிலையின் முன் சென்று நின்றான்.

“புத்தர் பிரானே என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். மன்னித்துக் கொள்ளுங்கள்” கண்ணீரால் புத்தர் சிலையை அபிஷேகம் செய்தான் சோமசிரி.

அங்கே இன்னொரு அசோக சக்கரவர்த்தி பிறந்திருந்தான்.

○○○

## பகிர்வோம்....

### ஈழமும் தமிழும்



யாழ்ப்பாணம் வண்ணைநகர் ஆறுமுகநாவலர் வாசிகசாலை மனேஜராகப் பணிபுரிந்த ***மா. சிவராமலிங்கம்பிள்ளை*** அவர்கள் ***வேதவல்லி*** என்கிற புதினத்தை எழுதியுள்ளார். 1911ஆம் ஆண்டு மாயவரம் - இந்தியாவில் அச்சேறிய இந்த நூலிலே வைத்தியனாதையரினால் எழுதப்பெற்ற முகவுரையின் ஒரு பகுதி :

.... கற்பை இழந்து தவிக்கும்படியாகச் செய்யும் இடையூறுகள் பெரும்பாலும் ஏற்படுவது, கொடுஞ் சூரி மாமி, நாத்தி முதலியவர்களாலும் இன்னுஞ் சில காரணங்களாலுமேயெனக் காட்டியும், அப்படிப்பட்ட இடையூறுகள் வந்தவிடத்தும் அஞ்சாது கற்பைக் கைவிடாமல் காத்தால் பிறகு உண்டாகும் சுகங்களை விளக்கியும் நமது நண்பர் யாழ்ப்பாணம் வெள்ளைநகர் மகாராஜராஜஸ்ரீ ***சிவராமலிங்கம் பிள்ளை*** அவர்களால் ***வேதவல்லி*** என்னும் பெயர் புனைந்த இந்த அரிய புத்தகம் எழுதப்பட்டு எம்மால் நடத்தப்படும் ***சர்வஜனரஞ்சனி*** யென்னும் மாதசஞ்சிகையின் மூலமாய்ப் பிரசுரிக்கப்பட்டது.

# பெண்களின் சமத்துவத்தை வலியுறுத்தும் மகளிர்தினம்



மகளிர் தினம் மார்ச் 8

வருடாவருடம் வந்து போகும் மார்ச் -8ஆம் நாள் மன்பதையின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் உந்துதலைக் கொடுக்கும் இனிய நாளாகும்.

தாங்கொணாத அடக்கியொடுக்கப்பட்டு தாழ்நிலையை அனுபவித்த துயரங்களால் நீண்டகாலம் பல்வேறு நிலைகளில் போராடி மானுட வாழ்வில் பெண்களின் முக்கியத்துவத்தையும் உணர்த்துவதோடு அவர்களைக் கட்டிப்போட்டிருக்கும் தளைகளைப் படிப்படியாகத் துண்டித்து விடுவதே மகளிர் தினத்தின் நோக்கமாகும்.

இத்தினத்திலே பெண்கள் அசமத்துவமான நிலைபற்றிப் பேசவும் எழுதவும் சிந்திக்கவும் கலந்துரையாடவும் அத்தியாவசியமான சில திட்டங்களைப்பற்றித் தீர்மானிக்கவும் உகந்த நாளாக மகளிர் தினத்தைப் பயன்படுத்திச் செயற்பட்டால் இவ்வையகமே மேன்மையுறுமன்றோ?

**“பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி**
**பேணிவளர்த்திடம் ஈசன்**
**மண்ணுக்குள்ளே சில மூடர் – நல்ல**
**மாதர் அறிவைக் கெடுத்தார்**

என மக்களுடைய தவறான அடக்கு முறையாலே வழிநடத்தனினாலேதான் பெண் பின்தங்கிய வளானாள் என உலகம் போற்றும் இம்மகாகவி சும்மாவா சொன்னான்.

கலைஇலக்கியவாதிகள், அறிஞர்கள், புலவர்கள் எனப் பல்லோருமே தமது நலம் கருதி மாத்திரமன்றியும் அன்றாட வாழ்வில் சகல துறைகளும் வளர்ச்சியடைந்து உன்னத நிலை காண வேண்டுமென்ற பேரார்வத்துடனும் உழைத்துவருகின்றனர். தாம் தமது சுற்றம் சமூகம் நாடு எனப் பலதரப்பினரும் வளர்ச்சியடைந்து மேன்னிலையடைய வேண்டுமென்ற குறிக்கோளும் ஆர்வமும் பலருக்கும் இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

இச்சந்தர்ப்பத்தில் மார்க்ஸ் ஏங்கெல்ஸின் “உன்னதமான ஒரு சமுதாயத்தைப்படைக்க வேண்டுமானால் பெண்கள் வெறும் உற்பத்திக் கருவிகளின் நிலையில் இருத்தப்பட்டிருப்பதை ஒழிக்க வேண்டும்” என்ற சமுதாய நலம் பொலிந்த அறிவார்ந்த வார்த்தைகளே. பெண்களைப்பற்றிய தெய்வீகப் பெருமைமிக்க ஆற்றலையும் சமூக உறவுகளிலும் உற்பத்திகளிலும் அவர்களுடைய அர்ப்பணிப்பையும் ஈடுபாட்டையும் சுட்டி நிற்கிறது.

பெண் அடிமை நிலையே உன்னதமான சமூதாயத் தோற்றமொன்றிற்குத் தடையாயிருந்த தென்பது ஏங்கெல்ஸின் ஆழமான வார்த்தைகளிலிருந்தே தெளிவாயிற்று.



- பத்மா சோமகாந்தன்

இதனை மேலும் புரிந்து கொள்வதற்காக வரலாற்றின் ஆரம்பகால நிலையைப் புரட்டிப் பார்த்தால் மக்கள் வாழ்வியலுக்கு அத்தியா வசியத் தேவையான உணவு உடை இருப்பிடம் என்பவற்றைத் தேடுவதிலும் சேகரிப்பதிலும் மிகுந்த பிரயாசையுடன் செயற்பட்டவர்கள் பெண்களே என்பது நன்கு விளங்கும்.

தாய்மைப்பண்பும் குழந்தைகளைப் பிரசவிக்கும்பேறும் பெண்களுக்கேயான மையால் குழந்தை பிரசவித்தபோது சிசுக் களுக்குத் தாய்ப்பால் போதாமையால் அவை பசியால் துடித்துக் கதறும்போது தாயின் மனம் கசியும். எவ்வித வாய்ப்பு வசதிகளும் அற்ற நிலையில் பெண்ணே மாற்றாகப் பசியைப் போக்க ஏதாவது தேடிக் கொடுத்து சிசுவின் பசியையும் அழுகையையும் நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அவளைக் கிளறிவிடும். இத்தகைய இடர்களையும் பொருட்டுப் பெண் தனது தேடலைக் கூர்மைப்படுத்துகிறாள். அதன்பலனாகவே ஆடுமாடுகளிலிருந்து பால் பெறவும் சுற்றாடலில் காணப்படும் காய்கனி, கிழங்குவகைகளைப் பயன்படுத்தவும் பழகிக் கொண்டாள்.

"அத்தியாவசிய தேவையே தேடலின் புதிய கண்டு பிடிப்புகள்" என்பதற்கமைய தேவையின் நோக்கம் வேண்டிச் சில புதிய புதிய விடயங்களைத் தேடிப் பயன்படுத்துவதில் முதற்காலடி பதித்தவள் பெண்ணே என்பதை மறக்க முடியாது.

தம் வாழ்வியலுக்கான சுற்றாடலில் எவ்வித வசதி வாய்ப்புகளோ அற்ற சூழ்நிலையில் பத்து மாதம் கருவிலே குழந்தையைச் சுமந்தெடுத்து தன்னையும் பாதுகாத்துக் குழந்தையையும் பெற்றெடுக்கவும் உணவு உடை இருப்பிடம் என அன்றாட மிக மிகத் தேவையான விடயங்களைப் பூர்த்திசெய்வதோடு பலவற்றைத் தேடவும் மிக மிகத் தேவையான விடயங்களைப் பூர்த்தி செய்வதோடு பலவற்றைத் தேடவும் தேட்டத்தில் எஞ்சியவற்றைச் சேகரிக்கவும் பதப்படுத்தவும் பாதுகாத்து வைத்து மானுட வாழ்வின் உன்னத நிலைக்கான அத்திவாரமாகத் தொடக்கிவைத்த பெருமை பெண்களையே சாரும் எனவரலாறு பேசும்.

காய், கனி. குருத்துக்கள் என்பவற்றைப் பறித்து உண்ணவும் அதற்கு வேண்டிய வகையிலே தடிகளையும் கொளுவி இழுக்கம் வளைவு தடிகளையும் மண்ணிலிலிருந்து கிழங்குகளைத் தோண்டி எடுக்கவும் வேண்டிய வகையில் பெண்ணே தொழிற்பட்டாள்

இப்படியே ஆண்கள் வேட்டையாடி, இறந்த மிருகங்கள் பிராணிகளின் தோல்களைக் கொண்டு உடை தயாரிக்கவும் மழை வெயிலிலிருந்து பாதகாப்பாகவும் கூரை தடுப்புகளாகவும் பயன்படுத்தியதோடு மரப்பட்டைகள், புல் நாணல் போன்றவற்றால் கூடை, தடுக்குகள் போன்றவற்றைப் பின்னிப் பயன்படுத்தினாள்.

இறந்த மிருகங்களின் பற்கள் எலும்புகள் போன்றவற்றைக் கோர்த்து மாலையாகவும் அணிகலன்களாகவும் உபயோகித்தனர். இப்படியே பெண்கள் தமது சூழலலைத் தமது வாழ்வியலின் தேவைகளுக்கேற்றபடி புதிய பதிய மார்க்கங்களைக் கண்டுபிடித்து ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டுத் தாயாண்மைச் சமுதாயமாக அரும்பி வளர்ந்து தலைமை யேற்றது.

ஆக்கும் சக்தி மிக்க பெண்ணினத் தோடிணைந்த ஆண்களும் படிப்படியாக வேட்டைக்குத் தேவையான அம்பு ஈட்டி கம்பு என்பவற்றை நாளடைவில் பயன்படுத்தி வேட்டையாடினர்.

ஆண்டுகள் உருண்டோட காலமாற்றம், இடமாற்றம். பருவமாற்றம் எனப்பல மாற்றங்கள் தலைதூக்கவும் தாயாண்மைச் சமுதாயம் மங்கி வலுவிழந்தது.

இந்நிலையின் கோரத்தையுணர்ந்த புரட்சிக்கவிஞன் பாரதி "அறிவு கொண்ட மனிதவுயிர்களை அடிமையாக்க முயல்பவர் பித்தராம்" என்ற காத்திரமான கருத்துக்களை பெண் அடிமைத்தனத்தை நீக்கி விடுதலை நோக்கிய எண்ணங்களைத் தனது அறிவார்ந்த ஆக்க பூர்வமான கருத்துக்களால் வெளிப்படுத்தி சமத்துவமும் சந்தோஷமும் மிக்க மகோன்னத மான சமுதாயத்தைக்கட்டியெழுப்ப விழைந் தான்.

பெண்விடுதலைபற்றிப் பாரதியின் கவிதைகளில் மாத்திரமன்றி நாளாந்த செயற்பாடுகளின் இடம்பெற்ற விடயத்தைக் குறிப்பிடும் பாவேந்தர் பாரதிதாசனும் ஒருநாளிரவு பாரதியாரின் வீட்டில் தங்கினார். அன்று பாரதியார் வீட்டில் அவர்தவிர மனைவிமக்கள் யாருமே இல்லாதவேளை பாரதிதாசன் அவ்விரவுப் பொழுதில் எழுத படிக்க இவரிடம் யோயிருக்கிறார். இரவில் பாலைக்

காய்ச்சிக் குடிக்க அடுப்பில் கடுதாசியைக் கொளுத்திப் பார்த்தார் கவிஞர். பாலில் சூடேற்ற முடியவில்லை. பாரதி தாசனும் பாலைக்காய்சி தாள்களைக் கொளுத்தி முயற்சித்தார். முடியவேயில்லை. இதனைக் கண்ணுற்ற பாரதியார், பாவேந்தரை நோக்கி "பெண்கள செய்யும் வேலை அனைத்தையும் ஆண்கள் செய்வது சுலபமில்லை, இவை மிகச் சாதாரணமென்று நாம் நினைத்திருக்கிறோம். இம்மாதிரி வேலைகளைப் பெண்கள் 4 மணியிலிருந்து 11மணிவரையில் செய்து நம்மைப் போஷிக்கிறார்கள். இதற்கிடையில் நாம் அவர்களை அடிக்கிறோம். அதட்டுகிறோம். நானுமே செல்லம்மாவை அடிக்கிறேன். அதெல்லாம் கூடாது. நாமும் உழைக்கிறோம். பெண்களும் உழைக்கிறார்கள். குடும்பம் நடக்கிறது" என்றார் பாரதியார்.

இச்சிந்தனை தந்த பாதிப்பினால்தான் மறுநாள் காலையே "பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா" என்று பாடத் தொடங்கினார் எனப் பாவேந்தர் குறிப்பிட்டுள்ளார்.

மகளிர் உரிமைபற்றியும் பெருமை பற்றியும் சிந்தித்துப் பேசியும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுமான மகளிர் தினமென்ற நந்நாள் உருவாகி ஒருநூற்றாண்டு கழிந்தும்கூட மகளிர் சமத்துவத்தை எட்டிவிட்டார்களா என்றால் இல்லையென்றே சொல்லலாம்.

பெண் இன்றும் நாலாவளமுமாக மதம், மரபு, கலாசாரம், பண்பாடு, என்ற நான்கு கதவுகளால் மூடி அடக்கியொடுக்கப்பட்டு அடிமைநிலையே எய்தியுள்ளாள்.

இதன் பலாபலனாகவே பெண்களுக் கெதிரான வன்முறைகள் பாலியல் தொல்லைகள், வரதட்சணைக் கொடு மைகள், பெண் சிசுக்கொலை எனப் பல்வேறு வன்முறைகள் இடம் பெற்றபடி யேயுள்ளன.

எதற்கும் நாம் சோர்ந்து சலித்துவிடாமல் வெகு உற்சாகத்தோடு ஆண் பெண் சமத்துவமான பயணத்திற்கு சமதர்மப் பூங்காவை உருவாக்க உழைக்க வேண்டும்

வெல்க மகளிர் தினம் !

○○○

# சர்வதேச கவிதைப் போட்டி ௨௦௨௦

மார்ச் 21ஆம் திகதி உலக கவிதை தினத்தை முன்னிட்டு 'வகவம்' ஸ்தாபகக்குழு தினக்குரல் பத்திரிகை அனுசரணையுடன், வகவம் ஸ்தாபகச் செயலாளர் கவின்கமல் நினைவாக நடத்தும் சர்வதேச / அகில இலங்கை கவிதைப் போட்டி

தலைப்பு: **"தரணியெல்லாம் எங்கள் தாயகமாம்"**

போட்டி விதிகள்(1) இன,மத,மொழி, நாடுசார் நல்லிணக்கத்தைப் பிரதிபலிப்பவையாக கவிதைகள் அமைந்திருத்தல் வேண்டும் (2) கவிதை 40 வரிகளுக்குக் குறையாமலும் 80வரிகளுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்(3) கவிதைகள் எவ்வித பாவினத்திலும் அமையலாம் (4) ஏற்கனவே நூல்களிலோ ஊடகங்களிலோ வெளிவராதவையாக கவிதைகள் அமைய வேண்டும் (5) கவிதைப்பிரதியில் பெயர் முகவரி என்பன குறிப்பிடப்படலாகா (6) வகவம் ஸ்தாபகக் குழு உறுப்பினர்கள் எவரும் போட்டியில் கலந்துகொள்ள முடியாது (7) கவிதைகளை அனுப்பிவைக்க வேண்டிய கடைசித்திகதி 11-04-2020 (8)வகவம் ஸ்தாபக் குழுவினரால் நியமிக்கப்படும் நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதாகும் (9) போட்டி முடிவுகளும் பரிசுக் கவிதைகளும் தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்(10) பரிசளிப்பு விழாபற்றி விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**முதலாம் பரிசு**

25,000 ரூபாய் பணப்பரிசும் விருதும் சான்றிதழும்.

**இரண்டாம் பரசு**

12,500 ரூபாய் பணப்பரிசும் விருதும் சான்றிதழும்.

**மூன்றாம் பரிசு**

7500 ரூபாய் பணப்பரிசும் விருதும் சான்றிதழும்

கவிதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**President, Vakavam Foundation Committee, 09.Saunders Court, Colombo -2, Sri Lanka.**

போட்டிக்கு அனுப்பப்படும் கவிதைகளுக்குள் சிறந்தவை நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டு நூலாக்கம் பெறும்.

**தாஸிம் அகமது – தலைவர்**
**கலைக்கமல் – பொதுச் செயலாளர்**
**எம்.எச்.எம். நூர்தீன் – பொருளாளர்**
**மற்றும் போட்டிக்குழு உறுப்பினர்கள்**

# வதையாகும் பகிடிவதை




பல்கலைக்கழகம் புகவேண்டு மென்பது பெரும்பாலான மாணவர்களின் கனவு. பல்கலைக்கழகக் கல்வி மனிதரை முழுமையாக்குகிறது என்பது அறிஞர்தம் கருத்து. இவ்விருசாராரையும் ஏமாற்றத்துக்குள்ளாக்குகிறது நம்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் இன்றைய நிலை. கல்விச் செயற்பாடுகள் கல்வியாளரின் கண்டனத்திற்குள்ளாவது ஒரு புறமிருக்க பகிடிவதை எனும் நச்சு மரம் நஞ்சு விதைகளைப் பரப்ப ஆரம்பித்திருப்பதே இங்கே கருத்திற் கொள்ளப்படுகிறது.

நான் இங்கிலாந்தில் கல்வி பயிலச் சென்றிருந்தபோது எம்மிற் சிலரை ரயில் நிலையத்தில் வைத்துப் பழையமாணவர் வரவேற்றதும் மாணவர்களுக்கெனவே ஒதுக்கப்பட்டிருந்த வாகனத்தில் அவர்கள் எம்மை வளாகத்துக்கு அழைத்துச் சென்றதோடு அவர்களுள் ஒருவர் எனது சூட்கேசைக் காவியபடி எனக்காக விடுதியில் ஒதுக்கப்பட்டிருந்த அறைக்கு என்னை அன்புடன் இட்டுச் சென்றதும் ஞாபகத்துக்கு வருகிறது. அந்த நாட்டிலிருந்து வந்த சமூகமயவாக்கம் என்ற எண்ணக்கரு எமது நாட்டில் இன்றைக்கு சமூகச் சீர்குலைவாக மாறியமை கவலையைத்தருகின்றது. ஆரம்பகாலத்தில் சமூகக் கட்டமைப்பில் பின்தங்கிய மாணவர்கள் வசதி படைத்த மாணவர்கட்கு எதிராகக் காட்டும் பாதகமற்ற இயல்பான எதிர்ப்புணர்ச்சி என அதைப் பொறுத்துக் கொண்டோம். வன்முறை தலை தூக்கிய போதெல்லாம் அப்பாவி மாணவரும் குழுவாக இயங்கும்போது அட்டகாசம் செய்வதை Mob mentality என்று சகித்துக் கொண்டோம். சிறிது காலத்திலேயே எதிர்க்குழுக்களிடையே ஏற்பட்ட தோழமை உணர்வு காரணமாக முறையற்ற 'வரவேற்பு' மன நிறைவையும் தந்தது. எனினும் காலப்போக்கில் மாணவர்கள் அசுரர்களாக மாறியதையும் சில சமயங்களில் கொலையாளிகளாகக்கூட மாறியதையும் அதனால் மாணவர்களிற் கணிசமானவர்கள் பல்கலைக்கழகக் கல்வியைத் துறந்ததையும் இன்னும் சிலர் தற்கொலை முயற்சியில் ஈடு பட்டதையும் கண்டும் பல்கலைக்கழக நிர்வாகம் கண்களை இறுக மூடிக்கொண்டிருந்ததயையும் கண்டோம். ஆட்சியாளர், ' பகிடிவதைக்கெதிராக் கடுமையான சட்டம் இயற்றியிருக்கிறோம் இனி அசம்பாவிதம் எதுவும் நடக்காது' என்றனர். எனினும் ஆக்க பூர்வமாக எதுவும் நடைபெறவில்லை. போதாததற்கு அரசியல்வாதிகளிற் சிலர் எரியும் நெருப்பில் எண்ணெய்யை ஊற்றியதோடு மாணவர்களின் சதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும் என மாணவர்கட்காக வக்காலத்தும் வாங்கினர். நாளாக நாளாக பல்கலைக்கழக வளாகங்களில் மட்டுமே இடம்பெற்ற பகிடிவதைகள் மாணவர்கள் பல்கலைக்கழகம் புக முனன்னரே அவர்களது இல்லம் நோக்கி நகர்த்தப்பட்டு அவர்கள் வீதிகளுக்கு இழுத்து வரப்பட்டனர். தட்டிக்கேட்க முயன்றவர்களும் தண்டனைக் குள்ளாகினர்.

தற்போதைய கட்டுப்பாடற்ற சமூக வலைத் தளங்களின் ஊடுருவலினால் நிலைமை இன்னும் மோசமாகிறது. புனிதமானவையாகக் கருதப்படும் அந்தரங்கங்கள் சந்திக்கிழுக்கப்படும் அவலமும் மாணவர்கள் சிலரினால் இளம்பெண்கள் குறிவைக்கப்பட்டு அவமானத்துக்குள்ளாகி தற்கொலையைத் தஞ்சமடையத் தூண்டப்படுவதும் மன வேதனையைத் தருவதாக இருக்கிறது.

இனியும் காலந்தாழ்த்தாது மாணவர்கள் என்ற போர்வையில் மனிதத்தைக் குழிதோண்டிப் புதைப்பவர்கள் ஈவிரக்கமற்ற முறையில் தண்டிக்கப்பட வேண்டும் உளவள ஆலோசகர்களாக விளங்கும் ஆசிரியர்களே பயமுறுத்தலுக்குள்ளாகும் நிலையில் அரசும் பல்கலைக் கழகச் சமூகத்தினரும் அரசியல்வாதிகளும் இணைந்து மாணவப் பயங்கரவாதத்திற் கெதிராக உறுதியான அச்சமூட்டத்தக்க நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும்.



வே.தில்லைநாதன்

○○○

# நவீன நுகர்ச்சிச் சமூகமும் இலக்கியமும்



சபா ஜெயராசா

சமூக மாற்றங்கள் நிகழும் பொழுது, முன்னைய சமூகத்தின் இலக்கிய மொழியும் கலை மொழியும் நெருக்கீடுகளையும், அறைகூவல்களையும் எதிர்நோக்கத் தொடங்குகின்றன. அந்நிலையில் புதிய சொல்லாடல்களும், எடுத்தியம்பல்முறைகளும் மேற்கிளம்புகின்றன. அவற்றையும் கடந்து புதிய இலக்கிய வகைமைகளும், புதிய குறியீட்டு முறைகளும், நீட்சி கொள்ளத் தொடங்குகின்றன.

நிலமானிய சமூகத்தின் உதிர்வோடும், கைத் தொழிற் சமூகத்தின் உருவாக்கத்தோடும், மேற்குறித்த மாற்றங்கள் உருப்பெற்றமையை வரலாற்றிலே காணமுடியும்.

நிலமானிய சமூகத்துக்குரிய காவிய வடிவமும், செய்யுள் வடிவமும் உதிர்வுகளை அனுபவிக்கத் தொடங்கின. அவை கைத்தொழில் சமூகத்திலே நீடித்திருந்தாலும் தொல்பொருள் அடையாளத்தைப் பெற்றன. அச்சுப்பொறியின் வளர்ச்சியோடும் புதிய சமூகத்தின் உருவாக்கத் தோடும் உரைநடை சார்ந்த இலக்கிய வகைமைகள் மேலெழுந்தன.

நிலமானிய சமூகத்தின் இலக்கியங்களிலே மேலோங்கியிருந்த வருணனைமுறைகளும் பூவிரிப்பு (FLOWERY LANGUAGE ) மொழியும் காலாவதியாகத் தொடங்கின. இலக்கிய மொழியிலும் எடுத்தியம்பு முறையிலும் பெயர்ச்சி நிகழ்த்தப்படுதல் தவிர்க்க முடியாததாயிற்று புதிய சமூகத்தின் ஓவியம், சிற்பம் கட்டட வடிவமைப்பு முதலியவற்றில், பழைய அதீத அலங்கார முறைமைகளும் கைவிடப்பட்டன.

நிலமானிய சமூகத்தின் எழுத்துவழி இலக்கியங்கள், சமூக மேலாதிக்கத்தை நேரடியாகச் சுமந்திருந்தன. அரசரும் மேலாதிக்க வகுப்பினருமே பாட்டுடைத் தலைவராயினர். காவிய இலக்கணம் அதனைத் தெளிவாக வலியுறுத்தியது. சமூக மேலாதிக்கத்தை நிராகரித்துப் பக்தி இலக்கியங்கள் தோற்றம் பெற்றாலும், அவை சமூக நியமங்களோடும் விழுமியங்களோடும் பெருமளவிற் கட்டப்பட்டிருந்தன. முன்னைய சமூக நியமங்களை நிராகரித்தல் சிறுகதை நாவல் முதலாம் மாற்று இலக்கிய வடிவங்களிலேதான் வெளியரும்பத் தொடங்கின.

சமூக மாற்றங்கள் இலக்கிய மொழியிலும் (LITERARY LANGUAGE) தாக்கங்களை ஏற்படுத்தின. ‘இலக்கிய மொழி’ என்பது தனித்துவமான இயல்புகளைக் கொண்டது. கால மாற்றத்துடன் கூறவந்த பொருளின் உள்ளடக்கம் மாற்றமடைய, இயம்பல் முறையிலும் மொழியிலும் மாற்றம் நிகழ்ந்தன.

எடுத்துரைப்பில் இலக்கிய ஆசிரியர் தனக்குரிய தனித்துவமான எழுத்துநடையைப் பயன்படுத்தும் பொழுது, அதற்கு ஏற்றவாறு மொழியை வளைத்துப் பிடிக்க, அது, பொது மொழியிலிருந்து விலகும் தனித்துவங்களுடன் நிமிரும். ஆனால் அந்த விலகல் பொது மொழியில் இருந்து முற்றிலும் வேறுபட்ட விலகலாக அமையமாட்டாது.

அறிவும் தகவலும் பொங்கிப் பிரவாகம் எடுக்கும் சமகாலச் சூழலில், எழுத்து முயற்சிகளும் இலக்கிய மொழியும் பல்வேறு அறைகூவல்களுக்கு முகம் கொடுக்கத் தொடங்கியுள்ளன.

அறிவுப் பெருக்கத்திற்கு இணையான தரமான உரையாடல்களை மேற்கொள்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்ற கருத்து உலகச் சூழலில் முன்வைக்கப்படுகின்றது. அதனை ஒரு முரண்குறிப்பாகவும் (IRONY) ஆய்வாளர் கூறுகின்றனர். உலகச் சூழல் ஒருபுறமிருக்க தமிழகச் சூழலில் அந்த முரண் குறிப்பு மேலும் ஆழமாகப் பதிந்துள்ளது.

கனதியான இலக்கியக் கருத்தாடல் செய்வோரின் எண்ணிக்கையைக் காட்டிலும்

பழைய சமூக அமைப்பில் தோற்றம் பெற்ற காவியங்களை அலசும் தேய்வியம்பல் (CLICHE) செய்வோரின் எண்ணிக்கையே மேலோங்கியுள்ளது. தமிழகத்தின் நடப்பியல் வாழ்க்கையோடும் சமூக அவலங்களோடும், சுரண்டல் அலகுகளோடும் தொடர்புபடுத்திப் பனுவல்களை மீள வாசிப்போர் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. போலியான இலக்கியத் திரையில் நடப்பு வாழ்க்கையின் அவலங்களை மூடிமறைப்போரின் எண்ணிக்கையே மேலோங்கியுள்ளது. வர்த்தகத் திரைப்படங்கள் தமிழகத்தின் போலி வாழ்க்கைக்கு மேலும் வளமூட்டுகின்றன.

பல்தேசிய நிறுவனங்களின் தென்படாக் கரங்கள் சமூகத்தை இயக்கும் நிலையில் 'நுகர்ச்சி' என்ற செயற்பாடு அவர்களுக்குச் சாதகமான முறையில் வடிவமைக்கப் பட்டிருக்கிறது. அவர்களின் கரங்களில் உள்ள தொடர்பு சாதனங்கள் நுகர்ச்சி விரிவாக்கத்தைத் தொடர்ந்து மேற்கொண்ட வண்ணமுள்ளன.

தமிழகத்து வர்த்தக இதழ்கள் சினிமா கலவை இதழ்களாக நிலைமாற்றம் பெறுதலும் குறிப்பிட்ட எழுத்தாளர்களிடத்து நுகர்ச்சிவாதம் செல்வாக்குச் செலுத்துதலும் நிகழத்தொடங்கியுள்ளன.

நுகர்ச்சி என்ற செயற்பாடு பல்வேறு உளவியற் பரிணாமங்களைக் கொண்டது. சமூக நிலையில் நுகர்ச்சிக்கும் சமூக அந்தஸ்த்துக்கும் நேர்த் தொடர்புகள் உள்ளன. இலக்கிய நுகர்ச்சி என்பது சமூக அடுக்கமைவுடன் இணைந்த வகையில் கூடுதலான உளவியற் பரிமாணாங்களைச் சுமந்து நிற்கும் கலைச் செயற்பாடாக மாற்றம் பெற்று வருகிறது.

கலை இலக்கிய நுகர்ச்சியில் 'உடனடி இன்பத்துக்குச்' சுவையூட்டும் செயற்பாடுகளே, பல்தேசிய நிறுவனங்களுக்கும் அவர்களின் கரங்களில் உள்ள ஊடகங்களுக்கும் அனுகூலமான நிலையைக் கொடுக்கின்றன. அதற்கு ஏற்றவாறான படைப்புகளுக்கே அவை முன்னுரிமை கொடுத்து உற்சாகப்படுத்து கின்றன. தெளிவான சமூக நோக்கும் ஆழ்ந்த அழகியல் வீச்சும் கொண்ட எழுத்தாளர்களுக்கு வர்த்தக ஊடகங்கள் ஒரு விதத்தில் சவாலாக அமைகின்றன.

வர்த்தக இதழ்களில் உடனடி இன்ப மூட்டலும் திரிபுபடுத்தப்பட்ட சமூக நோக்கும் ஒன்றிணைந்து கொள்கின்றன. வர்த்தக சஞ்சிகைகளில் வரும் பெரும்பாலான புனைவுகளிலும், தொலைக்காட்சித் தொடர்களிலும் மலின மன்றுகளிலும் வர்த்தகத் திரைப்படங்களிலும் அத்தகைய இணைப்பைக் கண்டு கொள்ளலாம்.

அதீத நுகர்ச்சிக் கோலங்களின் வளர்ச்சி கலை நிகழ்ச்சியாளரின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்த அளவுக்கு கனதியான படைப்புகளை மேற்கொள்வோரின் எண்ணிக் கையை உயர்த்தவில்லை.

"நுகர்வோர் வாதம்' என்பது பல்தேசிய நிறுவனங்களின் மிகை இலாப மீட்டலுக்குச் சாதகமான ஓர் எண்ணக்கருவாகும். சமகாலப் பொருளாதார முறைமையும், அதனோடு இணைந்த சமூக அமைப்பும் நுகர்வோர் வாதத்துக்கு வலுவூட்டிய வண்ணமுள்ளன.

அவற்றின் பின்புலத்தில், கலை இலக்கியங்கள் 'விற்பனை பண்டங்கள்' என்ற நிலைமாற்றத்தைப் பெறத் தொடங்கியுள்ளன. அத்தகைய வளர்ச்சி அர்ப்பணிப்புள்ள எழுத்தாளர்களுக்கு ஒருவிதமான கூச்சத்தையும் அருவருப்பினையும் தோற்றுவித்து விடுகின்றது.

நுகர்ச்சிச் சமூகம், உளவியல் நிலையில் மனித மனங்களை வீழ்தரத்துக்குத் (DEGRADE) தள்ளி விடுகின்றது. அவலமும் அங்கலாய்ப்பும் தூண்டிவிடப்படுகின்றன. அதேவேளை, அவற்றை இலக்கிய பொருள்களாக்கும் முயற்சிகள் துருவப் பட்டு நிற்கின்றன. நுகர்ச்சி வாதத்துக்கு அணிசெய்யும் படைப்புகள் ஒரு துருவமாகவும், மனிதம் சரிதலும், மீள்தலுமான படைப்புக்கள் எதிர் துருவமாகவும் மேலெழுகின்றன.

சிதறல் ஓவியங்களையும், நலிவுண்ட சிற்பங்களும் அபத்த அரங்கும் மனித அவலங்களைக் கலை வெளிக்குக் கொண்டுவந்தன, கட்டவிழ்ந்து மேலெழும் கவிதைகளும் மாற்றுப் புனைவுகளும், மனிதம் என்பதை நீள வெளிச்சப்படுத்தி வருகின்றன.

நவீன பொருண்மிய உலகும், நுகர்ச்சியின் பன்முக விரிவாக்கலும் மூலவளங்களை வகைதொகையின்றிச் சுரண்டலுக்கு உள்ளாக்குதல் குறிப்பிடத்தக்கது, புவியியற் சூழலில் நிகழும் அவலங்களை ஆக்க வெளிக்குக் கொண்டுவரும் 'சூழ்கை (ECO) இலக்கியம்' சமகால அருட்டலில் விரிவு பெறத் தொடங்கியுள்ளது.

மரபுவழி இலக்கியங்களில் சுழலும் இயற்கைத் தோற்றங்களும் நகைப்புக் குரியவையாகப் புனையப் பெற்றன. சூழ்கை இலக்கியத்தில் அவற்றில் ஊடுருவும் அவலங்களும் மீட்பும், ஊடுதலையீடுகளும் (INTERVENTION) நிகழ்த்தப்படுகின்றன.

சமகால உலகின் பொருண்மிய பெருந் தளத்தில் நிகழும் மேலாதிக்கத்தோடு இனத்துவம், மதத்த்துவம் சார்ந்த அதிகார அலகுகளும் நீட்சி கொண்டுவருகின்றன. மொழி மேலாதிக்கமும், பால்நிலை மேலாதிக்கமும், விரிவு பெற்று வருகின்றன. அவற்றின் நீட்சியாக அமெரிக்க கருமை இனப் பெண்ணிய எழுத்தாளர்கள் இரட்டை நிலை மேலாதிக்கம் பற்றித் தமது ஆக்கங்களிலே நடப்பியல்பை புனைந்துவருகின்றனர்.

நிறத்துவ நிலையிலும் பால் நிலையிலும் அவர்கள் ஒடுக்கப்படும் இரட்டை நிலை இலக்கிய வெளிக்குக் கொண்டு வரப்படுகின்றது. அதற்கு எதிரிடையாகப் பெண்களைப் பாலியல் நுகர்ச்சிப் பொருளாக விகாரப்படுத்தப்படும் இலக்கியங்கள் நுகர்ச்சிச் சமூகத்தில் மேற்கிளம்பி வருகின்றன.

இந்தியா மற்றும் இலங்கையில் நான்கு அடுக்கு நிலைகளில் பெண்கள் ஒடுக்கப்படுதல் நடப்பு நிலை வரமாகின்றது. வறுமைநிலை, சாதிய நிலை, மொழியோடும் சமயத்தோடும் தொடர்புடைய இனத்துவநிலை, பால்நிலை என்றவாறு ஒடுக்குமுறை அலகுகள் நீட்சி கொண்டுள்ளன.

உலகமயமாக்கலின் விரிவும் மனித நகர்வுகளும், புலச்சிதறலும், பொருள் உற்பத்தியிலும் சேவைகளிலும் இலாப நோக்கில் உருவாக்கப்படும் பலவகைமைகளும் , பன்மைத்துவத்தை மேலும் விசைகொள்ளச் செய்கின்றன.

அந்நிலையில் இலக்கியச் சித்தரிப்புகளும், பாத்திரப் படைப்புகளும் முன்னர் தரிசித்திராத அளவுக்குப் பன்மை நிலைகளுடன் கூர்ப்புப் பெற்று வருகின்றன. அந்நிலையில் கூர்ந்த உலக நோக்கு ஒருபுறத்திலும் திரிபுபடுத்தப்பட்ட உலக நோக்கு எதிர்புறத்திலுமாக பரவி நிற்கின்றன.

அதேவேளை சமகால வாழ்க்கையின் சிக்கல்களை ஓர் உளவியல் தோற்றப்பாடாக மட்டும் காட்டுதல் ஒற்றைப் பரிமாணத் தேடலாகின்றது.

நவீன நுகர்ச்சி சமூகத்தில் நிகழும் இலக்கியச் செயற்பாடுகள் பன்முகமானவை, தரங்குறைந்தவையும், பாராட்டைப் பெறுமாறு விளம்பரங்களால் தூக்கி விடப்படுகின்றன.

○○○

## சின்னஞ் சிறு கவிதை

(1)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு.
அறையில்-
தனித்துக் கிடந்தவன்
வானொலி கேட்டான்!

(2)

கணவன் வெளிநாட்டில்.
வீட்டில்-
தனித்தே இருந்தவள்
வானொலி கேட்டாள்!

(3)

நடுநிசி வானொலி நிகழ்ச்சி!
தொடர்ந்தும்-
தொடர்பில் இருந்தனர்
அவளும் அறிவிப்பாளனும்!

(4)

இறுதியில்-
அவளுக்காகவும்,அவனுக்காகவும்
கணவனுக் காகவும்
மனைவி கேட்ட
பாடல் மிதந்தது!

(5)

வெளிநாட்டு அறையில்-
தூக்கில் தொங்கிய சடலம்
அசைந்தது!

**பாலமுனை பாறூக்**



சிறுகதை

ஆரூரான்

மெல்பேர்ண் உச்சநீதிமன்றத்தின் முன்னால் நிறைந்து வழிந்தது மக்கள்கூட்டம். இன்று எடுத்துக்கொள்ள இருக்கும் வழக்கின் தீர்ப்பு வழங்கும் கடைசிநாள். தமிழ் ஊடகவியாளர்களும் ஆங்கில ஊடகவியலாளர்களும்கூட வெளியில் நின்றிருந்தார்கள்.

வீரபத்திரர் சைவசமய ஆலயத்தின் வழக்கு இன்று பதினொரு உயர்நீதிபதிகளும் இந்துபரிபாலனசபைக் குருக்கள் பதினந்துபேரும் தனி அறையில்கூடி வழக்கின் இறுதித் தீர்விற்கான ஆலோசனைகளை நடத்தி முடித்து நீதிமன்றுமுன் வந்தார்கள்.

நீதிபதி:தொடங்கினார்

திரு அன்பழகன் உங்கள் வழக்கை நீதிபதிகளும், சமயகுருமாரும் சேர்ந்து திறம்பட ஆராய்ந்துவிட்டோம். இந்தவழக்கின் இறுதிக்கட்டம். நீங்கள் இப்போ உங்களின் கடைசி வாதத்தை முன்வைக்கலாம்.

“கனம் நீதிபதி அவர்களே”அன்பழகன் பேசத்தொடங்கியதும் அவனின் எண்ணங்கள் மூன்று வருடங்கள் பின்னோக்கி ஓடிக்கொண்டிருந்தன.

இந்த மானிலத்தில் பலகோவில்கள் ஒவ்வொரு ஊரிலும் தோற்றம்பெற்றுக் கொண்டு வருவதோடு பக்தர்களிடையேயும் விரோதங்களும் குரோதங்களும் தலைவிரித்துக்கொண்டிருந்தபோதுதான் கதிரவேலு மாஸ்ரர் எங்களை அழைத்து

“தம்பியள் நரிவரன் பகுதியில எனக்கு ஒரு காணித்துண்டு இருக்கு அதில ஒருகோவில் கட்டுவம்”

”கோவிலோ.... ஐயோ வேண்டாம்.”

இந்தக் கோவில் வித்தியாசம். எந்த நாட்டிலும் எந்தமொழியிலும் இப்படி இருக்காது.

அப்படி என்ன வித்தியாசம்? இது தமிழ்கோவில் இறைவனின் உருவம் இருக்காது. ஒருகல்லு மட்டும்தான் இருக்கும். தமிழில்தான் பூசைநடைபெறும். தேவாரம், திருவாசகம், திருப்பாவை, திருப்பல்லாண்டு எல்லாம் மிகச் சிறப்பாகப்பாடவேண்டும். அதற்காக நம் ஐந்துபேரும் சிறந்த பயிற்சி எடுக்கவேண்டும். சைவமும் தமிழும்தான் நிலையானதாகஇருக்கவேண்டும். எந்தக்காலத்திலும் இந்துத்தத்துவார்த்தம் மேலோங்கக்கூடாது. இது ஒரு காவல் தெய்வம்என்பது மட்டுமே மக்களின் மனதில் பதியவேண்டும்.



கதிரவேலு ஐயா படித்தவர். இந்த நாட்டுக்கு வந்து முப்பது வருடங் களாச்சு. அவருடைய கருத்தை நாங்கள் ஐந்து பேரும் கேட்டாலும் அவர் சொல்லும் இந்தவழிபாட்டு முறை நடைமுறைக்கு சரிவரக்கூடிய காலம் இல்லை என்று எமது மற்ற மூன்று நண்பர்களும் இடையிடையே மனம்மாறிக்கொண்டார்கள். நான் ஏதோ வலுவான கருத்துக்களை கதிரவேலு ஐயா சொல்லும்போதெல்லாம் அவருக்குத் தலையாட்டி வந்தேன்.

என்மனைவியின் தாயார் எமது பேச்சுக் களைக் கேட்டு என்மனைவியோடு தர்க்கம் புரியத் தொடங்கினார். மனைவி அதைவாங்கி என்மீது பாய்ந்துகொண்டாலும் கதிரவேலுஐயாஅடிக்கும் ஒவ்வொரு நியாயமும் தேவையானதாக இருந்தது. என்னமோ என் மனைவியும் மறைமுகமாகஆதரிக்கத் தொடங்கினாள்.

நானும் எனது நண்பனும் கதிரவேலு ஐயாவும் அவர்களின் வளவில் இருந்த கொட்டகையில் தமிழ்ஆலயம்ஆரம்பித்தோம்.

கிடங்குகிண்டும்போது வந்த ஒருஅடி உயரமான கல்லையே சாமியாக வைத்து விட்டோம்.

வாங்கோ....வாங்கோ...

பரமேஸ்வரி ஆச்சிதான் முதல் பூசையை ஆரம்பித்தார். அவர் தனித்தமிழில் வீரபத்திரர் கருங்கல்லுக்கு தண்ணீரால் கழுவி பட்டுத்துண்டைக்கட்டி பூக்களை மட்டும் போட்டுத் தமிழில் வேண்டுதல்களைச்செய்தார். ஆயிரம் தெய்வங்களைக் கூப்பிட்டார். சிலர் கொண்டுவந்த பண்டங்களை வைத்தார். தேவாரம், திருவாசகம் பாடப்பணித்தார். தானேகொண்டுவந்த புத்தகத்தைத் திறந்து பதிகங்களை சொல்லிக்கொடுத்தார்.

“அடே தம்பி இதுதான் என்கனவு இங்கிருந்து தான் தமிழ் ஆரம்பிக்கிறது. தமிழைக் கற்பிப்பதற்கு இது ஒருவழியாக இருக்கிறது.

தமிழ் கற்பிக்கும் முறையை மாற்றவேண்டும் இதில் அழகியல் இருக்கவேண்டும்

ஆங்கிலம் உள்ள நாட்டில் தமிழைக் கற்கும் பிள்ளைகள் எளிதில் புரிதலை உண்டு பண்ணக்கூடியவிதமாக ஆடல்பாடல் அலங்கா ரங்களுடன் ஆரம்பிப்போம்.

தமிழ் ஆலயத்தின் வளர்ச்சி நாளும் பொழுதுமாக வளர்ந்துகொண்டுவந்தது. பரமேஸ்வரி ஆச்சி பழைய தமிழ் ஆசிரியை என்பதால் கோவிலுக்குவரும் பக்தர்களின் குறைநிறைகளை எல்லாம் கேட்டு அவர்களுக்கு தமிழிலே வேண்டுதல் செய்து பூசைகள்போட்டார். இந்தமுறை இதுவரையும் எங்குமே நடக்காத காரியம். இளம்தலைமுறையினரை மிகவும் கவர்ந்துபோகவே பக்தர் கூட்டம் நிறைந்து வந்தார்கள்.

பலபக்தர்கள் இந்த ஆலயத்தில் வேண்டு தல் செய்ததால் தங்களின் குறைகள் வேண்டு தல்கள் நிறைவேறியதாக நம்பினார்கள்.

ஆலயம் வரும் பக்தர்களின் பிள்ளை களுக்கு தமிழ்வளர்க்கவேண்டும் என்பதற் காக வாசிப்புப் பழக்கத்தை கதிரவேலு ஐயா ஆரம்பித்தார். இதனால் தமிழ்வளர்ச்சியில் கால்ஊன்றத் தொடங்கினர் இளையோர்.

தமிழ் ஆலயம் வரும் பலரும் சங்கீத வகுப் புக்கள் போவதைக்கண்டு ஒரு தமிழிசையில் தேர்ச்சி பெற்ற சங்கீத ஆசிரியையை நியமித்து சங்கீதத்தின் மூலமும் தமிழ் வளர்க்கத் தொடங்கினார்கள். மக்கள் தமிழ் ஆலயத்தின் தேவையை உணர்ந்து தமிழ் ஆலயத்தை வேறு இடத்திற்கு இடம்மாற்ற முற்பட்டபோது இந்த நேரத்தில்தான் ஒருநிறுவனத்தின் தொழிலதிபர் இந்தமுறை மிகவும் நன்றாக இருக்கின்றது. இதனை திறம்பட நடாத்த தான் உதவிகள் செய்வதாக முன்வந்தார். அவரின் நோக்கம் முதலில் பரந்த கண்னோட்டம் என்றுதான் நான் நினைத்திருந்தேன். கதிரவேலு ஐயா தொழிலதிபரோடு பேசியபோது அவர் பணத்தில் முதல்போட்டு ஆலயத்தைப் பெரிதாக்கி எம்மிடம் தருவதாகவும்நாம் அவருக்குக் கீழேபணிபுரியவேண்டும் என்ற நிபந்தனையில் நாம் உடன்படவேண்டுமாம்.

இதனைநாம் மறுத்தபோதுதான் அந்தத் கட்டிடத்தொழிலதிபர் இங்கிருக்கும் எல்லா இந்துக்கோயில்களின் நிர்வாகத்தினரைத் தூண்டிவிட்டு வழக்கைப்போட்டு எம்மை குற்றவாளிக் கூண்டில் ஏற்றிவிட்டார்.

”ஹலோ அன்பழகன் ....நான் என்ன கேட்கிறன்”

நீதிபதி அவர்கள் என்னை சுயநினைவுக்குக் கொண்டுவந்தார்கள்.

“சொல்லுங்கள் நீங்கள் மௌனமாக இருந்தால்”

“கனம் நீதிபதி அவர்களே நாம் இந்தநாட்டின் சட்டதிட்டத்திற்குக் கட்டுப்பட்டு எமதுமொழி, சமயம், கலை, கலாச்சாரத்தைப்பேணவும், எமது

சிறார்களை நல்லபிரஜைகளாக மாற்றவும்தான் தமிழ் ஆலயத்தை நிறுவினோம். எம்மொழியில் கடவுளை வணங்கவும், வழிபடவும் எமக்கு உரிமை உண்டு. எமது மொழிக்கு என்றுகலையும், இசையும், வழிபாட்டுக் கோட்பாடுகளும் உண்டு.

நாம் இங்கு வந்தபோது எதையும் எடுத்துக்கொண்டு வரவில்லை இங்குவந்தநாமும் முகமழிந்து அடையாளம் அழிந்துமுகம் தெரியாத இனமாகமாறப்போகிறோமே என்றுதான் நினைத்தோம் ஆனால் இந்த நாடும் நாட்டுமக்களும்எம்மை வரவேற்று எல்லா வசதிகளும் செய்துதந்தது.

நூறுவருடங்களுக்குமுன் புலம் பெயர்ந்து பலநாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்ட தமிழர்களின்னும் அந்த நாடுகளில் வாழ்கிறார்கள்.தமிழ்மொழியையும் கலாச்சாரத்தையும் மறந்து அடையாளம் இன்றி வாழ்கின்றார்கள். அதுபோல் நடந்துவிடக்கூடாது என்ற முதன்மையான காரணம்தானெமது தமிழ் ஆலயம் உருவாக்கத்திற்குக்காரணம்.

கடவுளின் பாசை என்று சமஸ்கிருதத்தையும், சங்கீதம் பயிற்றுவிப்போர் தெலுங்குக் கீர்த்தனை என்று தெலுங்கையும் பரதநாட்டியம் பயிற்றுவிப்போர் மற்றைய ஆடல்கலைகளையும் வளர்க்கும்போது, எமது தமிழ்மொழி சிதைந்து போகிறது. இந்த நாகரீக உலகில் வேகமாக மற்றையமொழிகள் தமிழுக்குள் கலந்து எமது காதால்கேட்கமுடியாது இருக்கிறது. மொழிமட்டுமல்ல கலைகலாச்சார விழுமியங்கள் உடைபாவனைகள் ஏன் நாம் உண்ணும் சாப்பாட்டுமுறைகூட சிதைவடைந்து காலத்தால் காணாமல் போய்க்கொண்டிருக்கும் இந்தவேளையில்தான் நாம் இதை மாற்றவும், வழிநடத்தவும் எமக்கு உரிமை இருக்கிறது. எமது தமிழ் ஆலயத்தில் எந்தவியாபார நோக்கமோ, மூடத்தனமான சாஸ்திர சம்பிரதாயமோ இல்லை. எமது தமிழ் மொழியிலே கடவுளோடு பேசுகிறோம், தேவார திருவாசகம் பாடுகிறோம்.

எமது தமிழ் ஆலயத்தின்மீது மற்றைய கோவில்காரர்களைத் தூண்டிவிட்டு இவ் வழக்கைப்பதிவாக்கி இருக்கின்றார்கள். எமது தமிழ் மொழியைவளர்க்கவும் கலைகளைப் பேணவும் உரிமைகளைப் பாதுகாக்கவும் இந்த அரசாங்கம் ஊக்கமும், பண உதவியும் செய்யும்போது எமது தமிழ் ஆலயம் மட்டும் எப்படி சட்டவிரோதமாகும்?

இதை மனதில் வைத்து சிறந்த தீர்ப்பை வழங்கும்படி தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் ஆலயத்தின் நோக்கம் தமிழை வளர்க்கவும் தமிழிலேயே கடவுளுடன் பேசி பூசைசெய்யவும் கலாச்சாரத்தைப் பேணவுமே நிறுவப்பட்டது என்ற வாதத்தை முன்வைத்த அன்பழகனை அவர் நிரபராதி என்று தீர்ப்புவழங்கி அவருக்கு ஏற்பட்ட நட்டஈட்டை வழங்கவேண்டும் என்றும் உத்தரவிடுகிறேன்.

வழக்கின் தீர்ப்பு முடிந்து வழக்காடு மன்றதைவிட்டு வெளியேவந்தபோது

வானத்தில் இருள் இன்றியே பெரும் தூறல்கள் நிலத்தில் வீழ்ந்துகொண்டிருந்தன.

❍❍❍

## பகிர்வோம்....



### ஈழமும் தமிழும்

***சி.வை.தாமோதரம்பிள்ளை*** மறைந்து 18 ஆண்டுகளின் பின்னர் 1918ஆம் ஆண்டு **E. Marsden** என்பவரால் ***ஏழாம் வாசக புஸ்தகம்*** இந்தியாவிலே வெளியிடப்பெற்றது. இந் நூலின் ஆசிரியராக தம்மோடு தாமோதரம் பிள்ளையையும் **Marsden** குறிப்பிட்டுள்ளார். இந்தப் புத்தகத்திலிருந்து ஒரு பகுதி இங்கு தரப்பெற்றுள்ளது.

*அச்சுயந்திரசாலைகள் ஏற்படுவதற்குமுன் இத்தேசத்தில் புஸ்தகங்களெல்லாம் பனையோலைகளிலே எழுதப்பெற்று வந்தன. அவற்றிக்குப் பனையோலைச் சுவடிகள் என்றும் ஏட்டுப்பிரதிகளென்றும் பெயர். இக்காலத்திலும் கிராமங்களிலுள்ள பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் ஓலைச் சுவடிகளை வைத்துக்கொண்டு பாடம் படிப்பதை நாம் பார்க்கலாம். பனையோலைச் சுவடிகள் வெகுகாலம் வரையில் அழியாமல் நல்ல நிலைமையில் இருக்கும். இந்தக் காரணம் பற்றியே தேவாலயங்களிலும் பெரிய கடைகளிலும் பனையோலைச் சுவடிகளிலே கணக்குகளை எழுதுகிறார்கள். பனையோலையில் எழுதுவதற்கு ஏற்ற கருவிக்கு எழுத்தாணியென்று பெயர்.*




# தப்பித்துக்கொள்ளும் பாலியல் குற்றவாளிகள்



ச. முருகானந்தன்

பாலியல் துஷ்பிரயோகங்களும் பாலியல் வன்முறைகளும் பல நாடுகளில் ஏறுமுகமாக உள்ளமை போன்று எமது நாட்டிலும் அதிகரித்துக் காணப்படுகின்றன. மூன்றே வயதான பச்சிளம் குழந்தை முதல் 60 வயதுப் பாட்டிவரை பாலியல் பலாத்காரங்களுக்குள்ளான செய்திகளை கடந்த சில வருடங்களாக பத்திரிகைகளில் பார்க்கின்றோம். இன்னும் வெளித்தெரியாத இன்னும் பல வன்முறை கள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. போர்க்காலத்தில் அதிகமாக இருந்த வன்கொடுமைகள் இன்றும் நாடளாவிய ரீதியில் தொடர்ந்த வண்ணமே இருப்பது சாபக்கேடு! இவற்றில் சில பாலியல் வன்முறைகளின் பின்னர் பெண்ணோ குழந்தையோ சிறுமியோ பின்னர் கொல்லப்படுவதும் அரங்கேறுகிறது. இதில், பருவமடையாத சிறுமிகளும் அடங்குகிறார்கள். பாலியல் வல்லுறவுகள் தனிமனிதனால் மட்டுமன்றி கூட்டாகவும் மேற் கொள்ளப்படுவதும் இடம்பெறுகிறது.

ஒரு வருடத்தில் எமது நாட்டில் 2000 வரையிலான வல்லுறவுகள் இடம்பெறுகின்றமை இதன் தீவிரத்தை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. ஒன்றுமே அறியாத குழந்தைகளையும் பருவமடையாத சிறுமிகளையும் பலாத்காரப்படுத்துவது எவ்வளவு கொடுமையானது. அதிலும் இவ்வாறான வன்கொடுமைகளில் குடும்ப உறுப்பினர்களும் உறவினர்களும் ஈடுபடுகிறார்கள் என்பதைச் ஜீரணிக்கவே முடியாது உள்ளது.

பெண்ணியம் சார்ந்த விழிப்புணர்வுகளும் அறிமுகம் ஆக்கப்பட்டுள்ள சட்டங்களும்கூட இக்கொடுமைகளைக் குறைப்பதாகத் தெரியவில்லை. கல்வியறிவும் பதவியும் பெண்களை துணிச்சலானவர்களாக மாற்றியுள்ள நிலையிலும்கூட வன் கொடுமைகள் தொடர்கின்றன. சட்டத்தை உருவாக்குகின்றவர்களே அதை மதிக்காதபோது இக்கொடுமைகள் தொடரவே செய்யும். பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோரை அடையாளம் காணும்போது அதிர்ச்சியாக இருக்கிறது. இவ்வாறு குற்றம் இழைத்தவர்களில் மதகுருமார், ஆசிரியர்கள், அரசியல்வாதிகள் சமூகத்தில் மதிப்பு உடையவர்கள் எனப் பலரும் அடங்குகின்றனர். இவ்வாறான மேல்நிலையில் உள்ள குற்றவாளிகள் சாதுரியமாக தப்பிவிடுகிறார்கள். அகப்பட்ட சாதாரண மக்களே குற்றம் சாட்டப் படுகின்றார்கள். இவர்களிலும் கணிசமானனோர் சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தித் தப்பி விடுகிறார்கள். பணம் படைத்தவர்களும் தப்பிவிடுகிறார்கள். பாலியல் வல்லுறவை அடுத்து கொலை நிகழும் சந்தர்ப்பங்களிலேயே பிடிபடுகின்றார்கள். பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாகின்றவர்கள் சாதாரண நிலையில் உள்ளவர்கள் மாத்திரம் அல்ல. படித்த பெண்கள்கூட

பலியாடுகாளாகின்றனர். இங்கேயும் இந்தியா விலும் அண்மையில் நிகழ்ந்த பாலியல் வன்கொடுமைகளே இதற்குச் சாட்சியமாக உள்ளது. துணை மருத்துவ மாணவி, மருத்துவர் எனப் பலரும் இதில் அடங்குவர். இவற்றையெல்லாம் பார்க்கும்போது நாம் எங்கே போகிறோம் என்ற கேள்வி எழுகின்றது.

சில கூட்டு பாலியல் வல்லுறவை அடுத்து கொலை தொடர்பான குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடலாம். ஊர்காவற்துறை மாணவி பாலியல் வன்முறை புரிந்து கொலை செய்தவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அது இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் மீண்டும் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு மனித உரிமை ஆர்வலர்களும் சில அரசியல்வாதிகளும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள். இந்தியாவிலும் இழுபறிநிலை இருந்தாலும் தற்போது மரண தண்டனை நிறைவேற்றப்படவுள்ளது.

இது இவ்வாறு இருக்க, அண்மையில் இடம்பெற்ற கூட்டுப் பாலியல் வல்லுறவை அடுத்து குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களும் அதை ஒத்துக் கொண்ட பின்பு நிகழ்த்தப்பட்ட இடத்திற்கு குற்றவாளிகளை அழைத்துச் சென்று அவர்களை அந்த இடத்திலேயே என்கவுண்டர் செய்துள்ளார் ஒரு போலீஸ் அதிகாரி. இது சட்டத்திற்கு புறம்பானதாக இருந்தபோதிலும் மக்கள் பெருமளவில் இதை ஆதரித்துள்ளார்கள். இது நடந்தது எமது அண்டை நாடான இந்தியாவில் தான். சட்டத்தை உருவாக்குவதிலும் அதை நடைமுறைப்படுத்துவதிலும் நேர்மைத் தன்மை அற்ற எமது நாட்டில் இவ்வாறான தண்டனை சாத்தியமா?

Encounter தண்டனை எமது நாட்டிலும் நிறைவேற்றவில்லை என்று கூறமுடியாது. மறைந்திருந்த மக்கள் விடுதலை முன்னணி தலைவரைக் கைது செய்து அழைத்து வந்தபோது அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றியதாக விமர்சனங்கள் உண்டு.

இன்றைய சமூகத்தில் பெருகி வரும் பாலியல் வன்கொடுமைகளுக்கு சினிமா மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் முக்கிய பங்காற்றுகின்றமையை மறுக்கமுடியாது. மேலும் போதைப்ள பொருள் பாவனையும் நீலப்படங்களும் உந்துபவையாக உள்ளன. எமது சமூதாயத்தில் பாலியல் வன்கொடுமைகளை ஒழிப்பதற்கு பெண்களுக்கான விழிப்புணர்வு மாத்திரம் போதாது. பாலியல் கல்வி ஆண் பெண் இருபாலாருக்கும் படிப்படியாக ஊட்டப்பட வேண்டும். பெண் குழந்தைகளைப் பொத்திப் பொத்தி வளர்ப்பது மட்டும் போதாது. ஆண் பிள்ளைகளையும் மனிதநேயம் மிக்கவர்களாகவும் கட்டுப்பாட்டுடனும் வளர்க்க வேண்டும்.

பாலியல் ஈர்ப்பு எவருக்கும் உண்டு. எனினும் மனிதநேயம் மிக்கவர்கள் பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபட மாட்டார்கள். காலம் காலமாகத் தொடரும் ஆணாதிக்க சிந்தனைகள் மேலோங்கி இருப்பதும்கூட பாலியல் வன் செயல்களுக்கு வித்திடுகின்றன. இன்று பெண் விடுதலை பயணம் ஏறுமுகமாக உள்ளபோதிலும் எட்டப்பட வேண்டிய தூரம் இன்னும் உள்ளது. கடந்த நூற்றாண்டு ஆரம்பத்தில் இருந்த நிலையோடு ஒப்பிடும்போது இன்றைய நிலை திருப்திகரமாக உள்ளபோதிலும் பெண்களை வெறும் உடலாக நோக்கும்நிலை தொடரவே செய்கின்றது. கவி பாரதி சொன்னது போல் நள்ளிரவில் ஒரு இளம் பெண் தனியே வீதியில் தைரியமாக நடந்து செல்லக்கூடிய நிலை ஏற்படும்போதுதான் பெண்விடுதலை கிட்டி உள்ளதாகக் கருதமுடியும். இறுதியாக பாலியல் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ள முடியாத நிலை உடனும் ஏற்பட வேண்டும்.

○○○

## பகிர்வோம்....



### ஈழமும் தமிழும்

*1599ஆம்* ஆண்டளவில் ***சேக்ஸ்பியரி***னால் எழுதப் பெற்ற **As You Like It** எனும் படைப் பானது நகைச்சுவைப் படைப்பாக வகுக்கப் பெறுகின்றது. ஈழத்து ***தி. சரவணமுத்துப்பிள்ளை*** அவர்கள், இதனை ***உன் விருப்பம் போல் அல்லது ராசலிண்ட் சரித்திரம்*** என்ற பெயரில் தமிழிலே மொழிபெயர்த்து *1893ஆம்* ஆண்டு அச்சுவாகனம் ஏற்றியுள்ளார். இதன்பின்னர் சரவண முத்துப்பிள்ளையால் *1895இல்* எழுதப் பெற்ற ***மோகனாங்கி*** நாவலானது தமிழின் முதலாவது வரலாற்றுப் புதினமாக அடை யாளப்படுத்தப்பெறுவது இவ்விடத்திலே கவனத்துக்குரியது.

# இசையில் மனம் மயங்குவதும் ஏனோ!

கலாபூஷணம் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு M.A.

இசை தெய்வீகமானது; ஆத்மார்த்தமானது, கல்லையும் கனிய வைப்பது, மனதைச் சிலிர்க்க வைப்பது, கேட்டோரை ரசித்தோரைத் தன் வயப்படுத்துவது, காயைக் கனிய வைப்பது, இத்தகைய பெருமைகளால், தான் இசை ஈசனை ஈர்த்து, அவனை "நாதலோலன்" ஆக்கியது.

இசை என்றதும் மனம், மயங்குகின்றது. இசை தொன்மையானது; இயற்கையோடு. இணைந்தது. இசையில் பல வகைகள் உண்டு அவற்றைச் சொல்லி மாளாது. பண்ணிசை, பக்தியிசை, நாட்டார் இசை, கர்நாடக இசை, தொழிலாளர் இசை, வாத்ய இசை, தமிழிசை, குரலிசை, மங்கள இசை. சோக இசை, தாலாட்டு இசை என்று, சொல்லிக் கொண்டே போகலாம்.

இசை என்றதும் "ஸ்ருதி மாதா லயம் பிதா" என்பதுதான் ஞாபகத்திற்கு வந்தாக வேண்டும். இசைக்கு லயமும், நாதமும் அணிவகுக்க வேண்டும். ஒவ்வொரு இராக மும், இசையில் ஒவ்வொரு வடிவத்தை அளிக்கும். மேளகர்த்தா இராகங்கள் 72. அவற்றின் பிரிவுகள் பல. ஒவ்வொரு உணர்ச்சி பாவத்திற்கும் கால நேரத்திற்கும் உகந்ததாக இராகங்கள் அமைந்திருக்கும்.

உதாரணமாக ஒரு, பகற்பொழுதை உதயத்திலிருந்து நோக்குவோம்.

சூரிய உதயத்தின் முன் அதாவது விடியலின் முன் இசைக்க, உகந்த இராகங்கள், பூபாளம், பௌளி, மலயமாருதம் ஆகியனவாம்.

காலையில் சூரியன் உதித்தபின் இசைக்க உகந்த இராகங்களாவன: பிலஹரி, கேதாரம், தன்யாசி ஆகியனவாம்.

முற்பகலில், அதாவது மணி 9 - 12 வரை பாடவேண்டிய இராகங்கள், அசரவேரி, சாவேரி, தேவமனோகரி ஆகியனவாம்.

நண்பகலில் அதாவது 12.00 - 1.00 வரை இசைக்க வேண்டிய இராகங்கள், ஸ்ரீராகம், மணிரங்கு, மத்தியமாவதி, பிருந்தாவன சாரங்கா ஆகியனவாம்.

பிற்பகலில் 1-4 மணிவரை இசைக்க வேண்டிய இராகங்களாவன முகாரி, பேகடா. மாலையில் மணி 4-7 மணிவரை இசைக்க வேண்டிய இராகங்கள் கல்யாணி, வசந்தா, நாட்டைக்குறிஞ்சி, பூர்விகல்யாணி என்பனவாம்.

இரவு அதாவது 7-10 மணிவரை இசைக்கவேண்டிய இராகங்கள் ஆவன: நீலாம்பரி, கேதாரகௌளை என்பனவாம்.

பொதுவாக, எந்த நேரமும் பாட உகந்த இராகங்கள், பைரவி, ஆரபி, காம்போஜி, சங்கராபரணம் ஆகியனவாம். இவை சர்வ காலிக ராகங்கள் எனப்படும்.

மேலும், ஒவ்வொரு உணர்ச்சியையும், ஒவ்வொரு இராகம் உணர்த்தும் அழகை இங்கு நோக்குவாம்.

அன்பை, காதலை உணர்த்தும் சிருங்கார ரசத்தைக் கொண்டவை: சுருட்டி, கமாஸ், உசேனி முதலிய இராகங்களாம். கருணையைச் சித்தரிக்கும் இராகங்களாக சகானா, கானடா, பைரவி, புன்னாகவராளி. நாத நாமக்கிரியை ஆகிய இராகங்களைக் குறிப்பிடலாம். சினம், கோபம், போன்ற உணர்ச்சியை, அடாணா, ஆரபி ஆகிய இராகங்களும், வீர ரசத்தை, பிலஹரி, தேவகாந்தாரி, அம்சத்வனி ஆகிய இராகங்களும் மகிழ்ச்சியை, களிப்பை, மோகனம், கேதாரம், ஹம்ஸத்வனி, ஆகிய இராகங்களும் அற்புத ரசத்தை, சாரங்கா, ஹிந்துஸ்தான், பெஹாக் ஆகிய இராகங்களும், வெறுப்புணர்ச்சியை அடானாவும், பய உணர்வை புன்னாகவராளியும், சாந்த உணர்வை, சாமா, வசந்தா ஆகிய இராகங்களும், உணர்த்திநிற்பது இசையின் விந்தையே ஆகும்.

"இசையினால் உனைப்பாட இனிக்குதையா"

○○○

# குரு சிஷ்ய பாரம்பரியம்



நாட்டிய கலாநிதி
கார்த்திகா கணேசர்

இந்தியக் கண்டத்தின் கல்வி வளர்ச்சி என்பது மூவாயிரம் வருடப் பாரம்பரியத்தைக் கொண்டது. கல்வி அறிவிற்குக் கொடுத்த உன்னத ஸ்தானமே தொடர்பறாத கல்வி வளர்ச்சியை எடுத்துக்காட்டுகிறது. முனிவரும், ஞானியரும், கல்வி அறிவை மாணாக்கருக்கு கற்றுத் தந்ததாக மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்கள் மூலம் அறிகிறோம். இங்கெல்லாம் கல்வி என்பது குருகுல முறையாகவே கற்றுத் தரப்பட்டது. இத்தகைய குருகுல பாரம்பரியம் 20ஆம் நூற்றாண்டுவரை வழக்கில் இருந்ததைக் காண்கிறோம். குரு என்பவர், 'ஆழ்ந்த அறிவு ஞானம் கொண்டவர்.' தன்னை நாடி வரும் மாணவருக்குத் தனது அறிவுச் செல்வத்தை அள்ளித்தரும் மேதை. தேடிவரும் சிஷ்யர், குருவின் வீட்டிலே அவரது குடும்பத்திலே ஒருவராகவே வாழ்வார்.

"தயையாக வித்தையைத் தரும் சான்றோன் ஒரு பிதாவே" என்கிறது தமிழ் வாக்கு. வித்தையைக் கற்பித்தவன் தந்தைக்கு ஒப்பானவன். ஒரு சமயம் செம்பங்குடி ஸ்ரீனிவாச ஐயர் தன் குருகுல வாசத்தின்போது குருவானவர் பெற்ற பிள்ளைக்கும் மேலாக தன்னைப் பராமரித்தார் என மனம் நெகிழக் கூறினார். பெற்ற பிள்ளை தனக்குப் பிறந்தவன். ஆனால் தனது சிறந்த மாணவனோ தான் உயிர் எனப் போற்றும் கலையின் வாரிசு. அவன் மூலம் தான் போஷித்த கலை மேலும் வாழப் போவதை அறிந்தவர் குரு. அதனால் ஏற்படும் பாசப்பிணைப்பே அது.

அத்தகைய ஒரு பாசப்பிணைப்பை நாம் மகாபாரதத்தில் காண்கிறோம். துரோணாசாரியார் குருகுலத்திலே பஞ்சபாண்டவரும், துரியோதனனாதியோரும் வில்வித்தை கற்றனர். அர்ச்சுனின் அபார திறமையைக் கண்டு இறுமாப்படைந்தார் குரு துரோணாச்சாரியார். அவனிலே அளவில்லாத பாசம் வைத்தார். உலகிலே அவனுக்குநிகர் யாரும் கிடையாது என எண்ணி மகிழ்ந்தார்.

அப்பாவியான காட்டுவாசியான ஏகலைவன் துரோணாசாரியாரிடம் நேர்முகமாகக் கல்வி கற்கும் தகைமை அற்றவன். அவ்வாறு இருந்தும் துரோணரையே தனது குருவாக நினைத்து அவரைச் சிலையாக வடித்து வணங்கி தானாகவே வில்வித்தையை கற்றுக் கொண்டவன். அப்பாவியான ஏகலைவனோ தான் மனதிலே குருவாக வணங்கிய துரோணருக்கு குரு தட்சணை கொடுக்க விரும்பி, மானசீகக் குருவை அணுகியவன். தன் வில்லின் திறமைகளை அவருக்குக் காட்டுகிறான். துரோணரின் பாசத்தையெல்லாம் பெற்ற அர்சுனனுக்கு நிகரான திறமைசாலியாக இருப்பதைத் துரோணர் கண்டார். அர்சுனனுக்கு நிகரான வேறொருவனா!, துரோணரால் பொறுக்கவே முடியவில்லை. அப்பாவி ஏகலைவனை வஞ்சிக்கத் துணிந்தார். எந்தக் குருவுமே செய்யக்கூடாத கீழ்நிலைக்கு அவரது சிந்தனை சென்றது. அப்பாவியான ஏகலைவனை வஞ்சிக்கத் துணிந்தார்.

பெருவிரலை குரு தட்சணையாகக் கேட்டார். பெருவிரலை இழந்தவன் எவனுமே வில்லாளியாகமாட்டான். இங்கு நாம் குருவின் அளவுக்கு அதிகமான பாசத்தைக் கண்டோம். சிஷ்யன் திறமைசாலியானால் குருவின் பாசம் எவ்வாறு வளரும் என்பதைக் காட்டுவதே இந்தக் கதை.

'மாதா பிதா குரு தெய்வம்' என்பது ஆன்றோர் வாக்கு. ஒரு பிள்ளை தனது ஆரம்ப அறிவை பெற்றோர் மூலமாகப் பெறுகிறது. அதன் பின்னர் முறையான கல்வி அறிவை வளர்ப்பது பெற்றோரின் தலையாய கடனே. வடமொழி சுலோகம் ஒன்று கூறுவது "மாதா சத்துரு, பிதா வைரி, ஏன பாலோ நப் பாடதக" தங்கள் பிள்ளைகளுக்கு கல்வி அறிவைப் புகட்டாத தாயார் ஒரு சத்துரு, அதாவது ஒரு பகைவனை ஒத்தவர். தகப்பனாரோ வைரி, அதாவது தான் கொண்ட பகையை மனதிலே வைத்து தருணம் வரும்போது கழுத்தறுப்பவன். கல்வி அறிவைப் புகட்டாத

# பெண்ணே புதுமைப்பெண்ணே

பெண்ணே
புதுமைப் பெண்ணாய்
எழுந்து நின்றாலும்
முடியவில்லை
உனக்காக
துயரங்கள்...
நீயே உன்னை
அலங்காரப் பதுமையாய்
புனரமைத்தபடி
ஆடைப்புரட்சியென
அத்தனைக்கும்
துணிவு கொண்டபின்
எப்படி முடியும்
உனக்கா
வன்முறைகள்
பல்கலைக்கல்வி
வாழ்வில்
பாலியல் வக்கிரத்தின்
ஆண்மனவடிகாலாய்
விருப்பப்படும்
உன் உடல்
உடல் கடந்து உன்னை
ஆத்மாவாய்
நேசிக்கும்
மாற்றங்கள் வேண்டும்
உன்னிலும்தான்
அவர்களிலுந்தான்
அதுவரை
எத்தனை
மகளிர் தினங்கள்
வந்துமென்ன
உனக்காக
விடுதலை என்பது
உரக்கச் சொல்லும்
கோசங்களில்
மட்டுந்தான்
உயிர்வாழப் போகிறது....

**புலோலியூர் வேல்நந்தன்**

பெற்றோர் கடமையில் தவறியவர் எனக் கூறவில்லை. அவர்களை ஒரு பகைவராகவே சுலோகம் வர்ணிக்கிறது.

இதை எழுதும்பொழுது ஒரு ஞாபகம் வருகிறது. இன்று உலகம் போற்றும் நெல்சன் மண்டேலா வெள்ளை நிற வெறியருக்கு எதிராகத் தென் ஆப்பிரிக்காவிலே போராட்டம் நடாத்தி பலகாலம் சிறைவாசம் அனுபவித்தார். விடுதலை பெற்று தென் ஆப்பிரிக்காவின் முதல் ஜனாதிபதியுமானவர். இவர் தனது சுயசரிதையில் கூறுகிறார், தந்தையை இழந்த தன்னை, தான் சிறந்த கல்வி அறிவைப் பெறவேண்டும் என்பதற்காக அவரது தாயார் மூன்று நாட்கள் கால்நடையாகவே நடந்து தந்தையாரின் சகோதரரிடம் கூட்டிச் சென்று தன்னை ஒப்படைத்தாராம். தனது சிறிய தகப்பனார் தன்னைப் பிள்ளைபோல வளர்த்ததாகக் கூறுகிறார். அன்று தனது மகன் கல்வி அறிவை பெற்றுச் சான்றோனாக வாழ வேண்டும் என்பதற்காக அந்தத் தாயார் செய்த மகத்தான செயல் அல்லவா அது. அன்று அவர் அவ்வாறு செய்யாவிடில் இன்று ஒரு நெல்சன் மண்டேலாவை உலகம் இழந்திருக்கும். ஒரு சிறந்த அறிவுள்ள தாயாருக்கு உதாரணமாக விளங்குகிறார் மண்டேலாவின் தாயார்.

கல்வி அறிவு என்பது ஏற்கனவே அறிந்த தரவுகளை அறிந்து அவற்றை மூளையில் ஏற்றி வைத்திருப்பது அல்ல. தீர்க்கமாக சிந்திக்கும் திறனையும் ஆராய்ந்து அறியும் திறனையும் மாணக்கரிடம் வளர்ப்பதே. இங்கு ஒரு மாணவர் கூறுவதைக் கேளுங்கள்.

**அறியாமை என்ற திரையாய் என் கண்களின்**
**பார்வையை இளந்திருந்தேன்**
**எனது குருவோ அறிவு என்ற மருந்தில் தோய்ந்த**
**வார்த்தைகளால் என் ஊனக் கண்களைத்**
**திறந்து ஒளி ஊட்டினார்.**
**அவரை நான் நமஸ்கரிக்கிறேன்**

வடமொழி சுலோகம் ஒன்றின் சாரம் இது அறியாமை என்ற இருளைப் போக்குவதே குருவின் தலையாய கடன்.

அதற்கு மேலும் குருவிற்கு சிஷ்யன் கூறும் சுலோகம், இந்த சுலோகம் இன்று பல இந்தியக்கலை கல்விகூடங்களிலே நாளாந்தம் கூறப்படுகிறது. இது குருவை வணங்கும் சுலோகம்

**குருப் பிரமா, குரு விஷ்ணு,**
**குருதேவோ மகேஸ்வரகா**
**குரு ஷாட்ஷாட் பரப்பிரமம்**
**தஸ்மஸ் ஶ்ரீ குரவே நமகா**

எனது குருவே பிரமா, விஷ்ணு, மகேஸ்வரன் அவரே பரப்பிரமம், அவர் பாதங்களில் ஷாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரிக்கிறேன்.

குருவானவர் பிரமன், பிரமா படைத்தலை செய்பவர். இங்கு ஏன் பிரமா எனப்படுகிறார் என்றால், இறையோ பெற்றேரோ பிள்ளையை படைத்துவிடலாம். ஆனால் அந்தச் சிறுவனை ஒரு கலைஞனாகவோ, இலக்கியவாதியாகவோ, சிந்தனையாளனாகவோ அல்லது அர்ஜுனன் போன்ற வில்லாளியாகவோ படைப்பவர், அவனுக்குக் கல்வியை, வித்தையை கற்பிக்கும் குருவல்லவா. அதனாலேயே அவரை மாணவன் என்னைப் படைக்கும் பிரமாவும் நீயே என வணங்குகிறான்.

குரு விஷ்ணு, விஷ்ணு காத்தல் தொழிலைச் செய்பவர். ஒருவனை ஒரு துறையிலே உருவாக்கும் போது, அவனது வளர்ச்சியிலே குரு கவனம் செலுத்துபவர் .அவ்வாறு அவர் அவனைக் காத்து ஒரு துறையிலே திறமைசாலி யாக்குவதாலேயே குரு விஷ்ணு எனப்படுவார். மாணாக்கனைத் திறமைசாலியாக, வல்லவனாகத் திகழ அவரே முறையாக கல்வித் துறையில் காத்து வளர்ப்பவரும் அவரே. அதனாலேயே காத்தல் தொழிலை செய்யும் விஷ்ணுவிற்குக் கொடுக்கும் மதிப்பை சிஷ்யன் குருவிற்குக் கொடுக்கிறான்.

குரு தேவோ மகேஸ்வரகா, மகேஸ்வரன் இங்கு அழித்தல் தொழிலை செய்யும் தெய்வம். ஒரு குருவால் திறமையான மாணவனை உருப்படாமல் அழித்துவிடவும் முடியும். அவனது திறமையை மழுங்கடிக்கலாம் அத்துறையில் வெறுப்பைகூட ஏற்படுத்த முடியும். பொறாமை கொண்ட சில குருவானவர்கள் நம் சிஷ்யனைக் கெடுப்பதை நாம் அறிந்ததே. சிஷ்யனின் திறமையைக் கண்டு வெதும்பும் மனம் கொண்ட ஆசிரியர் பற்றியே நாம் அறிகிறோம். இது இன்று பல உயர்கல்வி நிலையங்களிலும் நடைபெறுகிறது. இவ்வாறு இருக்க, அறியாப் பருவத்தில் இருக்கும் சிறுவனை தகைமை அற்ற குருவிடம் நம்பி பெற்றோரால் ஒப்படைக்கப்பட்ட, சிறுவன் கல்வியில் மேம்படாது வஞ்சிக்கப்படுவது இலகுவான காரியம் அல்லவா. இதற்கு எடுத்துக்காட்டுபோல மகாபாரதத்தில் கர்ணன் வித்தையைக் கற்றுவிட வேண்டும் என்ற ஆர்வத்தால் குருவிடம் பொய் கூறியமையால் அவன், அவர் மூலம் பெற்ற பாசுபதம் அவனுக்குத் தேவையான சமயத்தில் பயன்படாது போகும் எனச் சபிக்கிறார். இங்கு குருவால் வஞ்சிக்கப்படும் சிஷ்யனைக் காண்கிறோம். வித்தையைக் கற்றுக் கொடுத்த குரு பரசுராமரே “மகேஸ்வரனாக” கர்ணன் கற்ற கலையை அழிப்பதைக் காண்கிறோம்.

குருவே பரப்பிரமம், கல்வியைக் கற்கும் காலையில் எல்லாம் வல்ல இறைவனுக்கு நிகரானவரே குருநாதர். அதனாலேயே மாணவன் அவரைப் பரப்பிரமம் எனக் கூறுவதாக சுலோகம் அமைகிறது.

தஸ்மை ஶ்ரீ குருவே நமக

நான் உங்கள் பாதங்களை ஷாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரிக்கிறேன்.

கபோதப உபநிஷதத்தில் குருவும் சிஷ்யனும் சேர்ந்து ஓதும் சுலோகம் உண்டு.

**தேவனே எங்கள் இருவரையும் காப்பாற்றி**
**அறிவை வளர்ப்பதற்கு உதவுபவரே**
**தேவனே மகோன்னதமான அறிவுத் துறையில்**
**கடுமையாக உழைக்க உதவும்**
**எமது அறிவு என்றும்**
**வல்லமையுடன் காரிய சித்தி பெறவேண்டும்.**
**நாம் இருவரும் பகைமையற்று**
**ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும்**
**ஷாந்தி ஷாந்தி ஷாந்தி**

குருவும் சிஷ்யனும் இவ்வாறு சேர்ந்து இறைவனைப் பிரார்த்திப்பது சகஜம். இதில் இருந்து குரு சிஷ்ய உறவு எவ்வாறு அமையவேண்டும் என்பதை அறிகிறோம்.

பண்டைய காலங்களில் இன்று போன்று யாவரும் கல்வி அறிவு பெறவில்லை. கல்வி அறிவை குறிப்பிட்ட ஒரு சிலரே பெறமுடிந்தது. கற்கும் மாணவர் கடின உழைப்பாளியாக இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. தனது மாணவப் பருவத்தில் அவர்கள் தலைமுடியை அலங்கரிக்கக்கூடாது. எண்ணெய் தடவக் கூடாது, சவரம் பண்ணிக் கொள்ளக்கூடாது. எந்த உடல் சுகம் அளிக்கும்

செயலிலும் ஈடுபடக்கூடாது. கடும் பிரம்மச்சரியம் கடைப்பிடிக்க வேண்டும். இவையாவும் கல்வியில் தேற வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடே. இவ்வாறான குருகுலம் 8 வயதில் ஆரம்பமாகி 16, 18 வயதுவரை தொடரும். குரு தந்தையாகவும், குருபத்தினி தாயாகவும் மாணவரைப் பராமரிப்பார்கள்.

இவ்வாறான எமது பாரம்பரிய கல்விமுறை 3000 வருடங்கட்கு மேலாகத் தொடர்பறாது வளர்க்கப்பட்டது. அன்றே போர் கடின உழைப்பின் பேறாகப் பெற்றவையே. இன்று நாம் இரசித்து போற்றும் இலக்கிய கலைத்துறை போன்ற எமது பராம்பரிய செல்வங்கள்.

19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தோன்றி தமிழ் தொண்டு ஆற்றி பழம் தமிழ் நூல்களுக்கு அச்சுருக் கொடுத்தவர் உ.வே. சாமிநாத ஐயர். இவரும் இந்தக் குருகுல பாரம்பரியத்திலேயே வளர்ந்தவர். தமிழ் தாத்தா எனப் போற்றப்படும் உ.வே.சாமிநாத ஐயர் தனது சுயசரிதையில் அவர் கற்ற ஆரம்பக் கல்வி பற்றிக் கூறுகிறார்.

அவர் படித்த திண்ணைப் பள்ளிக் கூடத்திற்கு காலையிலே கருக்கலிலேயே செல்லவேண்டும். திண்ணையில் வாத்தியார் காத்திருப்பார். முதலாவதாக வரும் மாணவனுக்கு குருநாதர் செல்லமாக கையிலே பிரம்பால் தடவுவாராம். நேரம் போகப்போக குருநாதர் வரும் மாணவருக்கு சிறிது உரமாகவே அடிக்கத் தொடங்கி கடைசியாக வரும் மாணவருக்கு நல்ல பூசை அடி கொடுப்பார். இவ்வாறு கற்றுத் தேறிய தமிழ் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர் தமிழில் மேல்கொண்ட காதலால் ஊர் எல்லாம் அலைந்து ஏட்டுச் சுவடிகளைத் தேடி, எமது அரிய தமிழ் இலக்கியங்களுக்கு அச்சுரு கொடுத்துக் காப்பாற்றினார். அவர் மேலும் கூறுகிறார் குரு நாதர் வீட்டில் உலை கொதிக்கவேண்டுமே. அதாவது குருநாதருக்கு வருவாய் வேண்டும், அதற்காக சில தினங்களிலே மாணவர்கள் குருநாதர் தலைமையிலே வீடு வீடாகச் சென்று கோலாட்டம் அடிப்பார்களாம். அந்த வீடுகளிலே வீட்டு உரிமையாளர் இவர்களுக்கு அரிசி காய்கனி போன்ற வேண்டிய பொருட்களை வழங்குவார்களாம்.

இத்தனை கஷ்ட நஷ்டங்களையும் தாங்கித்தான் எமது தமிழ் இலக்கியம் பல பரம்பரைகளையும் கடந்து எம்மை வந்தடைந்தது. திண்ணைப் பள்ளியிலே ஆரம்பக் கல்வியைக் கற்ற உ.வே.சாமிநாத ஐயர் தொடர்ந்தும் வேறுபட்ட இலக்கிய செல்வங்களைப் பெற வெவ்வேறு குரு நாதர்களை அணுகி கல்வி அறிவு பெற்றார். வேறுபட்ட ஆசிரியர்கள் வெவ்வேறு இலக்கியங்களில் திறமையுடையவராக இருப்பார்கள். அதனால் வேறுபட்ட ஆசிரியர்களை அணுகி பாடம் கேட்டதாக உ.வே.சா.வின் சுயசரிதை மூலம் அறிகிறோம்.

இராமாயணத்தை ஒருவர் நன்றாகக் கற்றுத் தருவார் என அறிந்து சாமிநாதர் அவரிடம் பாடம் கேட்கப் போய் உள்ளார். அந்தக் காலங்களில் சங்கீதம் கற்றவர்களைப் பண்டிதர்கள் வெறுத்தனராம், காரணம் சங்கீதம் கற்றோர் சொற்களை அர்த்தம் சரியாகப் புரியாது வார்த்தைகளுக்கு இராக அசைவு கொடுத்து விடுவார்களாம். அல்லது அர்த்தம் புரியா வண்ணம் வார்த்தைகளைப் பிரித்து விடுவார்களாம். தனது குருநாதர் எவ்வாறு கர்ண கடூரமாக பாடலை படிப்பார் என சாமிநாத ஐயர் வேடிக்கையாக விளக்கியிருந்தார். சாமிநாத ஐயரோ தாய் மூலமாக சங்கீதம் கற்றிருந்தார். குருநாதரிடம் தனக்கு சங்கீதம் தெரியாது எனக் கூறிய போதும் படிக்கும் பாணியில் சங்கீதத் தொனி தெரிந்ததால் தனது குரு சிறிது அதிர்ச்சியுற்றாலும், முறையாக அர்த்தம் பிசகாமல் பாடல்களை பாடியதால் குருநாதர் தன்னை ஏற்றுக் கொண்டதாகக் கூறியிருந்தார்.

இந்தப் பாரம்பரியத்தில் வந்ததே இந்தியக் கல்விஅறிவு. இந்தியாவின் முதல் ஜனாதிபதியான சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் பிறந்த நாளாகிய செப்டம்பர் 5ஆம் திகதியை இந்திய அரசு ஆசிரியர் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் இந்திய சித்தாந்த மேதை மட்டுமல்ல அவர் ஒரு ஆசிரியருமாவார்.

இந்திய பாரம்பரியத்திற்கு எந்த வகையிலும் சளைத்தது அல்ல சீனக் கல்விப் பாரம்பரியம். கொண்டு பூசியசின் சிந்தனையின் வாரிசுகள் அல்லவா இவர்கள். இவர்களும் ஆசிரியர் தினத்தை வெகு விமரிசையாக கொண்டாடுபவர்களே.

❍❍❍



குறுங்கதை

# பெண்ணின் பெருமை



கலாபூஷணம்
மாவனல்லை எம்.எம்.மன்ஸூர்

அந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையில் தயாளு அம்மாள் தனது மகளைப் பற்றிய வெளிப் பாடுகளை ஒரு வித்தியாசமான முறையில் கொண்டிருந்தாள். எதனைச் செய்தபோதும் அது தனது மகளின் சாதனையாகவே வெளியுலகுக்குத் தெரியப்படுத்த அவள் தயங்கவில்லை. அதில் ஒரு சுகத்தையும் திருப்தியையும் அவள் கண்டாள்.

வாயில் மணி ஒலித்தது. தயாளு அம்மாள் கதவைத் திறந்தாள் எதிரே ஒரு அழகிய வாலிபன் நின்றிருந்தான். என்னவென வினவினாள் “ உங்களிடம் ஒரு விஷயத்தைத் தெரியப்படுத்தலாம் என்று வந்தேன்” என்றான் இளைஞன். “உள்ளே வந்து அமருங்கள்” என்றாள் அவள்.

முற்றத்தில் இருந்த மலர்ச் செடிகளை பார்த்தான் “ஓ.. பார்த்தீர்களா எவ்வளவு அழகாகச் செய்திருக்கிறாள் எனது மகள்? உங்களுக்கு தெரியாது அவளது கைபட்ட எதுவும் துலங்காமல் இருக்காது. இந்த ஊரில் அவளை விஞ்சி மலர் நடுகை செய்வதற்கு எவருமில்லை”

“ஓ…அப்படியா அவனது கண்கள் அங்கு போடப்பட்டிருந்த ‘செட்டி’யின் அலங்காரங்களை மேய்ந்தது. “வந்ததும் வராததுமாக இதனை சொல்லுகிறேன் என்று நீங்கள் ஒன்றும் நினைக்க வேண்டாம். இங்கே போடப்பட்டுள்ள செட்டியில் இடப்பட்டுள்ள ‘பிலோ கேஸஸ்’ களும் அவளுடைய வேலைதான். எப்படியான டிசைன்களில் எத்தகைய வடிவங்களில் செய்திருக்கிறாள் என்று பாருங்களேன், ஊரே கண் படும் அளவுக்கு அவளது வேலைப்பாடுகள். இதெல்லாம் அவளது பொழுதுபோக்கு”

“ரொம்ப அழகாய்த்தான் இருக்குது” என்று சொன்ன வண்ணம் சுவர்களைப் பார்த்தான் “ஓ..அதை பார்க்கிறீர்களா? சுவரில் மாட்டப்பட்டுள்ள சட்டங்களில் பளிச்சிடுவது அவள் தீட்டிய ஓவியங்கள்தான் எப்படி பண்ணி இருக்கிறாள் என்று பாருங்கள், இந்த ஊரில் இப்படிச் செய்பவர்கள் எவரையும் உங்களால் காணமுடியாது” இன்னும் அடுக்கிக் கொண்டே போனால் தயாளு அம்மாள். தயாளு அம்மாளின் புகழாரங்களை எல்லாம் சகிக்க முடியவில்லை அவனால்.

“ஆ….சமையலைப் பற்றி சொல்ல மறந்து விட்டேனே” என்று தயாளு அம்மாள் தொடர்ந்தாள். “இந்த ஊரிலே எனது மகள் சீதாவைத் தவிர மிகவும் ருசியாகச் சமைக்கக் கூடியவர்கள் எவரும் இருப்பார்கள் என்று சொல்லமுடியாது. தேடியும் கிடைக்க மாட்டார்கள். அவள் சமைப்பது அவ்வளவு ருசி”

“சரி சரி உங்கள் மகள் படிப்பில் எப்படி?” அவன் கேட்டான் “சரியாகக் கேட்டீர்கள் எனது மகள் படிப்பில் அவ்வளவு கெட்டிக்காரி. அத்தனை பாடங்களிலும் ‘ஏ’ சித்தி என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன். அதேபோன்று ஒழுக்கம் ஒழுக்கத்தில் அவள் சிகரம் என்று சொல்லலாம். நிலத்தைப் பார்த்து நடந்தால் தலையை நிமிர்த்தவே மாட்டாள் இதுவரையில் காதல் கீதல் என்று எதுவுமே இல்லாத ஒரு பெண் ஊரில் இருப்பது என்றால் அது எனது மகள்தான்”.

“அப்படியா ரொம்ப சந்தோஷம் உங்கள் மகள் இவ்வளவு சிறப்பு வாய்ந்தவள் என்பதைக் கேட்கவே மகிழ்ச்சியாக இருக்கிறது அதனால்தான் சொல்லிவிட்டுப் போகலாம் என்று வந்தேன் படிப்பிலும் சகல விஷயங்களிலும் ஒருபடி மேலே உள்ள உங்களது மகளை எனக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் இருவரும் சேர்ந்து பழகியதில் ஏதோ ஒரு தப்பு நடந்து போச்சு ஊர் சிரிக்க முன்னர் எங்கள் இருவரையும் வாழ்த்தி என்னை உங்களது மருமகனாக ஏற்றுக் கொள்ளவேண்டும். என்று சொல்லி விட்டுப் போகத்தான் வந்தேன்” என்று சொன்னவன் எழுந்து நின்றான். தயாளு அம்மாள் நெற்றியைப் பிடித்த வண்ணம் தரையில் சாய்ந்தாள்.

❍❍❍

# என்றமெதின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்...?

சொல்லியழ ஆருமில்லை சோகத்துக்கு அளவுமில்லை
சொந்தமென்று எவருமில்லை பந்தம் கொள்ள வருவதில்லை
வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் வேலைகள்தான் நடக்கிறது
பாரம் கொடுத்தவரை பார்க்கவில்லை என்கின்றார்
தூரம் போனமகன் திரும்பி வருவானோ
தூக்கம் தொலைத்தநாம் நடுத்தெருவில் நிற்கின்றோம்.

நம்கரத்தால் ஒப்படைத்தோம் நம்பிக்கை வைத்திருந்தோம்
எம்துயர் தீர்வதற்கு எத்தனை காலமதோ
நல்லாட்சி அரசென்றார் நல்வாழ்வு வருமென்றார்
எல்லாமும் போனதுதான் எமக்கான வாழ்வாமோ
சொல்லாமல் கொள்ளாமல் கொள்ளைவந்து அள்ளாதோ
நடைப்பிணமாய் வாழ்வதற்கு அதுவே மேலாமே.

தெருவோரம் நாம்வாழ எம்வீட்டில் யார்யாரோ
பார்த்திருக்க எம்வளங்கள் சேர்த்தெடுத்துச் செல்கின்றார்
ஆவி துடிக்குதையோ ஆர்வந்து தேற்றிடுவார்
பாவி எங்களைத்தான் பாருலகும் மறந்ததுவோ
லட்சலட்சமாய் கொன்று குவித்தனரே
மிச்சமீதியாய் எம்மையேன் விட்டுவைத்தார்

எந்தக்குறையுமின்றி ஏகாந்தமாய் வாழ்ந்தோம்
சொந்தக் காணியிலே சுதந்திரமாய் வதிந்திருந்தோம்
யார்கண் பட்டதுவோ பட்டமரமாய் நாமானோம்
எம்மை நாமாண்டு நலமாய் வாழ்ந்திடவே
எடுத்த முயற்சிகள்தான் எமக்கே வினையாச்சோ
தொடுத்த மறப்போரும் தோல்வியிலெ முடிந்ததுவோ

தோட்டம்துரவு என்று தேட்டம்பல தேடியதும்
கூட்டமாய் வாழ்ந்துநாம் கும்மியடித்ததுவும்
ஓட்டமாய் எமைவிட்டு ஓடித்தான் போனதுவோ
பாட்டம்பாட்டமாய் அழுது தீர்த்தாலும்
ஆட்டம் கண்டநெஞ்சு அமைதி கொள்ளுதில்லை
ஆண்டவனே உனையன்றி அரவணைக்க ஆருண்டு

செல்லையா சுப்பிரமணியம்

ஹெலியென்றும் புலியென்றும் ஓடியோடி ஒளித்திருந்தோம்
பங்கருக்குள் ஓருலகம் எமக்கான இருட்டுலகம்
அங்கிருந்து நகர்வதற்குள் அடுத்தவிதி விடிந்திருக்கும்
ஷெல்லடிக்குப் பயந்தோட குண்டுமழை வரவேற்கும்
காவுகொண்ட உயிர்போக களத்திலே மீந்திருந்த
களத்திரரைக் கையளித்தோம் காணவில்லை என்கின்றாரிப்போது

சர்வமும் நாசமாச்சு சர்வதேசமும் மோசமாச்சு
கர்வமும் கத்தலும்தான் அரசாட்சி என்றாச்சு
கருணைக்கு மனுக்கொடுக்க காருண்யம் காட்டிநிற்க
ஒருவருமே இல்லையென்ற நிலைதான் இன்றாச்சு
துருவங்கள் ஒன்றுசேரும் நினைப்பிலே மண்ணாச்சு
சுயலாப அரசியலால் நல்லிணக்கம் கனவாச்சு

குறுநில மன்னர்போல குறுகிய எண்ணமுடன்
குவலயத்தில் ஆட்சிசெயும் மனிதம் பிழைத்தவர்கள்
வாழ்கின்ற நாட்டினிலே புனிதப்போர் நடத்திடினும்
சிறுபான்மை இனமென்றால் இதுதான் விதியாமோ
அடிமைகளாய் மிடிமைக்குள் தள்ளுகின்ற சதியாமோ
துடித்தெழினும் மடிவதுதான் காலத்தின் கதியாமோ

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ இந்த மாநிலத்தே
கூண்டோடு கைலாசம் போனோரை என்னசொல்ல
கண்ணாலே பார்த்திருக்க பதைபதைத்துத் துடிதடித்து
விண்ணுலகம் சென்றோரை எண்ணியெண்ணி என்னசொல்ல
தசைத்துண்டாய் திசையெங்கும் சிதறியதை என்னசொல்ல

இத்தனையும் தாண்டியின்று மீண்டு வந்தாலும்
இருக்கவிடம் இல்லையென்று விரட்டி அடிக்கின்றார்
சொத்துமில்லை சுகமுமில்லை சோறுதின்ன நாதியில்லை
நித்திலத்தில் நிர்க்கதியாய் நினைவிழந்து கிடக்கின்றோம்
எத்தலத்தில் எமக்கு ஒரு இடமுண்டோ புரியவில்லை
செத்தழிந்தால் புதைகுழியில் இடமுமுண்டோ தெரியவில்லை.



உப்பிப் பெருத்து பிரிவிழுந்த வயிறும் முழுமையாகச் சவரம் செய்யப்பட்ட முகமும், தடாரிக்கமான உடல் வாகும் கொண்ட உதுமான்குட்டி கனத்த இதயத்தோடு வீட்டு வாசலில் நின்றிருந்தார்.

சாரணை முழங்காலுக்கு மேலே மடித்துக் கட்டிக்கொண்டு, தோளில் ஒரு துண்டைப் போர்த்தியபடி வாய் எதை எதையோ முணுமுணுக்க, வீசிய கையுடன் அங்குமிங்குமாக பரபரப்போடு நடந்து கொண்டிருந்தார்

“என்னங்க தனியாக நின்டு பொலம்பிக்கொண்டிருக்கீங்க. வீட்டுக்குள்ள வாங்க. ரோட்டால போறவங்க, வாறவங்க எல்லாரும் உங்களப் பாத்துச் சிரிக்க போறாங்க....” என்றாள் மனைவி சாகிறா.

“சும்மா இருடி பைத்தியக்காரி. ஒனக்கு ஒரு எழவும் தெரியாது. எவன் சிரிச்சா எனக்கென்னடி....? இண்டக்கி ஒரு கை பார்த்து போட்டுத்தான் வருவேன்....” என்று உதுமான் குட்டி கூறினார்.

“நான் போய் என்ன என்று விசாரிச்சு பார்த்துப் போட்டு வாறன். நீங்க அவதிப்படாதீங்க. உள்ளுக்குள்ள வாங்க”

“வேணாம் நீ சும்மா இரு. சொந்தக்காரங்க என்டு கொஞ்சம் எளக்காரம் கொடுத்தா தலைக்கு மேல ஏறுறாங்க தொழில் முறையில இதெல்லாம் நம்மகிட்ட சரிப்பட்டு வராது. வெட்டொண்ணு துண்டு ரெண்டாகஇருக்கணும்....”

“அதன்டா நெசந்தான்...”

‘கஞ்சித் தண்ணிக்கு வழியில்லாமக் கெடந்த நாய்களுக்கு இரக்கப்பட்டு உதவி செஞ்சதுக்கு நமக்குச் செஞ்சதைப் பாத்தியா சாகிறா.....?’

“நன்றி கெட்டதுகள். என்ன செய்யலாம்?”

“வலை, வள்ளம் வாங்கிக்கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாகக் கடனை இறுக்கச் சொன்னதுக்கு நம்மட வாடிக்கு மீன் தராம சைக்கிள் யாபாரிக்கு மீனக் குடுக்கிறான் பாத்தியா...?”

“யாவாரி விலையப் பம்பலாகக் கொடுக்கி றானாக்கும்...”

சிறுகதை



“இண்டக்கித்தான் கடைசி. ஓண்டில வாங்கின பொருளத்தரணும் அல்லது கணக்கு வழக்கு களை முறையாக முடிக்கணும்

“அந்த நேரம் கொழந்தப் புள்ளயப் போல படிச்சிப் படிச்சி சொன்னேனே கேட்டீங்களா…?”

“இப்ப போய் இதெல்லாம் ஏன் கிண்றா…?”

“எழுத்து மூலம் செய்துகிட்டு கொடுங்க, கொடுங்க எண்டுவழிக்கு வழி சொன்னேன் நீங்க கேக்கல்ல…இப்ப பட்டு மாய்ங்க…”

“எடக்கு முடக்காகக் கதைக்காம வாய வெச்சுக்கிட்டு சும்மா இருக்க மாட்டியா…?”

“உங்களுக்கு இதுவும் வேணும்... இன்னமும் வேணும்...” என்று சாகிறா கூறிக்கொண்டு வீட்டுக்குள் இருந்து குசினிப்பக்கமாகச் சென்றாள்.

“இவனப் போல எத்தன பேர நான் கண்டிருக்கிறன். என்னை லேசியில ஏமாத்தலாது…”என்றார் உதுமான்குட்டி

வாடகை பெயர்ந்து ஆடிமாதக் கச்சான் காற்று ‘ஹோ’என்ற இறைச்சலுடன் வீசிக்கொண்டிருந்தது. இக் காற்றுக்கு வேலி ஓரத்தின் இரு மருங்கிலும் நின்றிருந்த பூவரசு மரங்கள் தலை தெறிக்க ஆடி அசைந்து கொண்டிருந்தன. கச்சான் காற்று மண்ணோடு சேர்த்து புழுதியையும் வாரிச்சுருட்டி வீசி எறிந்துகொண்டிருந்தது.

❖ ❖ ❖

“தலைவரே போவோமா…? சரிதானே…? தண்ணி வென்னி எல்லாம் காணுமா…? என்று கேட்டார் உதுமான்குட்டி.

“போவோமே…”என்றார் பள்ளிவாயல் தலைவர் சஹாப் ஹாஜியார்

உதுமான்குட்டி முதலாளியின் வேண்டுதலின் பேரில் அங்கே வந்த பள்ளிவாயல் தலைவர் சஹாப் ஹாஜியார் கடற்கரை வெண் மணலில் கால்கள் புதைய இருவரும் பிரதான வீதியில் இருந்து உள் நோக்கி வளைந்து நெளிந்து குன்றும் குழியுமாக இருக்கும் தார் வீதியால் துறைமுகத்தை அடைந்து, அங்கிருந்து வலது பக்கமாகத்திரும்பி டானா முடக்கில் வரும் குச்சி ஒழுங்கையால் அன்சாருடைய வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தனர்.

“முதலாளி நான் கேட்கிறேன் எண்டு கோவிச்சுக்காதீங்க எப்படியும் ஒரு சமாதானத் துக்கு வரத்தானே வேணும்…?”

“அது அவங்க நடந்து கொல்ற மொறய பொறுத்திருக்குது…”

“நீங்க நினைச்சுகிட்டு வாற காரியம் நடக்காட்டி என்ன செய்வீங்க…?

“தலைவரே சும்மா வாப்பா… என்ன பயமாகவா இருக்குது…?”

“சும்மாதான் கேக்கிறன் முன் யோசின ஏதாச்சும் வெச்சிருக்கீங்களா…?”

“இல்லாம வருவனா…? இதெல்லாம் எனக்கு ஒரு துரும்பு.”

“நல்லதுக்குத்தான் சொல்றன்…”

“ஒண்ணுமில்ல சொல்வழி கேக்காட்டி வள்ளத்தையும் வலையையும் தூக்கிக்கிட்டு வரவேண்டியதுதான்…..”

“அவதிப் படாதீங்க முதலாளி அதுகளும் உங்கட சாதிசனங்கள் தானே…பாவம்…! நீங்க கொடுத்த வலையையும், வள்ளத்தையும் வெச்சிதான் தொழில் செஞ்சு கிட்டு இருக்கு துகள்…”

“உண்மதான் சொன்ன மாதிரி… நடக் கல்லியே…?”

“எனக்கு ஒரு யோசன வருவுது…”

“என்னண்டு சுருக்கமாக சொல்லி முடிங்க…”

“போலீஸ்காரன கூட்டிக்கொண்டு போனால் கையோட விஷயம் முடிஞ்சிடும்… பெரிசா மெனக்கெடத் தேவையில்லை…”

“போலீஸ் கிட்ட போனா கோடு, கச்சேரி எண்டு ஏறி இறங்க வேண்டி வரும். காதோடு காது வெச்சாப் போல சட்டுபுட்டெண்டு காரியத்த முடிக்கணும் எண்டுதான் உன்னக் கூட்டிக்கிட்டு வாறன்…”

“முதலாளி அந்தா புளிய மரத்துக்கு பக்கத்தில தெரியிற ஏறு கடப்புக்குள்ள இருக்கிற தகரக் குடிசதான் அன்சாருடையது...”

“அப்புடியா...இதுக்கு முந்தி கபிபுநகர் பக்கமாக இருந்தானே...? இப்ப இங்கேயா இருக்கான்...?”

“இப்ப கிட்டத்திலதான் இங்க குடி வந்திருக்கான்...”

❖ ❖ ❖

கடல் அகோரமாகக் கொந்தளித்துக் கொண்டிருந்தது. கடலின் ஆழத்தில் மலைபோல எழுந்த அலைகள் ஒன்றையொன்று துரத்திப் பிடித்து விளையாடி பேரிரைச்சலுடன் கரையில் வந்து மோதி அரண் போல அமைந்திருந்த மணல் திட்டைக் கடந்து, அடம்பன் கொடிகளையும் புங்கை மரங்களின் வேர்களையும் நீராட்டின.

அக்கரைச்சேனை கிராமத்தில் சனப் பெருக்கம் அதிகரிக்க ஆரம்பித்ததும் குடியிருப்பு காணிகளுக்கு பெரும்தட்டுப்பாடு ஏற்பட கடற்கரையோரமாகக் காணப்பட்ட கண்ணா மரங்களையும், தில்லங் காடுகளையும் வெட்டி சதுப்பு நிலமாக இருந்த கரைச்சை வெளியைத் திருத்தி குடிசைகளைப் போட்டுக் கொண்டு அங்கே மக்கள்குடியோறினார்கள்.

இவ்வாறு வறுமையால் துரத்தப்பட்டு அதன் மூலம் பல அனுபவத்தை கற்றுக் கொண்ட அன்சார் தனக்குக் கிடைத்த கையகலத் துண்டு நிலத்திலே குடிசையைப் போட்டுக்கொண்டு அங்கே குடியேறினான்.

காலஓட்டம் அன்சாரின் உழைப்பை விழுங்கி உடலைச் சருகாக்கி விட்டது. முன்பு போல் சுறுசுறுப்பில்லை. முதுமை உணர்வு அவனிடம் வலுக்கின்றது.

காவி படிந்த பற்கள், மெலிந்த உள்வளைந்த தோற்றம், அழுக்கு படிந்த சாரனும், பெனியனும் அணிந்திருப்பான் அன்சார்.

பாளம் பாளமாய் வெடித்துக் கல்லாய்க் கலட்டியாய் கிடக்கும் நிலத்தைக் கிண்டிக் கிளறிக் கொண்டிருந்தபோது அவனது மனதில் 'நாட்டிலே சமாதானம் பொறந்திட்டுது நிம்மதியாக சீவிக்கலாம் கடல் வலய தடை இனி இருக்காது... கொட்டியாரக் குடாவை உட்டு பொறங்கடலுக்கு போய் கசனா மீன் புடிக்கலாம்... நேவிக்காரன்ட கரைசலும் இருக்காது... வலையும் வள்ளமும் சொந்தமாக இருந்தால் நல்லா தொழில் செய்யலாம்... கடன் தனிசையெல்லாம் கொடுத்திடலாம்...:' நீள... நீளமான நினைவுகள் வந்து அன்சாரை வட்டமிட்டது.

❖ ❖ ❖

அன்சார் கற்றுக்கொண்ட புதிய தொழில்கள் எல்லாவற்றையும் கைவிட்டு விட்டு அவனது பழைய தொழிலான மீன்பிடி தொழிலுக்கு மீண்டான்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். சுபைதாவின் ஏழ்மை நிலையையும் இயலாமையையும் கண்டு இரக்கப்பட்டு வலையையும், வள்ளத்தையும் கடனாக வாங்கி கொடுத்து பிடிக்கின்ற மீனில் மாதா மாதம் தன்னுடைய கடனை அடைக்க வேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்தார் உதுமான் குட்டி.

சுபைதா வறுமையின் வெக்கையினால் பீடிக்கப்பட்டிருந்தாலும் உரோஷத்தையும், தன்மானத்தையும் இழக்காதவள். எல்லையைத் தாண்டினால் தன்னையே மறப்பாள்.

உதுமான்குட்டி மூதூரில் முதன்முதலாக இயந்திரப் படகு கொண்டு வந்து கடற் தொழில் செய்து முன்னேறியவர். இன்றைக்கு அவர் ஒரு முதலாளி. அவருக்குப்பின்னால் அடியாட்கள், கையாட்கள், அரசியல் பலம் எல்லாம் காணப்பட்டதனால் அவர் ஒரு சாதாரணமானவர் அல்லர்.

❖ ❖ ❖

ஏறு கடப்பு வாசலில் யாரோ அழைக்கும் சப்தம் கேட்டது.

"ஆரது...?" என்று கேட்டாள் சுபைதா.

"நாங்க தான்..."

"நாங்கதாண்டா....?"

"வெளியால வந்து பாருங்க...."

"கையில வேலையா இருக்கன். கொங்சம் பொறுங்க வாறன்..."

"திமிறான பேச்சப் பாத்தீங்களா முதலாளி.....?"

"அதை அடக்கத்தான் வந்திருக்கன்"

"ஏய் புள்ள..! பள்ளி தலைவர் வந்திருக்கிறன்...." என்றார் உதுமான்குட்டி.

"உள்ளுக்குள்ள வாங்க... ஏன் கடப்பில நிக்கிறீங்க...?" என்று கூறியபடி வெளியே வந்த சுபைதாவை இடைமறித்து எங்க உண்ட மாப்பிள அன்சார்...?" என்று அதட்டியபடி கேட்டார் உதுமான்குட்டி.

"அவர் மீன்வாடி பக்கம் போய் இருக்கார் மாமா..."

"மாதாமாதம் கடன இறுக்கிறன் எண்டு சொல்லி போட்டு ஆறுமாசமாக ஒரு சத்தத்தையும் காணல்ல என்ன சேட்டையா பன்றீங்க...?"

"காத்தும் கடலும் ஒரமாக இருக்கிறதால கடலில மீன் ஒழுங்காப் படுவுதில்ல. அதனாலதான் தர முடியாம போயிற்றுது கோவிச்சிக்காதீங்க மாமா..."

"மாமாவும், மச்சானும். நேர்மயா நடக்கணும். அந்த நேர்மை ஒனக்கிட்டயும் இல்ல. ஒண்ட புருசனுக்கிட்டயும் இல்ல..."

"அப்படிச் சொல்லாதீங்க மாமா..."

"மறுவா எப்புடிச் சொல்ல. உங்ககிட்ட வெக்கம் ரோஷம் இருந்தாத்தானே...?"

"ஏன் இப்புடியெல்லாம் கதைக்கிறீங்கமாமா. இவ்வளவு காலமும் உங்களுக்கு நாங்க கடனத்தரலியா...?"

"ஓ... ஒழுங்காவா தந்தீங்க அஞ்சும் பத்துமாக... ஒங்கட சீத்துவம் எங்களுக்குத் தெரியாதா...?"

"கொஞ்சம் பொறுங்க அவர் இப்ப வந்திடுவார்..."

"அவர் வந்து என்ன கிழிக்கப் போறாரு...? நீதானே எனக்கிட்ட வந்து வலையையும், வள்ளத்தையும் வாங்கிக்கிட்டுப் போனாய் நீதான் பதில் சொல்லணும்..."

"அதன்டா உண்மதான் மாமா..."

"அதுக்கு ஏத்த மாதிரி நீங்க நடக்கலியே..." என்று குறுக்கிட்டுச் சொன்னார் பள்ளிவாசல் தலைவர்

"தலைவரே... இவகிட்ட கதைச்சி சரிவராது நாம போட்ட திட்டப்படி நடந்தாத்தான் சரி வரும்..."என்றார் உதுமான்குட்டி.

"அப்புடி ஒண்ணும் செஞ்சிடாதிங்க மாமா... ஆண்டவன் உங்களுக்கு நன்மையைத் தருவான்..."

"முதலாளி சொல்றாப்போல நடக்காட்டி பள்ளிவாசலுக்கு விசாரணைக்கு வர வேண்டி இருக்கும்..." என்றார் பள்ளிவாசல் தலைவர்.

"இதுக்கெல்லாம்போய் எதுக்கு பள்ளிவாசலுக்கு இழுக்குறீங்க...?"

"சொல் வார்த்தை கேக்காட்டி... அதுதான் நடக்கும்..."

"நீங்க ரெண்டு பேரும் ஒரு முடிவோடுதான் வந்திருக்கீங்க போல தெரியுது..."

"அப்படித்தான் எண்டு வெச்சி கொள்ளுங்களன்..." என்றார் பள்ளிவாயல் தலைவர்.

"இந்த மாசத்துக்குள்ள உங்கட கணக்கு வழக்கெல்லாம் முடிச்சுடுவோம்... கொஞ்சம் பொறுங்க... ஒன்னும் செஞ்சிடாதீங்க மாமா. புள்ளகுட்டிகள் எல்லாம் பஞ்சம், பசியோட கஷ்டப்பட்டுக் கிடக்குதுகள். நீங்க சொன்னபடி இன்ஸா அல்லாஹ் கணக்கு வழக்கையெல்லாம் முடிச்சுடுவன். அல்லாவுக்காக வேண்டி ஒண்ணும் பண்ணிடாதீங்க...."என்று கெஞ்சினாள் சுபைதா.

"தலைவரே... இவகிட்ட கதச்சிப் புண்ணியமில்லை. வலையையும், வள்ளத்தையும் தூக்குவோம்..."என்றார் உதுமான்குட்டி

"உங்களால ஏலுமா...?" என்று கோட்ட சுபைதாவின் மனசுக்குள் கோபம் ஆணிவேராக இறங்கிப் படர்ந்தது.

"ஏன் ஏலாது...? அதுக்குத்தானே வந்திருக்கிறம்..."

"தூக்குங்க பாப்போம்...?"

"தூங்கினால் என்ன செய்வாய்...?"

"தூக்கினால் இந்த மண்டாதான் பதில் சொல்லும்..."

சுபைதா, தலையை நிமிர்த்தி, பார்வையைக் கூர்மைப்படுத்தி, கண்கள் சிவக்க, புருவங்கள் விரியஆக்ரோஷத்தோடு குடிசைக்கு முன்னால் உள்ள புங்கை மரத்தடியில் சார்த்தி வைக்கப்பட் டிருந்த மண்டாவைக் கையில் எடுத்தாள். அவளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் முதலாளி உதுமான்குட்டி நின்று கொண்டிருந்தார்.

'ஒருநாளைக்கு காலம் மாறத்தான் போவுது. அப்போது எங்களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் தோணிகளும், வலைகளும் சொந்தமாகும்' என்று சுபைதாவின் மனம் சொல்லிக்கொண்டிருந்தது.

பள்ளிவாசல் தலைவரைக் காணவில்லை...!

○○○

# சட்டமொன்று தேவை

அண்டப் பெருவெளியில் அரிசியினுஞ் சிறுபால்
மண்டலத்திலேயோர் மாத்துகளாய் மின்னுகிற
சூரியனார் தந்த சுடரால் உயிர்த்தவர் நாம்.

கார்தந்து நீர்தந்து கடல் தந்து நாம்வாழக்
காடு. மரம். புல்புதர் பூங்காவனங்களும் தந்து.

காற்றை நகர்த்தி. கால நிலைமாற்றி
ஏற்றவொரு சூழல். ஏற்படுத்தி எங்குமுயிர்
தோற்றமுறச் செய்யத். தோன்றியதும் மாந்தர்கள் நாம்

எல்லா நலன்களையும் எம் வசமாயாக்கியதால்
சொல்லிடங்காத் துயரன்றோ வந்ததின்று.

ஓடும் நதியுள்ளே ஓடவிட்டுச் சாக்கடையை
ஓசோன் படலத்தில் ஓட்டை விழுவித்து.
மாசாகிச் சூழல் வளமிழந்து போம்வரைக்கும்
தேசம் பலவற்றில் தீய புகைநிரப்பி.
கார்தடுத்து மாரிபெய்யக் காப்பரணாய் நின்றிட்ட
நெட்டை மரங்கள் நிமிர்ந்து நின்ற கன்மலைகள்
குட்டை. குளம். ஏரி. குன்று. மழைக்காடு
என்று பல அழித்தோம் இன்றிவற்றை மீண்டுபெற
ஓர் குழந்தை பெற்றாலுடன் நடவும் பத்துமரம்
வெட்டுகையிலோர் மரத்தை எட்டு மரம் நடவும்
சட்டமன்றோ தேவை. தாவரங்கள் எட்டேதான்
ஓர் மனிதன் வாழ்வுக்கு உறுதுணையாம் ஆதலினால்
ஊர்கள் திரண்டிவ் வுலகெங்கும் தாவரத்தின்
வேர்திரள வைப்போம் விரைந்து.


**சித்தி கருணானந்தராஜா**

# ஈழத்து முத்துக்குளிப்பும் கடல்கட்டி நாவலும்



**என்.செல்வராஜா**
நூலகவியலாளர், லண்டன்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உலகச் சந்தைகளில் கடல்முத்துக்குப் பிரசித்தம் பெற்றது ஈழத்திருநாடு என்று படித்திருக்கின்றோம். கி.மு.ஆறாம் நூற்றாண்டில் இலங்கை மன்னன் விஜயன் மதுரையை ஆண்ட பாண்டியமன்னனுக்கு அனுப்பி வைத்த பரிசில்களில் ஈழத்து முத்துக் களும் இடம்பெற்றிருந்ததாக மகாவம்சம் கூறுகின்றது. கி.மு. 3ம் நூற் றாண்டில் சந்திரகுப்த மௌரியருடைய அரசவையில் கிரேக்கத் தூதுவராக இருந்த மெகாஸ்தனிஸ் முத்துவளத்தில் இந்தியாவைவிட இலங்கைதான் மேலோங்கியிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.




2013இல் நிந்தவூரிலிருந்து வெளிவந்த 'கிழக்கிலங்கை நாட்டுப்புற முஸ்லிம்களின் பூர்வீகமும் வாழ்வும் வாழ்வாதாரங்களும்' என்ற நூலின் ஆசிரியர் எஸ். முத்துமீரான் அவர்கள் அரேபியாவிலிருந்து வந்த பட்டாணியர்கள் தமது கப்பல் தரைதட்டியதால் காத்தான்குடியில் தங்கிவிட்டனர் என்கிறார். கலிங்க மன்னரால் முத்துக் குளிப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட முக்குவர் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து மட்டக் களப்பில் குடியேறியதாகவும் குறிப்பிடுகிறார்.

இத்தனை சிறப்புமிக்க ஈழத்து முத்துக்களுக்கு மன்னார் குடாக்கடலே விளைநிலமாக காலம்காலமாக இருந்து வந்துள்ளது. இக்கடல் தழுவிடும் கிராமங்களுள் ஒன்றாகிய சிலாவத்துறைதான் கடல்கட்டி நாவலின் நிகழ்களமாகவும் இருக்கின்றது.

மன்னார் குடாக்கடலினுள் அதிகாலையில் சென்று முக் குளித்து முத்துப்பண்ணைகளை, பவளப்பாறைகளை நாடிச் சுழியோடும் இளைஞர்களுக்கு கடலின் ஆழத்தில் காத்திருக்கும் ஆபத்து ஆட்கொல்லிச் சுறாக்களாகும். இந்தச் சுறாக்களின் பார்வையிலிருந்து தப்பி வெற்றிகரமாக முத்துக் குளித்து கடல் படுக்கையில் காத்திருக்கும் தங்கள் வள்ளங்களுக்கு மீண்டுவந்து கரைசேரும்வரை அவர்களுக்குத் தைரியத்தை வழங்குவது அவர்களின் தெய்வ நம்பிக்கையும், அதனோடு தொடர்புபட்ட மாந்திரீக நம்பிக்கையுமாகும். சுழியோடிகளுக்கு சுறாக்களிலிருந்து ஆபத்து நேராத வண்ணம் அவர்கள் முத்துக்குளிக்கும் முத்துப் பண்ணைப்பகுதிகளில் சுறாக்களை வரவிடாது கட்டிப்போடும் மாந்திரீகர்கள், இந்தக்கடல் தழுவிடும் கிராமத்துச் சமூகங்களில் முக்கிய பிரமுகர்களாகக் கருதப்பட்டார்கள். அவர்களின் மந்திரசக்தியின்மீது கிராமத்தவர் வைத்திருக்கும் அசையாத நம்பிக்கையே மீனவர்களுக்குத் தைரியத்தையும், அவர்களை நம்பிக் கரையில் காத்திருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு நிம்மதியையும் தருகின்றது. இத்தகைய மாந்திரீகர்களே "கடல்கட்டி" எனப்படுகின்றார்கள். இத்தகைய ஒரு கடல்கட்டியான ஹபீபுக் கிழவன்தான் இந்தக் கதையின் முக்கிய பாத்திரமாக இருக்கின்றார்.

கடல்கட்டி ஹபீபுவின் பேத்தி மரியம்பீ பிக்கும் முத்துக்குளிக்கும் இளைஞன் இப்ரா ஹிம் ஓமரானுக்கும் இடையே மலரும் கிராமியக் காதலும், அதற்கு ஏற்படுத்தப்படும் தடையும் அதை வெற்றிகொள்ளும் பாங்கும் இங்கு சுவையான கதையாக மலர்கின்றது. ஹபீபுக் கிழவனுடைய நண்பனும் முத்து வியாபாரியுமான காசிம் முஹம்மது ஹபீபுக் கிழவனுக்கு பணத்தாசை காட்டி மரியம் பீபியை இரண்டாம் தாரமாக மணக்க விரும்பும்போது கதை விறுவிறுப்பாகச் செல்லத் தொடங்குகின்றது. காதலுக்கு ஏற்படுத்தப்படும் முட்டுக்கட்டைகள், அதை எதிர்கொள்ளும் செயற்பாடுகள் அனைத்தும் சிலாவத்துறைக் கிராமத்தின் முத்துக் குளிப்போர் சமூகமொன்றின் அன்றாட வாழ்வியல் அனுபவங்களினூடாக அழகாகவும் எளிமையாக நகர்த்திச் செல்லப்படுகின்றன.

சுழியோடிச் சிப்பி சேர்ப்பது முதல் அவற்றுள் தேர்ந்த முத்துக்களை உல கெங்கும் சீராகச் சந்தைப்படுத்தும் வர்த்தகம் வரையிலான நடவடிக்கைகள் அனைத்திலும் பெருந்தொகையான முஸ்லிம்களே பங்கு கொண்டிருந்தனர். இவ்வகையாக தென்னிந் தியா, அரேபியா, பாஹ்ரைன், பாரசீகம் போன்ற நாடுகளுடன் முத்து வணிகத்தில் ஏற்பட்ட தொடர்புகள் வரலாற்றுக் குறியீடு களாக இன்றும் குறிப்பிடத்தக்கனவாகும்.

சுமார் 48 ஆண்டுகளுக்கு முன்னதான இந்த நாவலை எழுதியவர் தமிழறிஞர் எஸ்.எம். கமால்தீன் அவர்களாவார். "முத்துச் சிப்பி" என்ற பெயரில் இந்நாவல் இலங்கையில் தினகரன் நாளிதழில் 1972இல் அமரர் சிவகுருநாதன் காலத்தில் தொடராக வெளிவந்திருந்தது. 30 வருடங்களுக்குப் பின்னர் இதை நூலுருவில் கொண்டுவந்திருந்தார்.

தமிழ் அறிஞர் அமரர் கமால்தீன் அவர்கள் ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிலும், நூலக உலகிலும் அதிகம் பேசப்பட்டவர். கொழும்பு சாஹிரா கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றில் தன் ஆரம்பக்கல்வியைப்பெற்று, இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டமும், நூலகவியலில் டிப்ளோமா பட்டமும் பெற்றவர். பின்னர் கனடா ரொரன்டோ பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் கலை மானிப்பட்டமும் பெற்றவர். தான் மாணவராயிருந்த காலத்தில் பண்டிதர் மு.நல்லதம்பி, சுவாமி விபுலாநந்தர், கலாநிதி க. கணபதிப்பிள்ளை, கலாநிதி சு.வித்தியானந்தன் போன்ற தமிழ் அறிஞர்களிடம் கல்வி கற்றவர்.

யாழ்ப்பாண நூலகம் எரிந்தபோது, அதனுடன் சேர்ந்து அங்கு பாதுகாக்கப் பட்டிருந்த பட்டியல்பேழைகள், மற்றும் முக்கியமான பதிவு ஆவணமான நூல் விபரப்பதிவேடு (Accession Register) என் பனவும் எரிந்து சாம்பலாகிவிட்டிருந்தன. இந்நிலையில் என்ன இருந்தது என்ன அழிந்தது என்று எதுவுமே தெரியாத இருண்ட வெளியில் யாழ்ப்பாண நூலகரும் அவரது உதவியாளர்களும் நிலைகுலைந்து நின்றிருந்த வேளையில், அவர்களுக்கு ஆதரவளித்து. யாழ்ப்பாண நூலகத்துடன் நேரடிச் சம்பந்தம் கொண்டிருந்த அறிஞர்கள் பலரை அணுகி உரையாடி, நூலகத்தின் அழியுண்ட நூல் களின் மற்றும் சொத்துக்களின் விபரங்களை உத்தேசமாகவேனும் மீளக்கணக்கிட்டு சுதந்திரமான அறிக்கையொன்றினை இலங்கைத் தேசிய நூலகத்துக்கும், இலங்கை அரசுக்கும் உடனடியாக அனுப்பி வைத்திருந்தார். இந்த ஆவணம் பின்னாளில் வீரகேசரி உள்ளிட்ட தேசியப் பத்திரிகையிலும் வெளிவந்திருந்தது. இதன்மூலம், அரசாங்கம் மூடிமறைக்க முயற்சிசெய்திருந்த ஒரு வரலாற்று அழிப்பை எரிந்த சூடு தணிவதற்குள் துணிச்சலுடன் அறிவார்ந்தமுறையில் வெளிக்கொண்டு வந்திருந்தார். அறிஞர் கமால்தீனின் இந்தக் காலத்தே உணர்ந்து செய்த நடவடிக்கையால் உருவான அறிக்கைதான் இன்று இந்த நூல கத்தின் அழிவு பற்றியதான முதலாவது அறிவுசார் ஆவணமாக உள்ளது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். தென்னிலங்கை புத்திஜீவிகளின் கண்ணைத் திறக்கவும் இது உதவியிருந்ததெனலாம்.

நிறைவாக, ஈழத்து இலக்கியங்களில் அதிகம் பேசப்படாத ஒரு கதைத்தளம் இந்த முத்துக்குளித்தல் தொடர்பானதாகும். கடல்கட்டியைத் தவிர முத்துக்குளிப்போர் வாழ்வியலைப் படம்பிடிப்பதாக வேறெந்த வொரு ஈழத்தவரின் நாவலும் இதுவரை வெளிவந்துள்ளதாகத் தகவல் இல்லை. மீனவர்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக்காட்டும் செங்கை ஆழியானின் வாடைக்காற்று, அங்கையன் கைலாசநாதனின் கடல்காற்று, போன்ற நாவல்கள் பல வெளி வந்திருந்தாலும், முத்துக்குளிப்பு போன்ற தொழில்நுணுக்கம் நிறைந்த கதைத் தளங்களுடன் தொடர்புபட்ட களங்களில், குறிப்பாக இலங்கையில் முஸ்லீம்களின் குடியேற்றச் சரித்திரத்தின் ஒரு முனைக்குத்

திசைகாட்டியாய் அமைகின்ற இந்த நாவலையொத்த படைப்புக்கள் வெளி வந்திராமை பெரும் மனக்குறையாகும். முத்துக் குளிப்போர் சமூகத்தில் அத் தொழில் அருகி வருகின்ற போதிலும், அதன் அனுப வங்களைத் தன்னகத்தே கொண்ட பல முதியவர்கள் இன்றும் எம்மிடையே வாழக் கூடும். அவர்களை அணுகி அவர்களின் அனுப வங்களை செவிமடுத்து இன்றைய இளம் படைப்பாளிகளாவது கரையோர முஸ்லீம் களின் சமூக வாழ்வியலை மீள்பதிவு செய்வது முக்கியமான வரலாற்றுக் கடமையாகும்.

கட்டுரையுடன் தொடர்புபடாத போதிலும், அதன் சுவைகருதி ஈழத்துப் பெருங்கவிஞர் மகாகவியின் கீழ்க்கண்ட குறும்பாவுடன் இச்சிறு கட்டுரையை நிறைவுசெய்கின்றேன்.

**முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்**
**முன்னாலே வந்துநின்றான் காலன்**
**சத்தமின்றி, வந்தவனின்**
**கைத்தலத்திற் பத்துமுத்தைப் பொத்தி வைத்தான்**
**போனான் முச்சூலன்**

❍❍❍

## நரை முடி நட்டு

கடந்து செல்கிறது காலம்
இன்னமும், காதல் மட்டும்
இன்னமுதூட்டி மகிழ்விக்கிறது
இன்காதலி பக்கத்திலே..!

நீல வானமெங்கும்
வண்ண மேகங்களை
அள்ளி அள்ளி முத்தமிடுகிறது, காற்று
நிலா மட்டும் மாறாமலே நகர்கிறது
என் மீதான உன் காதல் போலவே..!

வாழைத்தோட்டத்து மாமரத்துக் கொம்பிலே
காதல் கிளிகள் இரண்டும், ஜாடை சொல்லி
நம்மைத்தான் பழிக்கின்றன போலும்
உன் கூந்தலுக்குள் ஒளித்துவைத்து
என்னை முத்தமிடுகிறாய் நீ, 'இச்'
சத்தம் கேட்டு வெட்கப்படுகின்றன, அவை..!

காதலர் தின வாழ்த்துகள்.

**-சமரபாகு சீனா உதயகுமார்**

## பகிர்வோம்....



### ஈழமும் தமிழும்

யாழ்ப்பாணத்துக்கு வருந் தமிழ் நாட்டா ருக்கு பின்வருவன போன்ற பல சொற்கள் புதியனவாகத் தோன்றும் : ஒழுங்கை, இடி யப்பம், சொதி, வருத்தம், மணித்தியாலம், கோச்சி, கந்தோர், அப்புக்காத்து, கோப்பி, வெள்ளென, தெண்டித்தல், கதைத்தல், கெதியாக, பொடிச்சி, அலுமாரி, கிழமை, பாவித்தல், சால்வை.

....

மட்டக்களப்புத் தமிழ் வழக்கிலேயுள்ள பல சொற்கள் யாழ்ப்பாணத்தில் இல்லை. இவற்றுள்ளே முடுகு, நறணை, விரசு, உவட்டு, ஏமம், மறுகா, கிறுகு, வண்ணக்கன், முல்லைக்காரன், போடியார் முதலியன குறிப்பிடத்தக்கன.

**– கா.பொ.இரத்தினம்** - *1956 (இலங்கையில் இன்பத் தமிழ்)*

# எப்பொழுதும் உயர்ந்தவர்



நீ.பி.அருளானந்தம்

அமுதன் தன் வாழ்நாளில் பெரியபெரிய மனிதர்களையெல்லாம் சந்தித்திருக்கின்றான். அவர்களுடன் நன்றாக சேர்ந்து இவன் பழகியிருக்கிறான். அவர்களெல்லாம் கட்டுக் கட்டாகப் புத்தகங்களைவைத்துப் படித்த மிகப் பெரிய அறிவாளிகள். இந்தவித தகுதியிலே அவர்களின் மதிப்பை அளவிட்டுச் சொல்லமுடியாது.

அவர்கள் பேசத்தொடங்கிவிட்டால் அறிவின் ஆரவாரம் அடங்கிப் போகிற அளவிற்கு இருக்காது. தெளிவாகத்தான் அப்படியாக சோராமல் அவர்கள் பேசுவார்கள். ஆனாலும் ஆணவ உணர்வு அவர்களது பேச்சில் அடங்கிப் போகாததாகவே வெளிப்பட்டுக் கொண்டிருக்கும். பரபரப்பான இப்படியானவர்களின் பேச்சுக்களைக் காதில் கேட்டு இவர்களெல்லாம் ஒன்றே என்பதுபோலத்தான் முகுந்தனுக்கு இப்போது வெறுப்புதட்டிவிட்டது. இதன் பின்புதான் மௌனம், சாந்தம் போன்ற நற்குணங்கள் யாரிடமும் அப்படிதான் பழகியவர்களிடம் உள்ளது என்று தன் யோசனையிலே அவன் ஆராய பிறகு வெளிக்கிட்டான்.

இவற்றையெல்லாம் யோசித்துப்பார்க்க, சிந்திக்க சிந்திக்க, அப்படி மதிக்கதக்க ஒருவரைத்தான் பழகியவர்களிடமிருந்து அவனால் கண்டுகொள்ளவே முடியவில்லை. ஆனாலும் யோசனையில் மேல் தளத்திற்கு அவன் போனபோது அங்கே ஒருவரை அழகாகக் கண்டடைந்துகொண்டதில் அவன் மனம் ஒரு மலரைப் போலச்சந்தோஷத்தில் விரிந்தது.

ஒரு மனிதன் "சூப்பர்" மனிதனாகக் கணிக்கப்பட வேண்டிய தகுதியைப் பெறவேண்டும் என்றால் அவன் பொறுமை என்ற நற்குணத்தை உடைய வராகவே இருக்கவேண்டும். மனிதருக்கே உரித்தான குணங்களில் மிகமுக்கியமானது பொறுமைதான். அதற்குப் பரிபூரணமானதகுதி உடையவரைத்தான் தன் நினைவிலே இப்போது அவன் கண்டுபிடித்ததில் நிச்சயித்தான்.

தன் கண்ணாலே பார்க்க வாழ்க்கை முழுவதிலும் பொறுமையைகடைபிடித்து நடந்தவர் தன்னைப்பெற்ற தகப்பன்தான் என்பதிலே அதற்கு அத்தாட்சியானகாட்சிகள் அவனுக்கு ஞாபகத்திலே வெளிப்படத் தொடங்கிவிட்டன.

ஒருமனிதனுக்கு அருமையான அனுபவங்கள் தந்த வருடங்களென்றால் அது அவனுடைய

சிறுகதை

இளமைக் காலம்தான். வாழ்வில் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கமுடியுமோ அவ்வளவு அருமையாக அந்தச் சந்தோசத்தை அனுப விக்கக் கூடியவயது இளமைக்காலம் தானே?

ஆனாலும் முகுந்தனுக்குஅந்த வயதிலும் கூட தன்னுடைய தகப்பனை எப்பொழுதும் பார்க்கும் போதும் அவர் மகிழ்ச்சியுடன் முகம் வாடாமல் சிரித்தப்படியே இருக்கிறாரே என்பதில்தான் ஆச்சரியமாக இருந்தது.

“கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் அவர்களின் வாழ்நாள் முழுக்க மனமகிழ்ச்சி யாகவே வாழ்வார்களாம்”. இந்த வசனத்தை ஒருபுத்தகத்திலே அவன் படிந்திருந்தான். அப்படி எழுதப்பட்ட வசனத்திலே என்ன அப்படி ஒருபிழை சொல்லவென்று உள்ளது. பொறுமையோடும் ஏக்கத்தோடும் புழுங்கிக்கொண்டு சில பொழுது சீறியாடும் பாம்புகள் போன்றும் வாழ்பவரை காண்கையிலே தன்னுடைய தந்தை அவர்களிடமிருந்து வேறொருவராக எவ்வளவு ஒருமேம்பட்ட இடத்தில் இருக்கிறார் என்பதை நினைக்க அவனுக்கு அதுபெரிய ஆச்சரியமானதாகவும் இருந்தது.

சிறு குழந்தைகள் கூட சிலபொழுதுகளில் சலிப்பு ஏற்பட்டதான செய்கைகளைசெய்வார்கள். ஆனாலும் முகுந்தனுக்கு தந்தையுடன் அவன் பழகுகின்ற நேரமெல்லாம் சலிப் பையே காணாத மனோநிலையை எப்போதும் அவர் கொண்டிருப்பதாகவே அவரின் ஒவ்வொரு செயல்பாட்டிலுமிருந்து அவன் அறிந்துகொண்டதாக இருந்தான். “இந்தவித இணைப்பு எந்நேரமும் இவருக்கு எப்படிச் சாத்தியம்?” என்பதும் அவனுக்கு ஆராய்தலாகவே இருந்துகொண்டிருந்தது.

முகுந்தன் தகப்பனை இப்படியான ஒரு கணிப்பீடுகளிலே வைத்துக்கொண்டிருந்தாலும் தன்னுடைய தாயையும் ஒருபக்கம் தன் நினைவிலே போட்டுக்கொண்டு அவர் பற்றியும் சிந்திக்காததாய் விட்டுவிடவில்லை.

அவனுக்கு எப்போதும் அம்மாவின் பக்கத்திலிருக்கும்போது முட் செடியின் மேல் அமர்ந்திருப்பதை போலத்தான் வெறுப்பாக இருக்கும். “இப்படி என்னைப்போல் ஒருவயது வந்த வாலிபனை வேறுவீடுகளில் உள்ள அம்மாமார் எந்த சின்னவிசயத்திற்கும் கண்டபடி இப்படி பேசிஏசுவார்களா?”என்றும் அவன் மனத்திலே வெறுப்புடன் நினைப்பான்.

“எந்தஒரு சிறுவிஷயத்திற்கும் ஏதாவது ஒரு குறையைத்தேடிப்பிடித்துக் கொண்டு சலங்கை ஓசைசிலுங்கலைப் போல ஏன் இந்தஅம்மா புறு புறுக்கிறா?” என்றும் அவனுக்கு மனதில் வெறுப்புத் தட்டுவதுண்டு.

முகுந்தனுக்கு நான்கு சகோதரிகள், அவர்கள் தங்களுக்குள்ளே தனித்தனி இருத்தலில்லாத தனிமையைத் தராமல் ஒண்டிக் கொண்டே இருப்பவர்கள்போல சேர்ந்துகொண்டு சந்தோஷமாக பேசிக் கொண்டி ருப்பார்கள். அவர்களுக்குமுன்னாலும் கூர் தீட்டிய பார்வையுடன் வந்துநின்று ‘அடால்ப் ஹிட்லர்’ போன்று ஒரு விரலை காண்பித்தவாறே அவர்களை பேசிக் கலைப்பதை முகுந்தனும் கண்டுதான் இவற்றையெல்லாம் தன் நினைவில் மறக்காது இருந்தான்.

“பொறுமை எனும் குணத்தை தன்னிலே ஒழுங்காக கடைப்பிடித்து அதை ஜீவனுக் குள்ளேயும் செலுத்திவிட்டால் மகோன்னத சக்திகிடைகிறது” என்று தந்தையின் நிலையை பார்த்து அறிந்ததில் முகுந்தனுக்கும் அது நன்றாக பிறகு புரியத்தொடங்கிவிட்டது. இது விதையாக அவனுக்குள் விழ அவனும் அந்த பழக்கத்திலே சிறிதுசிறிதாக வளரத் தொடங்கிவிட்டான். இந்தச் செடியை வாழ்வின் ஆயிரத்தொரு அபாயங்களுக்கிடையிலும் ஒழுங்காக வளரவைக்கவேண்டுமென்றும் மனதிலும் அவன் உறுதியை எடுத்துக் கொண்டான்.

பொறுமையைக் கடைப்பிடிப்பதென்பது மிகச் சுலபமான காரியமல்ல, என்பதை அவன் கண்டுகொள்ளவாக அவனது தந்தை என்னஒரு காரியம் செய்தார் தெரியுமா? அவருக்கு அந் நேரம் வெறுப்பு வியாதியே வரவில்லையே! என்று அவன் அதை பார்த்து புரிந்துகொள்ளக் கூடியதாகத்தான் அந்தச் சம்பவம் நடந்தது.

அன்று முகுந்தனின் சின்ன அக்காள்தான் சமையல் வேலையெல்லாம் செய்தாகவேண்டும் என்றமுறை. அவளுக்கு சமையல் வேலை செய்வதிலே பொறுமை என்பதே இருப்பதில்லை. மும்முரமாக எதையாவது செய்து சமையல் வேலையை முடித்துவிடவேண்டும் என்பதே அவளது ஒரேகுறிக்கோள். இவள் சமையல் வேலைசெய்யும் நாளிலே முகுந்தனின் மூத்தசகோதரி “இன்றைக்கு நான் பக்தி யோடு விரதமிருக்கப் போகிறேன்” என்று எல்லோருக்கும் சொல்லிவிட்டு இருந்துவிடுவாள்.

இவளுக்கு திடீரென எப்படியாக இந்த விரதமிருக்கும் ஞானஒளி வந்தது என்பது அவளது மற்றச் சகோதரிகளுக்கெல்லாம் இது விஷயம் நன்றாகவே விளங்கும். என்றாலும் மற்றச் சகோதரிகள் அவளைப் போல் அன்றைய நாளிலே உணவில் பிரியம் இல்லாமல் பட்டினி கிடந்துகொள்ளமாட்டார்கள். நேரம் கடந்துபோகும்போது "சரியா பசிக்குதே"என்றுசொல்லி தங்கை சமைத்த உணவினை எப்படியோ அவர்கள் சாப்பிடத்தான் செய்வார்கள்.

"என் திறமையை எல்லாம் சமையலில் பயன்படுத்தி நன்றாகத்தான் நான் இன்று சமைத்திருக்கிறேன்"என்று அவளது சகோதரிகளுக்கெல்லாமே அவள் சொல்வதை கேட்டதிலே அப்படியானதான எதுவித ஆர்வமும் வரவில்லை, மகிழ்ச்சியும் கூட வில்லை. அவள் சொன்னதுக்கு அவர்களெல்லாம் "ஓ...ஓ.." என்று பறவைகள் சேர்ந்துபாடுவதைப் போலத்தான் குரலெழுப்பி அவளைக் கிண்டலடித்தார்கள்.

அன்று மதியப்பொழுது சாப்பிடவென்று முகுந்தனின் அப்பா சமயலறைக்கு வந்தார். நீரில் மிதக்கின்ற தாமரை இலையைப் போல முகத்தை குளிர்மையான மகிழ்ச்சி யில் வைத்தப்படி "சாப்பிடலாம் பிள்ளை... சோறு கறியைப் போடுங்கோ தட்டில யம்மா" என்று சொல்லியபடி நிலத்தில் பலகையை இழுத்து வைத்துக் கொண்டு அதிலே பிறகு இருந்தார். அவள் சோறுகறி எல்லாம் தட்டிலேபோட்டு குழம்பையும் பிற்பாடு கலக்கி அகப்பையில் அள்ளி எடுத்து வடிவாக சோற்றில் ஊற்றிவிட்டு கொடுத்தாள். பிறகு அப்பா சாப்பிடுவதை மனத் திருப்தியாக அவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இந்நேரம் "தண்ணீர் குடிப்போம்" என்ற யோசனையோடு முகுந்தனும் குசினிக்குள் போகவந்தான். என்றாலும் அப்பா இப்பொழுது சாப்பிட்டுக்கொண்டிருக்கிறாரே என்று பார்த்து விட்டு அப்படியே குசினிவாசலருகில் அவன் ஒருகணம் நின்றான்.

இன்று சாப்பாட்டில் மச்சக் கறி நண்டுக்கறி என்பதால் நண்டுக் கால்களையெல்லாம் வாயில் வைத்து கடித்துச் சூப்பி அகற்றிச் சக்கையை ஒருபக்கம் வைப்பதிலே அவர் சோறு தின்னாமல் சில வினாடி மினக்கட்டுக் கொண்டிருந்தார்.

இந்த நண்டுக் கறியை சாப்பிடுவதிலே அவருக்கு சுவைவளர நண்டுக் கால் என்ற கணக்கிலே ஒருகட்டை நீட்டத்துண்டை எடுத்து அவர் வாயில் வைத்து–ஒரு உறிஞ்சு உறிஞ்சினார்.

உடனே அவருக்கு அந்தசுவையில் மாற்றம் தெரிந்தது. உடனே அதைவாயிலிருந்து கையிலெடுத்து பார்த்தார். அது என்னவென்று அவருக்கு கண்ணில் பட்டது. விழிப்பின் ஒருசிறுரேகை மூளையிலே அவருக்கு தோன்றிவிட்டது.

"அட இது அட்டையம்மா..." என்று முகம் ஒடுங்கிப் போகாமல் சொல்லி விட்டு, கையிலுள்ளதையும் ஒருபக்கத்தில் போட்டு விட்டு, தொப்பொன்றுவிழுகிறதாய் ஒரு பகடிசிரிப்புச் சிரித்தார். ஆனாலும் இதுகண்டு அவளுக்கு முகம் அப்படியே சாம்பல் ரூபமாகிவிட்டது. அக்காவினது முகத்தையும் தந்தையின் செயலையும் கண்டு முகுந்தனுக்கு சிரிப்பு வந்துவிட்டது. ஆனாலும் அதை அடக்கிக் கொண்டு அந்நேரம் அப்பாவின் பொறுமைக் குணத்தைத்தான் உயர்ந்ததாக நினைத்து மனத்தினுள் அதிசயித்தான்.

அக்கா வேறு கறிசோற்று தட்டில் போட்டு பிறகு அப்பாவுக்கு கொடுத்தாள். "அந்தக் கறியை சட்டியாலிருந்து வெளியால குப்பை யில இனி வீசிவிடம்மா"என்று சொல்லி விட்டு கண்களை திறந்துகொண்டு பார்க்கும் மன அமைதியோடு அப்பாவும் பிறகு சாப்பிட தொடங்கிவிட்டார்.

முகுந்தனும் அங்கே செம்பில் நிறைத்துக் கிடந்த தண்ணீரை எடுத்து நிமிர்ந்தபடி அண்ணாக்காக ஊற்றி நாலைந்து மிடறு குடித்து விட்டு குசினியாலிருந்து வெளியே வெளிக்கிட்டு விட்டான்.

அவனது மனம் இப்போது தந்தையின் குணத்துடன் தன்னை ஐக்கியப் படுத்திக்கொண்டு ஒன்றாகிப் போவதற்கான நிலையில் ஆசைப் பட்டுக் கொண்டிருந்தது. அதற்காக மிக உயர்ந்த ஒன்று தனக்குள்ளாக இப்போது நடந்து கொண்டிருப்பதையும் அக்கணம் அவன் உணர்ந்தான்.

❍❍❍

# சட்டத் தொழில்நான் செய்த அந்நாட்களில்

சட்டத் தொழில்நான்
செய்தஅந் நாட்களில்
முற்றப் பழுத்தவோர்
வெள்ளைக் கிழவிஎன்
சட்டத் தாபனம்
தன்னுள் நுழைந்தனள்
வரவேற் றவளை
வருகெனச் சொல்லி
உரம்பெறு கதிரையில்
இருக்கச் செய்தபின்
"பிரச்சினை என்ன
பேசுக" என்றேன்
"பிரச்சினை என்று
பெரிதாய் ஏதுமில்
பிரச்சினை தீர்க்கப்
பிரக்கி ராசிமார்
பின்னடிக் கின்றார்
பின்நின்று சிரிக்கிறார்
உம்மிடம் போனால்
உதவுவீர் என்கிறார்
நம்பிநான் அதனால்
உம்மிடம் வந்துளேன்
என்றவள் சொன்னதும்
என்னுளம் சிலிர்த்தது
என்னஉம் பிரச்சினை
விளக்குக" என்றேன்
தென்பவள் பெற்றுச்
சொல்லத் தொடங்கினாள்

"பெற்று வளர்த்திடப்
பேறு பெறாததால்
"பெற்"என நல்லொரு
பூனையை வாங்கியே
பெற்ற சேயினும்
பெரிதாய்ப் பேணிநான்
மற்றவர் மெச்சிட
வளர்த்து வந்தேனே!
இற்றைக் கீரெட்டு
ஆண்டுகள் முன்னே
பெற்றுக் கொண்டவோர்
பெற்றிது மறந்திடேல்
பற்றதைத் தவிரப்
பற்றெனக் கேதுமில்
உற்றார் உறவினர்
என்றுமே யாருமில்
மற்றவர் வீடுகள்
எட்டியும் பாராமல்
உற்றவென துணையாய்
இருந்தஎன் பெற்றுச்
சற்றுளம் மாறிய
சாயலைக் காட்டுது
திக்கறி யாமல்
திரிந்தஎன் பூனை
பக்கத்து வீடு
விற்பனை ஆகித்
தெற்கத்தி யார்கள்
குடிவந்த பின்னர்
எக்கறி சமைத்துநான்

அதற்குண விடினும்
நக்கியும் பார்க்க
நாணுதென் சொலநான்?
அக்கறை யோடே
அயல்மனை நாடுது
காலையில் போனால்
மாலைதான் மீளுது
மாலைப் பாலையும்
மாந்த மறுக்குது
அயலார் உணவினில்
மயங்கிஏன் பெற்றுத்
துயர்எனக் கீந்து
துளைக்குதென் உளத்தைத்
துயர்பொறுக் காமல்
அயல்வீ டேகிநான்
நயமாய்க் கொட்டினேன்
நலியுமென் உளத்தை
உளையும்என் உளத்தை
உணரா அயலார்
பிழைதமில் இல்லை
எனும்படி பேசினார்
இழிமொழி பேசியே
இதனையும் சொன்னார் :
"அழைக்கவோ இலைநாம்
அதுவாய் வருகுது
குழைத்தவூன் உணவு
கொடுப்பதும் இலைநாம்
கலைக்கவோ நமக்குக்
கல்மனம் இலாததால்
விலக்கி விரட்டிட
முடியா திருக்குது.

**வழக்கறிஞர் செல்லத்தம்பி சிறீக்கந்தராசா**

விலைக்கு வாங்கநாம்
விருப்பமாய் இருக்கிறோம்
விலைஎது வாயினும்
சொல்லுக தருகிறோம்"
என்றவர் சொல்லி
இறுமாந் திருக்கிறார்.
பொன்றுதென் உள்ளம்
பேதுறு கின்றேன்
என்றன் உடைமையை
அபகரிக் கிறார்என
மன்றினில் வழக்குத்
தொடுத்தென் உரிமையை
வென்றிடல் வேண்டும்"
என்றனள் முதியோள்
உரிமையை மீறினார்
என்றிடல் முறையோ?
மன்றிதை ஏற்குமா?
மறுகிற்று என்னுளம்
இன்றிதைச் சொன்னால்
இனைகுவள் இவளென
வந்தவள் தன்னை
மகிழ்த்திட வரும்பிநான்
நொந்தவள் வீடு
திரும்பா வண்ணம்
மன்றினில் வழக்குத்
தொடுப்பதன் முன்னர்
நன்றாய் அவர்க்கொரு
கடிதம் வரைந்து
மன்றினை நாடிடும்
மனம்உளோம் என்றும்
மன்றில் வழக்கிடின்
வருந்தீங்கும் உணர்த்திக்
கன்றிடும் உன்துயர்
களைவேன் அஞ்சேல்"
என்றுநான் உரைத்ததும்
உவந்தனள் கிழவி
சென்றுநீர் வருகெனச்
செப்பிநான் எழுந்ததும்
"உன்றன் கூலி
எவ்வள வெ"ன்றனள்
"வென்றி கிடைத்திடின்
வாங்குவேன்" என்று
நன்றிநான் நவின்று
நடந்துபோய் அனுப்பினேன்.

---

## அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி – 2020

(அனுசரணை : செம்பியன் செல்வன் குடும்பத்தினர்)



**முதற் பரிசு : ரூபா 5000 /=**

**இரண்டாம் பரிசு: ரூபா 3000/=**

**மூன்றாம் பரிசு: ரூபா 2000/=**

ஏனைய ஏழு சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

### போட்டிக்கான விதிகள்

**சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல்வேண்டும்.**

**போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்தல்வேண்டும்.**

**தபால் உறையின் இடது பக்க மூலையில்**
**"அமரர் செம்பியன் செல்வன் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி" எனக் குறிப்பிடப்படல்வேண்டும்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:** ஞானம் அலுவலகம் - 3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 06.

**போட்டி முடிவுத் திகதி : 06.04.2020**

முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது. – **ஆசிரியர்**



# நவதாராளவாதமும் கல்வி ஏற்பாடுகளும்

பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

ஒருநாட்டில் ஏற்றுக் கொள்ளப்படும் பொருளாதார அரசியல் தத்துவங்களிலிருந்து அந்நாட்டின் கல்விமுறைகள் தப்பிச்செல்லமுடியாது. முதலாளித்துவம், பொதுவுடமை, பொதுமக்கள்நலன் கருதியஅரசு, நவதாராளவாதம் போன்ற சித்தாந்தங்களுக்கேற்பக் கல்விமுறைகளும் நெகிழ்ந்துகொடுக்க நேரிட்டதென்பது வரலாறு. 1980கள்வரை நடைமுறையிலிருந்த நலனளித்தல் கோட்பாடு (Welfare state) இலவசக்கல்வி, இலவசமருத்துவம், வறுமைநிவாரணம் (ஜனசவிய / சமுர்த்தி) மற்றும் பல நலன்கருதிய சேவைகளுக்கு இடமளித்தன. ஆயினும் பல்வேறுகாரணங்கள் இத்தகைய நலனளித்தல் கோட்பாடு வீழ்ச்சியடைந்து நவதாராளவாதக் கோட்பாடுகள் முன்னிலைவகித்தன. இக்கோட்பாடு கல்வித்துறையில் ஏற்படுத்திய தாக்கங்கள் மாற்றங்கள் பற்றியதே இக்கட்டுரையாகும்.

## நலனளித்தல் கோட்பாட்டின்வீழ்ச்சி

இதற்கான சிலகாரணங்களைச் சுருக்கமாக நோக்கலாம்.

1) தொழிலாளர்களுக்குச் சம்பளங்கள் அதிகரித்தமையால் உற்பத்திச் செலவுகள் அதிகரித்தன.
2) தொழிலாளர் இயக்கம் தீவிரமயமாகி ஊழியர்கள் நிர்வாகத்தில் மாற்றங்களைக் கோரின; நிர்வாகத்தில் தமது பங்கையும் கோரினர்.
3) தொழிற்சங்கங்களில் வேலைகளை ஒழுங்குசெய்வதில் தொழில் நுட்பப் பிரச்சனைகள் எழுந்தன.
4) சர்வதேசப் போட்டியின் காரணமாக ஏகபோகக் கம்பனிகள் அச்சுறுத்தலுக்காளாகின.
5) புதிய தகவல் தொழில் நுட்பவளர்ச்சியின் காரணமாக தொழிலாளர்களைப் புதிய முறையில் கட்டுப்படுத்தவேண்டியதாயிற்று.

இந்த நெருக்கடியின் காரணமாக, 1980களிலும் மூலதனத்தில் அமைப்பிலும் உற்பத்தி ஏற்பாட்டிலும் பலமாற்றங்கள் நிகழ்ந்தன. அதேவேளையில் அரசியல் சித்தாந்த ரீதியாகப் புதிய தாராண்மைவாதக் கொள்கைகள் எழுந்தன. 1980களின் இறுதியில் சோவியத் யூனியனினதும் கிழக்கைரோப்பாவின் வீழ்ச்சியுடனும் புதியதாராண்மைவாதக் கொள்கைகள் உலகெங்கும் ஆதிக்கம் செலுத்தின.

முதலாளித்தவநோக்கில் சமூக உடைமைக் கொள்கையின் அச்சுறுத்தல் நீங்கவே, அதுமேலும் வசதிசெய்தது.

நவதாராள சிந்தனையைப் பயன்படுத்தி முதலாளித்துவவாதிகள் புதியசமூகக் கட்டுப்பாட்டுமுறைகளைக் கொண்டுவர நவதானிராவாதம் உதவியது என்பது மாக்சீயர் கருத்து. தொழிலாளர் மற்றும் சமூகஉரிமைகள் சிதைவடைந்தன; தொழிற்சங்க இயக்கங்களும் சங்கமயமானதும். எதிர்ப்புக்குள்ளாயின. மூலதனத்தின் நலன்களுக்கும் விழுமியங்களுக்கும் எதிரான சிந்தனைகள் எதிர்க்கப்பட்டன. பிரித்தானியாவில் மார்கிரட் தச்சர் காலத்திலும் (1979 -1990)

---

**நாட்டின் சகல பிரச்சனைகளையும் அரசாங்கமே தீர்க்கவேண்டும் என்கிறார்கள்.**
**ஆனால் பிரச்சினையே அரசாங்கம்தான்** - றொனால்ட் றீகன்

ஐக்கிய அமெரிக்காவில் றீகன் காலத்திலும் *(1981 -1989)* பழையசிந்தனைகள் முடிவுக்கு வந்து நவதாராளவாதம் அறிமுகமாயிற்று.

கோளமயமாக்கப்பட்ட உலகில் நவதாராள வாதம் சந்தையின் தீர்மானங் களுக்கு முக்கியத்துவமளித்தது; உரிமை களை ஒழுங்கு படுத்தும் அரசின் உரிமை வீழ்ச்சிகண்டது; பல்தேசியக் கம்பனிகளின் அதிகாரத்தின்கீழ் மூலதனம் வந்தது. இவ்வகையில் நவதாராள வாதத்தின் அம்சங்களை சுருக்கமாகநோக்கலாம்:

*1)*அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவ னங்களைத் தனியார் மயப்படுத்தல்

*2)* எஞ்சிய அரசாங்கநிறுவனங்கள் தனியார்கம்பனிகள் போன்று பெறுபேறுகளை மையமாகக் கொண்டு இயங்கவேண்டும்

*3)* அரசாங்கம் பொதுசனசேவைகளுக்கான செலவினங்களைக் குறைக்கவேண்டும்.

*4)*சகல அரசாங்க செயற்றிட்டங்களும் சுய நிறைவுடன்/ இலாபத்துடன் இயங்க வினைத்திறனை மேம்படுத்தவேண்டும்.

*5)* பொதுத்துறை(அரசாங்க)யைவிட சந்தை சக்திகளே பிரதானமானவை. அதில் அரசதலையீடு இருக்கக் கூடாது.

நவதாராளவாத சிந்தனை பொருளாதார மனிதனுக்கு முக்கியத்துவமளிக்கிறது. சமூகநலன், சமூகமேம்பாடு, என்னும் கருத்துக் கள் பின்தள்ளப்படுகின்றன. தனியாட்கள் தமது திறன்களை மேம்படுத்தி, அதனூடாகத் தமது சமூக அந்தஸ்த்தை மேம்படுத்திக் கொள்ளவேண்டும். அவர்கள் வெற்றிபெறுவதும் தோல்வியடைவதும் அவர் கைகளிலே உண்டு. சமூகநன்மைக்குப் பதிலாக தனியாளின் பொறுப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

இவ்வாறான சிந்தனைமாற்றத்துடன் சர்வதேச மூலதனத்தின் வருகைக்கும் பல்தேசியக் கம்பனிகள் தொழில் தொடங்க வாய்ப்புகளை வழங்குவதும் இந்தத் தாராண்மைவாதக் கொள்கையின் வேறுசில அம்சங்களாகும்.

## கல்விமுறைமீதானதாக்கம்

இன்று விரும்பியோ விரும்பாமலோ பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நவதாராள வாதம் கல்வித்துறையில் முக்கிய செல்வாக்கைச் செலுத்திவருகிறது. கல்வியின் வழமையான சிந்தனைகளும் மனிதநேய நோக்கங்களும் கைவிடப்பட்டு, கோளமயமாக்கப்பட்ட பொருளாதாரமுறையில் வாழ்வதற்கான திறன்களை வழங்கும் முறையில் கல்வித்திட்டங்கள் மாற்றம்பெற்றுவருகின்றன. நவதாராளவாதம் வலியுறுத்தும் பொருளாதார உற்பத்திப்பயனுடைய மனிதனை உருவாக்கு வதே கல்வியின் நோக்கம் என்று கொள்கைத் திட்டமிடுவோர் மட்டுமன்றி பெற்றோர்களும் இன்று வலியுறுத்துகின்றனர். கல்விமுறையில் பாட ஏற்பாட்டைப் பொருளாதார மயப்படுத்தல் பயன்பாட்டுப் பாடஏற்பாடு 'புதியதொழில்சார் வாதம்','தொழில்நுட்பக் கருவிவாதம்' போன்ற புதிய கருத்தாக்கங்கள் இன்று பயன்படுத்தப் படுவது குறிப்பிடத்தக்கது இவை நவதாராள வாதப் பொருளாதாரத்துக்குப் பொருத்தமான கல்வித்துறைக் கருத்துக்களாகும்

இன்று ஜோன் டுயி ( ஐக்கியஅமெரிக்கா), ரூசோ (பிரான்ஸ்), மகாத்மாகாந்தி, தாகூர் போன்ற சிந்தனையாளர்களின் கல்விக் கோட்பாடுகள் இருக்கத்தக்கதாய் அரசாங்கங்கள் தனியார் வர்த்தகசங்கங்களிடமும் அமைப்புகளிடமும் கல்வித்துறைச் சீர்திருத்தங்களுக்கான ஆலோசனைகளை நாடுகின்றன. கல்விச் சீர்திருத்த ஆலோசனைச்சபைகளில் அரசாங் கங்கள் இவர்களுக்கு விசேட பிரதிநிதித் துவத்தையும் வழங்குகின்றன. (இலங்கையில் வர்த்தக சேம்பரும் இந்தியாவில் தொழில் அதிபர் அசெம்பிளியும் கல்வி தொடர்பான ஆலோசனைகளை அறிக்கைகளை வெளியிட் டுள்ளனர் (பிர்லா- அம்பானி அறிக்கை உட்பட). இந்த பிர்லாஅம்பானி அறிக்கை வலியுறுத்திய அம்சங்களாவன: சந்தை இலக்கைக்கொண்ட கல்வி, தனியார் உயர்கல்விக்கு ஊக்கம், வெளிநாட்டு முதலீட்டுக்கு ஊக்கமளித்து உயர்கல்வியை விரிவுசெய்தல், கல்விக் கூடங்களை உயர்த்துதல், மாணவர் அரசியலுக்கு முற்றுப்புள்ளிவைத்தல். இவற்றில் நவதாராளவாத அம்சங்களின் பாதிப்பை உணரலாம். கல்வியை வணிகமயமாக்குவது என்பது நவதாராளவாதத்தின் பிரதான பரிந்துரை. இவ்வாறே இலங்கையின் வர்த்தக சம்மேளனம் பாடசாலைக்கல்வி தொழிற்திறன்களையும் உற்பத்தி நோக்கினையும் பிரதானமாகத் தாம் வழங்கும் வேலைவாய்ப்புகளுக்குப் பொருத்தமானவர்களை உருவாக்க வேண்டு மென்று கூறியது.

மாறிவரும் (தனியார் துறை) பொருளாதாரச் சூழ்நிலைக்குப் பொருத்தமானவர்களை உருவாக்கும் நோக்குடன், அவுஸ்திரேலியாவின் புதியபாடத்திட்டம் வலியுறுத்தும் தேர்ச்சிகள், இத்தகைய போக்குகளுக்கு ஒரு உதாரணம்.

அத்தேர்ச்சிகளாவன: எழுத்தறிவு, எண்ணறிவு, தகவல்- தொடர்பாடல், தொழிநுட்பம், படைப் பாற்றல், திறனாய்வுச் சிந்தனை தனியார் மற்றும் சமூகத்திறன், பன்மைக்கலாசாரப் புரிந்துணர்வு ஒழுக்கம், பண்பு போன்றன.

## இலங்கை

இலங்கையின் கல்விமுறையில் தனியார் துறைப்பங்களிப்பை சுட்டிக்காட்டும் சர்வதேசப் பாடசாலைகள், அதிகதொகையான தனியார் உயர்கல்வி நிலையங்கள், அவைபெற்றுள்ள அங்கீகாரங்கள், ஆங்கிலமொழிக் கல்விக்கான வாய்ப்புகளை அரசாங்கப் பாடசாலைகளிலும் வழங்கப்படல், ஆங்கிலமொழியும் தகவல் தொழில்நுட்பமும் பெற்றுவரும் முக்கியத்துவம் போன்றன நவதாராளவாத சிந்தனைகளின் பாதிப்புகளை உணர்த்துவன.

வழமையாக, சுதந்திரத்தின் பின்னர் நாட்டின் கல்வித்துறைச் சாதனைகளாகக் குறிப்பிடப்படும் இலவசக் கல்வி, தாய் மொழிக்கல்வி, அரசாங்கக் கல்விமுறை என்பன நவதாராளவாதக் கோட்பாட்டின் காரணமாகச் சிதைவடைந்து வருவதையே அண்மைக்காலப் போக்குகள் காட்டுகின்றன.

இதில் மற்றொரு முக்கிய அம்சம் இத்தகைய கல்வித்துறை மாற்றங்களுக்கு விரிவான எதிர்ப்பு எதுவும் காட்டப்படாமையாகும். அவ்வப்போது இடதுசாரி ஆசிரிய தொழிற்சங்கங்கள், ஜே.வி.பி. கட்சி, பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினர் ஆகியோரினால் எதிர்ப்பு ஊர்வலங்கள், அறிக்கைகள் என்பனவற்றைக் காணமுடிகின்றது. சாதாரண மத்திய வகுப்புப் பெற்றோரும் ஆங்கிலக்கல்வியை வழங்கும் சர்வதேசப் பாடசாலைகளை நாடுகின்றனர். 20000 மாணவர்கள்வரை ஆங்கிலத்தில் உயர்கல்விபெற வெளிநாடு செல்கின்றனர். பல ஆயிரக்கணக்கான இலங்கை மாணவர்கள் உள்ளூரில் உள்ள தனியார் உயர்கல்வி நிலையங்களில் பயிலுகின்றனர். (இந்நிலையங்களின் தொகை, மாணவர் தொகைபற்றிய விபரங்கள் கிடைப்பதற்கில்லை)

இந்த சர்வதேசப் பாடசாலைகளும் தனியார் உயர்கல்வி நிலையங்களும் வியாபார நிலையங்களாகப் (கம்பனிகள் பதிவாளரிடம்) பதிவுசெய்யப்பட்டுள்ளன. கல்வி அமைச்சோ அல்லது உயர்கல்வியமைச்சோ இவற்றைக் கட்டுப்படுத்த எந்தப் பொறிமுறையையும் கொண்டிருக்கவில்லை. (சென்ற அரசாங்க காலத்தில் -2018இல் தேசியகல்வி ஆணைக்குழுவானது சர்வதேசப் பாடசாலை களைக் கட்டுப்படுத்தும் ஏற்பாடுகள் பற்றிய யோசனைகளை ஜனாதிபதிக்கு வழங்கி யிருந்தது.

### உலகவங்கியின் நவதாராளவாதக் கல்வி ஆலோசனைகள்

இலங்கையின் உயர்கல்வியானது சந்தைத் தேவைகளுக்குப் பொருந்தாதவை. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கேற்ற அளவுக்கு வேலைவாய்ப்புகள் வளர்ச்சி பெறவில்லை. இதனால் 19-29 வயதுக்கிடைப்பட்ட வயதுடையவர்களின் வேலையின்மை சதவிதம் 26-34 ஆகும்!

> ‘தனியார் துறையுடனான தொடர்புகள் இல்லாததால் பல்கலைக்கழகங்களின் கல்வி அதிக அளவுக்கு ஏட்டுக் கல்வியாக உள்ளது’’
>
> கல்வித்துறையில் தனியார் துறையினர் முதலீடுகள் தொடர்பான வாய்ப்புகள் விரிவுசெய்யப்படல் வேண்டும்!
>
> *-World Bank, Building the SriLankanKnoledge Economy (2007)*

இலங்கையின் கல்விமுறையிலும் பொருளாதார முறைக்குத் தேவையான மென் திறன்கள் பற்றி அதிகம் பேசப்படுகிறது. இத்திறன்களின்றி மாணவர்கள் தொழிற் சந்தையில் சேர்ந்துகொள்ளமுடியாது என்பதால், இன்று ஆசிரியர்களுக்கு மென்திறன்பயிற்சி வழங்கப்படுகிறது. வழமையான மரபுவழி பாடஏற்பாட்டிற்குப் பதிலாக STEM எனப்படும் விஞ்ஞான தொழிநுட்ப கணிதபொறியியல் கல்வி வலியுறுத்தப்படுகின்றது. இதனால் தேசிய வரலாறு, சமயம், அழகியல் போன்ற பாடங்கள், பின்தள்ளப்படும் நிலைகாணப்படுகின்றது. 2007ஆம் ஆண்டு உலகவங்கி வெளியிட்ட ஒரு முக்கிய அறிக்கை ‘இலங்கையில் அறிவுப் பொருளாதாரமும் கல்வியும்’ என்பதாகும். இதில் இலங்கையின் கல்விமுறை எந்த அளவுக்கு அறிவுப் பொருளாதாரத்தை ஏற்படுத்தப் பொருத்தமானது? அதிலுள்ள பற்றாக்குறைகள் எவை என்னும் விடயங்கள் விபரமாக ஆராயப்பட்டன. இவையாவும் நவதாராளமயமாக்கக் கொள்கைகள் இலங்கை யின் கல்விமுறையில் ஊடுருவி இருப்பதற்கான உதாரணங்களாகும்.

எவ்வாறாயினும் இன்று 40இலட்சம் பிள்ளைகள்வரை அரசாங்கப் பாடசாலைகளிலே கல்வி பயில்கின்றனர். 250 சர்வதேசப் பாடசாலைகள் ஆங்கில மொழிவழியில் கல்விகற்போர் ஏறத்தாழ ஒரு இலட்சம் மட்டுமே. (இவ்விவரங்கள் ஊகம் மட்டுமே) எனவே நவதாராளவாதத்தின் பிரதான அம்சமான தனியார் மயமாக்கம் பாடசாலைக் கல்வியில் சிறிதளவு இடம் பெற்றுள்ளது. எவ்வாறாயினும் இலங்கையின் கல்விச் சட்டங்களின்படி 5-16 வயதுப் பிள்ளைகளுக்கு அரசாங்க நிறுவனங்கள் மட்டுமே கல்வி வழங்கமுடியும். இவ்வாறு கல்விவழங்கும் தனியார் நிறுவனங்கள் (சர்வதேசப் பாடசாலைகள்) இச்சட்டஏற்பாடுகளுக்கு முரணானவை என்பது யாவருக்கும் தெரிந்ததே.

மறுபுறம் நவதாராளவாதக் கொள்கையின் தாக்கத்தின் காரணமாக பல சிரமங்களின் பின் பாடசாலைக் கல்விமுறை முழுவதிலும் தாய்மொழியைப் பயிற்றுமொழியாக்கிய இலங்கையரசு 2000ஆம் ஆண்டுகளில் இடைநிலையில் ஆங்கிலமொழியையும் பயிற்றுமொழியாக்கியது. எனினும் இது சிலபாடசாலைகளுக்கும் சிலபாடங்களுக்கும் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. மொத்தத்தில், நவதாரா ளவாதத்தின் அம்சங்கள் கல்விமுறையில் படிந்துவருவதை இனங்காணமுடிகிறது.

○○○

## பகிர்வோம்....

### ஈழமும் தமிழும்



யாழ் மன்னர் ஆட்சிக் காலத்திலே **செக ராசசேகர வைத்தியம்** எனும் ஆயுள்வேத நூல் **செகராசசேகர மன்னனா**ல் தொகுக்கப்பெற்றது.

"இயம்பிய குடலுமூனு மென்பு நாடிகளுமுற்றுஞ்
செயம்பெறு சிங்கைநாடன் செகராச சேகரன்றா
னுயர்ந்த வாள் வடக்கராக முருட்டிய களத்தின் மீதே
அயஞ் சிறிதுளது தீர அளந்து கண்டறிந்ததாமே"

(**செகராசசேகரம்** – பாடல் 22)

என்ற பாடலின் வாயிலாக சிங்கை நாட்டு செகராசசேகர மன்னன் யுத்தகளத்திலே இறந்த வீரர்களின் உடலை வெட்டி குடல், தசை, என்புகளின் தன்மைகளை ஆராய்ந்து பரிசோதித்ததைப் பதிவுசெய்துள்ளது.

## தொட்டுச் தொடாய்

1. மேலெழுந்தது பறவை சில
கவிதைகளை எழுதிவிட்டு
**உதிர்ந்த சிறகுகள்**

2. பாதுகாத்து பாவித்து
நேர்த்தியான வாழ்க்கை
பாவித்தபின் வீசப்பட்டது
சுற்றுச்சூழல் சீரழிவு
**உலகமயமாக்கல்**

3. தீராத் தாகம் மக்களின் வலி
நித்தம் மோகம் பிற நிதிகள்
**தமிழர் பிரதிநிதிகள்**

4. ஓலைக் குடிசை ஓட்டைக்
கூரை அடைக்கும் ஆர்வ
மின்றி மனம்
**வீட்டுக்குள் நிலவு**

5. விச விருட்சங்கள் பழம்
தின்றுபோட்ட விதை
**அரசியல்வாதிகள்**

6. வீழ்ந்து பெருமரம்
இயற்கை இரங்கல் மழை
**காளான்கள் சிரித்தன.**

7. பரிணாம வளர்ச்சி
வால் உதிர்ந்து மதம்
முளைத்தது
**மனிதன்.**

8. நகரும் காட்சிகள்
வளர்த்த உறவுகள்
கண்ணெதிரே
**இரயில் பயணம்**

9. தேவேந்திரமுனை வெளிச்சம்
மதசுதந்திரம் பௌத்தர்கள்
பாதுகாப்பு
**ஆழிச் சுழலில் பருத்திமுனை**

**கனகசபாபதி செல்வனேசன்**
**அல்வாய்**

# நினைவில் நிழலாடும் இலக்கியச் செல்வர்கள்

## இலங்கையில் வெள்ளி மகுடம் சூட இருந்த தமிழகம் பாவேந்தர்



தமிழ்மணி, தேசத்தின் கண்
மானா மக்கீன்

தமிழக கலைமகள் போல காணப்பட்ட ஒரு கால 'அமுதசுரபியின்' ஆசிரியராகவும் இன்னொரு கால இலக்கிய பீடம் இதழாசிரியராகவும் திகழ்ந்த வரலாற்று நாவலாளர் கலைமாமணி திரு. விக்ரமன் சு. வேம்பு தனது இலக்கிய பீடம் சஞ்சிகையின் 38 ஆவது 2014 இதழின் 38 ஆம் பக்கத்தில் ஒரு கவிஞரது கட்டுரையைப் பிரசுரித்துள்ளார்.

அதில் இலங்கை இலக்கிய நெஞ்சங்களுக்கு கிளுகிளுப்பூட்டி யிருப்பது நம்பமுடியாமலும், நம்பித்தான் ஆகவேண்டியும் உள்ளது. அந்தப் பகுதியை அப்படியே இதன் கீழ் மறு பிரசுரத்திற்குள்ளாக்குகின்றேன்.

பாவேந்தர் அவர்கள் தம் கையில் வைத்திருந்த ஒரு கடிதத்தை என்னிடம் நீட்டினார். நான் அதை வாங்கிப் படித்தேன் உற்சாகம் கரைபுரண்டது "ஐயா! உங்கள் எழுபத்தைந்தாம் வயது பிறந்த நாளில் உங்களுக்கு வெள்ளி மகுடம் சூட்டவிருப்பதாக இலங்கை தமிழர்களின் விருப்பத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். மிக்க மகிழ்ச்சி ஐயா!" என்று கூறி என் வாழ்த்துக்களையும் வழங்கினேன் நாட்கள் சில சென்றன.

வழக்கம்போல பணி தொடரப் பாவேந்தர் இல்லத்துக்கு சென்றேன். என் வருகைக்காக காத்திருந்தவர் அன்று வந்த கடிதத்தைக் கொடுத்தார் படித்துப் பார்த்தேன். அன்று தமிழர் போராட்டம் காரணமாக முடிசூட்டு விழா தேதி ஒத்தி வைக்கப்பட்டிருப்பதான செய்தி அதில் கண்டிருந்தது. இந்தச் செய்தியை குறித்து பாவேந்தர் அவர்கள் எவ்வித சலனமுமின்றி என்னைப் பார்த்தார்.

"என்ன, கடதாசியை படிச்சியா?" என்று அசாதாரணமாகக் கேட்டார்.

"கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்றுதான் வருத்தப்படுகிறேன்" என்று பதிலளித்தேன்.

'பொக் ' கென்று ஒரு சிரிப்பை உதிர்த்தார்.

" நீ பச்சை புள்ளை அனுபவம் இல்லை இதெல்லாம் வாழ்க்கையிலே நடக்கிறது சகஜம்தான். இதுக்காக நீ ஏன் வருத்தப்படறே ?" என்று என்னைச் சமாதானப்படுத்தினார். அவருடைய மனப்பக்குவத்தை அப்போதுதான் உணர்ந்து கொண்டேன்.

மேற்கண்ட இடுகைக்குரியவர் 'குடந்தை புகழேந்தி' என்ற கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் தனி உதவியாளராக இறுதிக்காலம்வரை தொண்டாற்றியவர்.

பாவேந்தர் அது எழுபத்தைந்தாம் அகவையில் இலங்கையில் வெள்ளி மகுடம் சூட்டி விழா நடத்த எத்தனித்தவர்கள் யார்? அவர்கள் எப்பகுதி? எந்த இடத்தில் உத்தேசித்திருந்தார்கள்?- என்றெல்லாம் நூற்றுக்கணக்கான கேள்விகள் சீறிப் பாய்கின்றன.

விவரம் விளக்கம் தர இன்றைய பொழுதில் யார் எங்குள்ளரோ? இந்த தகவலுடன், இன்னொன்றையும் 'குடந்தை புகழேந்தி' வழங்கி ஆதங்கம் கொள்ள வைத்துள்ளார்.

பாரதியார் படத்திற்காக உரையாடலை இராப்பகலாக எழுதி முடித்தார். அதற்கென ஒரு குழுவையும் அமைத்தார். அதில் பாரதியாரின் மகள் தங்கம்மா பாரதி, சகுந்தலா பாரதி, டைரக்டர் ஏ .டி கிருஷ்ணசாமி, கே .ஜி இராதாமணாளன், நாரண துரைக் கண்ணன் போன்றவர்கள் இருந்தனர்.

"இதை பார்த்தாயா? பாரதியார் படத்திற்கான உரையாடல் முழுமையும் எழுதி முடிச்சுட்டேன். இதிலே எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கு தெரியுமா?" என்று தம் உள்ளப் பூரிப்பை வெளிப்படுத்தினார்.

நான் அவர் மேலும் செய்திகள் கூறவிருப்பதைப் அவர் முகத்தையே பார்த்தேன். "பாரதியின் வாழ்க்கை வரலாற்றை உள்ளது உள்ளபடி மக்கள் அறியச் செய்யணுங்கிறது தான் என் ஆசை. இதிலே அரசியல் சாயம் கலந்துடப்படாது. இந்தப் பட முயற்சி வெற்றி பெற்றால் என் ஆயுளில் நான் செய்த பெரிய சாதனைன்னு நினைப்பேன். இது என் கடமை. என் உடல் நிலையைக் கூட சட்டை பண்ணாம இந்த வேலையைச் செய்து முடிச்சிருக்கேன்."

பாரதியாரின் திரைப்படம் நல்லமுறையில் வெளிவந்து அவரைப் பற்றி மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதே அவருடைய ஆசை. அவர் 19- 4- 1964 களில் அங்கேயே மறைந்தார். பாரதியார் படம் முழுமை பெறாமலேயே சோக முடிவுக்கு உள்ளானது அவர்தம் வாழ்க்கையைப்போல.

○○○

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்

பேராசிரியர் துரை மனோகரன்



## விதியை வெல்லவேண்டும்

இலங்கைத் தமிழரின் தலைவிதி நமது நாட்டு அரசுகளினால் எப்போதும் ஒரேமாதிரியாகத் தான் எழுதப்பட்டுவந்துள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக, அண்மையில் இராஜாங்க அமைச்சர் ஒருவரின் கூற்றும் அமைந்துள்ளது. 'அரசியல் தீர்வு குறித்து தமிழ்க் கூட்டமைப்பினர் அரசாங்கத்திற்கு ஒருபோதும் அழுத்தம் பிரயோகிக்க முடியாது. அரசியல் தீர்வை வழங்குவதாகக் குறிப்பிட்டு ஜனாதிபதி ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தவில்லை' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் சுதந்திரத்தின் பின் இதுவரை காலமும் நாட்டை ஆட்சிசெய்துவந்துள்ள அரசுகள், தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக வாக்குறுதி களை அள்ளியள்ளி வீசுவதும், காலப்போக்கில் வாக்குமீறுவதும் தொடர்ந்து நடந்துவந்துள்ளன. ஆயினும், கடந்தகால அரசுகளின் பிரதிநிதிகள் எவரும் இந்த அளவுக்குப் பொறுப்பற்ற முறையில் பேசியதில்லை என்று நினைக்கின்றேன். குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சரின் கூற்றைத் தனிப்பட்ட ஒருவரின் கருத்தாக எடுத்துக்கொள்வதற்கு இல்லை. தற்போதைய அரசின் பேரினவாதச் சாயல் கொண்ட ஒருவகைக் கொள்கைப்பிரகடனம் போலவே அது அமைந்துள்ளது.

தமிழர் அரசியலைப் பொறுத்தவரை, சி. வி. விக்கினேஸ்வரன் தலைமையிலான புதிய கூட்டணி அரங்கேற்றம் பெற்றிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும்பாலும் அடுத்த பொதுத்தேர்தலுடன் தனது மூட்டை முடிச்சுகளுடன் பிரியாவிடை பெறும் நாள் நெருங்கிக்கொண்டிருக்கிறது. என்றாலும், தமிழ்மக்களின் பழக்கதோஷத்தால் ஒருசிலர் தப்பித் தவறி வெற்றிபெறக்கூடிய வாய்ப்பும் இல்லாமல் இல்லை. அதேவேளை, விக்கினேஸ் வரனின் கூட்டணி, இன்னொரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அமைந்துவிடக்கூடாது என்பதும் தமிழ்மக்களின் பிரார்த்தனையாக இருக்கிறது. அப்படி ஆகிவிடாது என்ற நம்பிக்கையும் தமிழ்மக்கள் மத்தியில் இருக்கிறது. என்ன இருந்தாலும், விக்கினேஸ்வரன் ஒரு வித்தியாசமான தலைவர். அவரிடம் எனக்கு மிகவும் பிடித்த அம்சம், உண்மைகளைத் துணிச்சலாகத் தெரிவிக்கும் அவரது அறிவாற்றல் நிறைந்த ஆளுமை. இத்தகைய ஆளுமை, இதுவரையில் இலங்கையின் எந்தத் தமிழ்த் தலைவரிடமும் காணக்கிடைக்காதது. அதுவே அவரின் தனித்துவம். இன்று நமது நாட்டுப் பேரினவாதிகளைக் குலைநடுங்கவைப்பவராகவும், அவர்களுக்குச் சிம்மசொப்பனமாகவும் விளங்கும் ஒரே தமிழ்த் தலைவர் விக்கினேஸ்வரன் மாத்திரமே. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இலகுவில் ஏமாற்றலாம். ஆனால், விக்கினேஸ்வரனை அப்படி ஏமாற்ற முடியாது என்பது, பேரினவாதத்தில் பழம் தின்று கொட்டை போட்ட அனைவருக்கும் தெரியும். விக்கினேஸ்வரன் தலைமையிலாவது தமிழ் மக்கள் விதியை வெல்லவேணடும். சாதிப்பாரா விக்கினேஸ்வரன் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

## நல்ல தமிழ் வேண்டும்

ஆண்டுதோறும் பெப்ரவரி 13ஆம் திகதி உலக வானொலித் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இலங்கையிலும் என்னுடைய ஞாபகத்தைப் பொறுத்தவரையில், 2016 ஆம் ஆண்டு முதல் வானொலித் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ் ஆண்டுக்கான வானொலித் தினம் கடந்த பெப்ரவரி 13 ஆம் திகதி மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் இலங்கைக் கலாசாரத் திணக்களத்தினால் சிறப்பாக நடத்தப்பட்டது. பிரதம அதிதியாகப் பிரதமர் கலந்துகொண்டார். தமிழ் ஒலிபரப்புத் தொடர்பான வாழ்நாள் சாதனையாளர் விருது, பிரபல அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீட்டுக்கு வழங்கப்பட்டது. விழா முடிந்த பின்னர் பேசிக்கொண்டிருந்தபோது, தமது வானொலி அனுபவங்கள் தொடர்பான ஒரு நூலைத் தாம் எழுதிக்கொண்டிருப்பதாக அறிவிப்பாளர் அப்துல் ஹமீட் என்னிடம் தெரிவித்தார். நானும் மகிழ்ச்சியோடு, அப்படியொரு நூல் வெளிவருவது மிகவும் நல்லது என்று சொன்னேன். அப்துல்

ஹமீட் பற்றிப் பல ஆண்டுகளுக்கு முன் ஞானத்தில் நான் எழுதியிருக்கிறேன்.

இலங்கையின் பழமையான வானொலி இலங்கை வானொலி என்பது பலருக்கும் தெரியும். காலப்போக்கில் அதுவும் வேறு சில பிராந்திய வானொலிகளையும் தன்னகத்தே உள்ளடக்கிக் கொண்டது. பல தனியார் வானொலிகள் தமிழ்ச்சேவைகளைத் தொடங்கி, வெற்றிகரமாக நடத்திவருகின்றன. சக்தி எப்.எம், சூரியன் எப்.எம், வசந்தம் எப்.எம், ஸ்டார் தமிழ் (பழைய வர்ணம் எப்.எம்), கபிற்றல் எப். எம் எனத் தனியார் வானொலிகளின் தமிழ்ச்சேவைகள் பெருகிவிட்டன. இதனால், ஒலிபரப்புத்துறையில் ஆர்வமும், திறமையும் கொண்ட பல இளைஞர், யுவதிகளுக்குச் சிறந்த சந்தர்ப்பங்கள் கிடைத்துவருகின்றன. கணிசமானோர் தமக்குக் கிடைத்த இத்தகைய அரிய சந்தர்ப்பங்களைச் சிறப்பாகப் பயன்படுத்திவருகின்றனர். சிலர் அறியாமையால் போட்டுடைத்துவருகின்றனர்.

வானொலியின் முக்கிய நிகழ்ச்சிகளுள் ஒன்றாக விளங்குவது, செய்தி வாசிப்பு. சிறந்த குரல்வளம், சிறந்த உச்சரிப்புத்திறன், முகம் தெரியாத கம்பீரம், செய்தியைக் கேட்கத் தூண்டும் வாசிப்புத்திறன் முதலானவை ஒரு செய்தி வாசிப்பாளருக்கு அவசியமானவை. செய்தி வாசிப்பில் அன்று முதல் இன்று வரை தனக்கெனத் தனித்துவத்துடன் இலங்கை வானொலி விளங்குகிறது. இலங்கை வானொலியில் நீண்டகாலமாக அறிவிப்பாளராகவும், செய்தி வாசிப்பாளராகவும் விளங்கும் ஆண் ஒருவரைத் தவிர, மற்றவர்கள் எல்லோரும் நன்றாக வாசிக்கிறார்கள். குறிப்பிட்ட அவர், இன்றும் செய்தி வாசிக்கும்போது தடக்குப்படுவதை அவதானித்துள்ளேன்.

தனியார் வானொலிகளில் சக்தி எப்.எம்மின் செய்தி வாசிப்பாளர்கள் அனைவரும் சிறந்த குரல்வளமும், திறமையும் கொண்டவர்கள். செய்தி கேட்பவர்களின் காதுகளுக்குக் கேடு விளைவிக்காத முறையில் தத்தம் பாணியில் சிறப்பாக வாசிக்கிறார்கள். சூரியன் எப்.எம்மில் செய்தி வாசிக்கும் ஆண்களில் ஓரிருவருக்கு ஏன்தான் ஒருவகையான விபரீத புத்தி ஏற்பட்டுள்ளதோ தெரியவில்லை. தங்களது அழகான குரல்வளத்தை, ஏதோ புதிய 'ஸ்ரைல்' என்று நினைத்துத் தேவையில்லாமல் அலங்கோலப்படுத்துகிறார்கள். அவர்கள் செய்திவாசிக்கும் விதம் காதுகளுக்குக் கர்ணகடூரமாக இருக்கிறது. இதே போன்றே முன்னர் சூரியன் எப்.எம்மில் செய்தி வாசித்த பெண் ஒருவரும் 'ஸ்ரைல்' என்று கருதி, தமது இனிய குரலுக்குச் சித்திரவதை கொடுத்தார். இவர்களின் இக்குறைகளை எடுத்துச்சொல்வார் யாரும் இல்லையா? ஆனால். இதே எப். எம்மில் இப்போது செய்தி வாசிக்கும் பெண்கள் அனைவரும் சிறப்பாக வாசிக்கிறார்கள்.

கப்பிற்றல் எப்.எம்மில் செய்தி வாசிப்போரில் பத்மநாதன் பிரதாப்பும், வினிப்பிரியா மணிநாதனும் சிறப்பாகச் செய்தி வாசிக்கின்றனர். இச்சேவையில் பெண் செய்திவாசிப்பாளர்களின் தொகை அதிகரிக்கப்படவேண்டும். நல்ல குரல்வளமும், திறமையும் கொண்ட தரணீதரன், மேடைப்பேச்சுப் போலவே உரத்த சத்தத்தில் செய்தி வாசிப்பது என்னவோபோல் இருக்கிறது. அண்மையில் நான் தரணீதரனைச் சந்தித்தபோது, இச்சிறு குறையை அவரிடம் நேரடியாகச் சொன்னேன். அவரும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டார். இதே எப்.எம்மில் செய்தி வாசிக்கும் இன்னோர் ஆண் செய்திவாசிப்பாளர் நல்ல குரல்வளத்தைக் கொண்டிருந்தபோதிலும், உச்சரிப்புக் குறைபாடு தெரிகிறது. உள்ளது, உள்ளனர் போன்றவற்றை உல்லது, உல்லனர் என்று வாசிக்கிறார். தமிழ் அறிந்தவர்களின் காதுகளுக்குக் கஷ்டமாக இருக்கிறது. பிறிதோர் ஆண் செய்திவாசிப்பாளர் செய்தி வாசிக்கும்போது எமது தலைவிதியை நோகவேண்டும் போல இருக்கிறது. யாரும் செய்யாத 'புது ஸ்ரைலில்' தாம் செய்தி வாசிப்பதாக நினைத்துக்கொண்டு, தேவையில்லாமல் இழுத்து இழுத்து வாசிக்கிறார். ஸ்டார் தமிழ் வானொலி ஹோஷியா ஸ்நெல் அனோஜன் என்ற ஒரு சிறந்த பெண் செய்திவாசிப்பாளரைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஹோஷியாவின் செய்தி வாசிப்பு மிக நன்றாக இருக்கிறது. தனியார் வானொலிகளில் சிலர் செய்தி வாசிக்கும்போது உண்மையில் எரிச்சல்தான் வருகிறது. எமது காதுகளுக்குக் காப்புறுதி தேவை என்பதை, சிலர் செய்தி வாசிக்கும்போதுதான் நான் உணர்ந்துகொள்வதுண்டு.

இலங்கை வானொலி உட்பட, வானொலிச் செய்தித் தயாரிப்பைப் பொறுத்தவரை, ஒரு முக்கிய தவறு அவ்வப்போது இடம்பெறுகிறது. வாக்கியங்களை முடிக்கும்போது, ஒருமை, பன்மைப் பிழைகளைப் பொருட்படுத்தாத நிலை காணப்படுகிறது (தொலைக்காட்சிச் செய்தித் தயாரிப்புக்கும் இது பொருந்தும்). மொழி பற்றிய போதிய அக்கறை இன்மையே இதற்குக் காரணம்.

முன்பெல்லாம் இலங்கை வானொலியில் பாடல்களை ஒலிபரப்பும்போது, பாடகர், பாடகி

களின் பெயர்களைத் தவறாமல் சொல்வார்கள். இப்போது காலையில் 'என்றும் இனியவை' என்ற நிகழ்ச்சியில்தான் பாடுவோர் பெயர் சொல்லப்படுகிறது. அந்த நிகழ்ச்சியில் அறிவிப்பாளர்கள் ஜெயகிருஷ்ணாவும், தாஜும் இணைந்துகொள்ளும்போது, மிகச் சிறந்த பழைய பாடல்கள் கிடைக்கின்றன. சில அறிவிப்பாளர்கள் அந்தச் சிறந்த நிகழ்ச்சியை ஏனோதானோ என்றுதான் நடத்துகிறார்கள். சிலருக்குப் பாடுவோரின் பெயர்களைக் கூடச் சரியாகச் சொல்லத் தெரிவதில்லை. இப்போது இலங்கை வானொலி உட்பட அநேகமாகச் சகல வானொலிகளிலும், பாடல்களை ஒலிபரப்பும்போது பாடுவோர் பெயர்கள் சொல்லப்படுவதில்லை. அப்படிச் சொல்லாமல் விடுவதை ஒரு புதிய 'பஷன்' என்று அறிவிப்பாளர்கள் கருதுகிறார்கள் போலும்! ஆனால், பாடல் ஒலிபரப்பின்போது பாடுவோர் பெயர் நிச்சயம் சொல்லப்படவேண்டும். இப்போதெல்லாம் அறிவிப்பாளர்களுக்கு ஏன் அப்படியொரு சோம்பேறித்தனம்?

தமிழ் ஓர் அழகான மொழி என்பது பலருக்கும் தெரிந்த விடயம். அவ்வாறு அழகான ஒரு மொழியில் சேவைகளை நடத்தும் சில தனியார் வானொலி நிலையங்கள், தமிழ்ப் பெயர்களைத் தமது வானொலிகளுக்குச் சூட்டாது, ஆங்கிலப் பெயர்களையே சூட்டியுள்ளன. ஸ்டார் தமிழ், கப்பிற்றல் எப்.எம் என்பவை, ஏன் ஆங்கிலப் பெயர்களைத் தேர்ந்தெடுத்தன என்பது ஆச்சரியமாக உள்ளது. இலங்கை வானொலி உட்படப் பல வானொலிகள் தமது நிகழ்ச்சிகள் சிலவற்றுக்கு ஆங்கிலப் பெயர்களையே சூட்டியுள்ளன (தொலைக்காட்சிகளுக்கும் இது பொருந்தும்). ஏதோ தமிழில் வார்த்தைகளுக்குப் பஞ்சம் என்பது போல இவை நடந்துகொள்கின்றன.

இத்தகைய குளறுபடிகளுக்கு மேலாக, வானொலிகளில் - குறிப்பாகத் தனியார் வானொலிகளில் - அழகிய தமிழைக் கேட்கவே முடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது (தொலைக்காட்சிகளிலும் இதே நிலைதான்). இது தொடர்பான எனது தனிப்பட்ட வேதனை சொல்லி மாளாது. ஒரு குறிப்பிட்ட தனியார் வானொலி இவ்விடயத்தில் 'முன்னணி' வகிக்கிறது. நான் அறிந்தவரையில், இந்தியாவில் இருந்து வந்த யாரோ ஒரு 'மேதாவி,' இந்தியத் தமிழ்ப் பேச்சுவழக்கில் நிகழ்ச்சிகளை நடத்துவது தான் சிறந்தது என 'உபதேசம்' செய்ய, குறிப்பிட்ட தனியார் வானொலியும் அதை வேதவாக்காக ஏற்று, அழகிய தமிழைக் கைவிடத் துணிந்தது. போட்டிச்சூழலில் மற்றைய வானொலிகளும் 'விட்டேனா பார்!' என்று அதனையே பின்பற்றத் தொடங்கின. இதில் வேடிக்கை என்னவென்றால், அழகிய தமிழுக்குப் பெயர் போன இலங்கை வானொலியும், தனக்கென இருந்த தனித்துவத்தையும் இழந்து, மெல்ல மெல்ல இவ்விடயத்தில் தனியார் வானொலிகளைப் பின்பற்றத் தொடங்கியுள்ளது. நாக்கில் நல்ல தமிழை வரவழைக்கத் தடுமாறும் அறிவிப்பாளர்களுக்கு இது ஒரு பெரும் வரப்பிரசாதமாகிவிட்டது. தாங்கள் பேசுவது வானொலி 'மைக்'கின் முன்னால் என்பதைப் பொதுவாக மறந்துவிடும் இன்றைய வானொலி அறிவிப்பாளர்கள், தாங்கள் ஏதோ தேநீர்க்கடையில் இருந்து பேசுவது போல், ஆளுக்காள் இந்தியச் சினிமாத் தமிழில் அரட்டையடிக்கிறார்கள். இது பொதுவாகத் தனியார் வானொலிகளில் அதிகமாகக் காணப்படுகிறது. இதையெல்லாம் கேட்டுத் தொலைப்பதற்கு என்றே இருக்கிறது, நமது நேயர் கூட்டம்!

வானொலிகளைச் சிறியோர் முதல் பெரியோர்வரை கேட்டுவருகின்றனர். ஆகவே, வானொலிகளில் இடம்பெறும் தமிழ், இந்தியச் சினிமாத் தமிழ் போல் அல்லாமல், அழகிய தமிழாக இருக்கவேண்டும். தொலைக்காட்சிகளுக்கும் இது பொருந்தும். இது தொடர்பாக 'இனியொரு விதி செய்வோம்' அதை எந்த நாளும் காப்போம்.' சிறப்பாக, அழகாகத் தமிழைப் பயன்படுத்தும் வானொலி நிறுவனங்களுக்கும், தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும், அவற்றின் ஆண் - பெண் அறிவிப்பாளர்களுக்கும் விருது வழங்கும் ஏற்பாடு ஒன்றினை எதிர்காலத்தில் ஏதாவது ஓர் அமைப்பு ரீதியாக யாராவது செயல்படுத்த முன்வந்தால் நன்றாக இருக்கும். முக்கியமாகக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்கு இக்கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன். எதிர்காலத்திலாவது நமது வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் அழகிய தமிழைக் கேட்கமுடியாதா என்ற நப்பாசை தான் இதற்குக் காரணம். தமிழ் மீது ஈடுபாடு கொண்ட அனைவரும் வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் நல்ல தமிழ் வளர்வதை வற்புறுத்தவேண்டும் என விரும்புகிறேன். வானொலி, தொலைக்காட்சிகளின் இளம் நேயர்களும் கெஞ்சிக் கொஞ்சிப் பேசுவதைத் தவிர்த்து, கொஞ்சமாவது மொழி வளர்ச்சியில் அக்கறை காட்டவேண்டும்.

❍❍❍

## கலாபூஷணம் கே.பொன்னுத்துரை

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்



## ஜனார்த்தனனின் இரு நூல்கள் வெளியீடு

ஜனார்த்தனன் எழுதிய ஜுவாலை கட்டுரைத் தொகுதி மற்றும் ‘பைன் மரக்காடு’ கவிதைத் தொகுதி ஆகியவற்றின் வெளியீட்டு விழா 16-02-2020 அன்று மாலை கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. ஞானம் பிரதம ஆசிரியர் தி. ஞானசேகரன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் கலாபூஷணம் பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். புரவலர் ஹாசிம் உமர் நூல்களின் முதற்பிரதிகளைப்



பெற்றுக் கொண்டார். நூல் அறிமுகவுரைகளை மு. மயூரன், தி. அனோஜன் ஆகியோர் நிகழ்த்தினர். தவ சஜீதரன் கருத்துரை வழங்கினார். சிறப்புப்பிரதிகளை திருமதி ஞானம் ஞானசேகரன், திரு. மு. தவராஜா ஆகியோர் பெற்றுக்கொண்டனர். பிரதாஸ் S. ஆக்ஞயா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். ஜனார்த்தனனின் ஏற்புரையுடன் விழா இனிதே நிறைவேறியது.

●●●



## சிந்தனைச் செல்வன் எஸ். பத்மநாதன் (கனடா) எழுதிய மூன்று நூல்களின் அறிமுக விழா



சிந்தனைச் செல்வன் எஸ். பத்மநாதன் (கனடா) எழுதிய மூன்று நூல்களின் அறிமுகவிழா 15-02-2020 அன்று மாலை கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் இடம்பெற்றது. ஞானம் ஆசிரியர் தி.ஞானசேகரன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்தினை செல்வி வைஷாலி யோகராஜன் இசைத்தார். வரவேற்புரையையும் நூலாசிரியர் அறிமுகத்தினையும் கவிஞர் மேமன்கவி ஆற்றினார். வாழ்த்துரையை திரு. சொ. அமிர்தலிங்கமும் கருத்துரையை பேராசிரியர் சோ. சந்திரசேகரமும் வழங்கினர். சிந்தனைப் பூக்கள் பாகம் -1 இன் அறிமுக உரையை பேராசிரியர் சசிகலா குகமூர்த்தி அவர்களும், பாகம் -2 இன் அறிமுக உரையை கலாநிதி சபா அதரன் அவர்களும் பாகம் -3 இன் அறிமுக உரையை கலாநிதி



க. கருணாநிதி அவர்களும் ஆற்றினர். புரவலர் ஹாசிம் உமர் முதற்பிரதிகளைப் பெற்றுக் கொண்டார். வாழ்த்துரையை எம்.வாமதேவன் வழங்கினார். ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் சிந்தனைப் பூக்கள் பத்மநாதன் வழங்கினார். ஊடகவியலாளர் யோ. நிமல்ராஜ. நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

●●●

## மல்லிகை சி. குமார் அவர்களின் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வும் நினைவேந்தல் நிகழ்வும்

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் ஆகியவற்றின் அனுசரணையில் கொடகே கையெழுத்துப் போட்டியில் விருதுபெற்ற மக்கள் எழுத்தாளர் மல்லிகை சி. குமார் அவர்களின் 'வேடத்தனம்' ( சிறகதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வும் நினைவேந்தல் நிகழ்வும் 15-02-2020 அன்று சனிக்கிழமை காலை பத்து மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்க வினோதன் மண்டபத்தில் இடம்பெற்றது.

பேராசிரியர் சோ. சந்திரசேகரம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தேசபந்து சிரிசுமன கொடகே கலந்து சிறப்பித்தார். முதற்பிரதியை அல்ஹாஜ் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டார். அஞ்சலி உரைகளை பேராசிரியர் செ. யோகராசா, திரு. பி. பி. தேவராஜ், டாக்டர் தி. ஞானசேகரன், தம்பு சிவ சுப்பிரமணியம். தெளிவத்தை ஜேசப், அல் அஸூமத், டாக்டர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், மு. சிவலிங்கம், கே. கே.பொன்னுத்துரை, திரு. ஆ.செல்வேந்திரன், திரு. எம். வாமதேவன், திரு. மேமன்கவி ஆகியோர் நிகழ்த்தினர்.

●●●

## தமிழ்ப்பட்டயக் கற்கைநெறி பட்டமளிப்பு விழாவும் "தமிழ்நிதி" விருது வழங்கல் நிகழ்வும்

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ப் பட்டயக் கற்கைநெறி 2018-2019 பட்டமளிப்பு விழாவும் 'தமிழ்நிதி' விருது வழங்கல் நிகழ்வும் 29-02-2020 சனிக்கிழமை காலை சங்கத்தலைவர் திரு. ஆ. குகமூர்த்தி அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. பேராசிரியர் மா. கருணாநிதி பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். 'தழிழ்நிதி' விருது, அறிஞர் எழுத்தாளர் திரு. செபஸ்டியன் அந்தனிஜீவா அவர்களுக்கு வழங்கப்பட்டது. வரவேற்புரையை சட்டத்தரணி ஜி. இராஜகுலேந்திரா அவர்களும் தொடக்வுரையை பேராசிரியர் தை. தனராஜ் அவர்களும் வாழ்த்துரையை பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்களும் கருத்துரையை கலாநிதி க. இரகுபரன் அவர்களும் நிகழ்த்தினர். தொடர்ந்து தலைமையுரை, பிரதம விருந்தினர் உரை என்பன இடம்பெற்றன. திருமதி வளர்மதி சுமாதரனின் கௌரவிப்பு உரையைத் தொடர்ந்து தமிழ்நிதி விருது வழங்கல் இடம்பெற்றது விழாவில் 'வண்மொழி' என்ற நூல் வெளியிடப்பட்டது. நூலின் முதற்பிரதியை அல்ஹாஜ் ஹாசிம் உமர் பெற்றுக்கொண்டார். சங்கப் பொதுச் செயலாளர் திரு. மு. மனோகரனின் நன்றியுரையைத் தொடர்ந்து சங்கீதத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.



●●●

## "துரைவி" (89) பிறந்ததின நினைவுப் பேருரையும் விருது வழங்கலும்

மேற்படி நிகழ்வு 29-02-2020 சனிக்கிழமையன்று மாலை கொழும்புத் தமிழ்ச்சங்க வினோதன் மண்டபத்தில், சாகித்தியரத்னா தெளிவத்தை ஜோசப் தலைமையில் இடம்பெற்றது. வரவேற்புரையை மேமன்கவி நிகழ்த்தினார். 'மலையகச் சிறுகதைகளில் பெண்களின் இருப்பும் பிரச்சினைகளும்' என்ற தலைப்பில் 'ஞானம்' பிரதம ஆசிரியர் தி. ஞானசேகரன் நினைவுப் பேருரை நிகழ்த்தினார். 2019ஆம் ஆண்டிற்கான துரைவி விருதுபெறும் ஆய்வு நூலாக நந்தினி சேவியரின் 'பிடித்த சிறுகதை' என்றநூல் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்பட்டது. நன்றியுரையை ராஜ்பிரசாத் துரை விஸ்வநாதன் நிகழ்த்தினார்.

●●●

# வாசகர் பேசுகிறார்

சென்ற ஞானம் இதழில் (237) "ஆன்ற ஆனைக்கும் அடிசறுக்கியதோ?" என்ற கட்டுரைக்கான சோ. ப. வின் பதிலுரை மிக நேர்த்தியாய் இருந்தது. இப்பூவுலகில் வாழம் எவரும் சார்பு நிலைக்குட்பட்டவராகவே இருப்பர். அதை மீறி எவரும் இருக்க முடியாது. நம்மைப் படைத்தவராக, பூரணமானவராகச் சொல்லப்படும் கடவுள்கூட, இப்பூமியில் கால்பதித்தால் தன் பூரணத்தன்மையை இழந்து சார்பு நிலைக்குள்ளாகிறார் என்பதால்தான் பின்நவீனத்துவவாதி தெரிதா (Deaaida Jagues) "தான் ஆராயும் உலகினுள் ஓர் உறுப்பாக இருந்து கொண்டே மனிதன் படைப்புலகத்தை முழுவதுமாக ஆராய முடியாது' என்று கூறுகிறார். சோ.ப.வுக்கு எனது பாராட்டுதல்கள்! முருகையனின் வார்த்தைகளில் சொல்வதானால் "சந்தோசம். மெத்தச்சரி"

●●●

**மு. பொன்னம்பலம்**

"ஞானம் 237" வாசித்தேன். அட்டையில் ஆரம்பித்து அனைத்தும் பிரமாதம். ஆசிரியர் பக்கம் அதுவும் விசேடம். நீங்காத உடல் உபாதையுடனும் தூங்காது சமூகப்பணி - செஞ்சொற் செல்வரை எப்படிப் பாராட்டுவது? எல்லாமே முருகன் தான். இறைஅருள் பாலிக்கும்.

"புலிப்பகைவன்" யதார்த்தமா? அல்ல உருவாக்கமா? என்னுள் எழுந்திருக்கும் போராட்டம் இன்னும் முற்றுப் பெறவில்லை. அது எதையோ தட்டி எழுப்புகிறது.

நடனமேதை கார்த்திகா கணேசர் எழுதிய வித்தகர் பற்றிய பார்வை இன்னொரு வெள்ளமாகிறது.

"தலைமுறை தாண்டிய தரிசனங்கள்" அடுத்த நூற்றாண்டில் நமக்குள் அடுத்துவரும் தலைமுறையுள் தோன்றப்போகும் ஆழமான பார்வை என நினைப்பு வருகிறது. நன்றிகள் சுதாகருக்கு.

அறிஞர் வாகரைவாணன் ""பாடங்கள்" பாராட்ட வேண்டியவை. அவர்பாணி தனி. அது எப்போதும் சிறக்கும் சிந்திக்கத் தூண்டும்.

எதிர்பார்த்த விருந்து சோ.ப. விடமிருந்து. நன்றி. அதன் இறுதி வரிகள் - அதுதான் சோ.ப.

நூலாளர் செல்வராஜா அவர்கள், வரலாற்றின் செய்திகளை ஆவணமாகத் தருகிறவர். கணநாத் ஒபயசெகரவின் ஆய்வுகள் குறித்த அறிமுகம், ஒருவித அற்புதப்பார்வை. "புரட்டஸ்தாந்த பௌத்தம்" கேட்கச் சுவைக்கிறது. அது இதுவரை அறியாத இன்னொரு பக்கம், நன்றி நூலகருக்கு.

புதுவை அரவிந்தர் ஆசிரமத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் மௌனத்தின் உறைவிடமாக இருந்த கவியோகியாரிடம் இத்துணை ஆளுமைகளா? மெய் சிலிர்க்கிறது. மிகச் சிறு வயதில் எங்கள் ஊர் (நயினாதீவு) கோயிலுக்கு பெரியவர் அருள்நந்தி அவர்களுடன் வந்திருந்த அடிகளாரை இப்போது ஞாபகப்படுத்தப் பார்க்கிறேன். கருந்தாடியுடனான அந்த உருவம் மங்கலாக நிழலாடுகிறது. தமிழ்மணி மானா மக்கீன் அவர்களுக்கான நன்றிகள் இதயம் பாராட்டுகிறது.

மொத்தத்தில் "ஞானம்" ஆழமான பகிர்தல் ஊடான புரிதல்.

ஐயா, தங்களின் தினக்குரல் 'அந்தநாள் ஞாபகம்' தவறாது படித்து வருகிறேன். சுவையாகவும், ஆறுதலாகவும் உள்ளது.

●●●

**மா. குலமணி, நயினாதீவு.**

## முக்கிய குறிப்பு

**புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும். இல்லையேல் அந்த ஆக்கங்கள் பிரசுரிக்கப்படமாட்டாது. பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.**

– ஆசிரியர்



# சம்ஸ்கிருத நன்மொழிகள்...

சம்ஸ்கிருத இலக்கியங்களிலே **பர்த்ருஹரி** மிகவும் பிரசித்திபெற்ற அறிஞர். இவர் அரசனாகவும், அறிஞராகவும், புலவராகவும், யோக சாஸ்திரங்களில் சிறந்தவரெனவும் பதிவுகள் காணப்பெறுகின்றன.

பர்த்ருஹரியின் பிரசித்திபெற்ற மூன்று சதக நூல்களிலே முதலாவதாக அமைவது **நீதிசதகம்** ஆகும். இதிலே 100 பாடல்கள் காணப்பெறுகின்றன. அவற்றுள் இரு பாடல்களை இங்கு தருகின்றோம்.



## (05) பரோபகாரர்களின் சுபாவங்கள்....

கனி நிறைந்த மரங்களானவை கனிகளின் பாரத்தால் வளைந்து வணங்கி நிற்கின்றன. நீர்நிறைந்த மேகங்கள் எந்நேரத்திலும் மழைபொழிய வேண்டி எங்கும் பரவி சஞ்சரித்து நிற்கின்றன. மரங்கள் கனிகளையும் மேகங்கள் மழைநீரையும் பிறருக்கு அகம்பாவம் இல்லாமல் முயன்று தருகின்றன. விடயம்நிறைந்த பெரியோர்களும் இத்தகைய பண்புகளை இயற்கையாகத் தம்மகத்தே கொண்டிருப்பார்கள். அவர்கள் தம்மிடத்தே விடயதானங்கள் நிறைந்திருந்தாலும் அகம்பாவம் கொள்ளாது பிறருக்கு வழங்குவதற்கு இயற்கையாகவே முனைவார்கள்.





கிரந்தம்

ஹவஹி நஹ்ராஹ்ஸாவ: ஃஹொஹஹெ:
நவாஹ்ஹிஹஹஶிவிஹஃஸிநொ வநா: ।
அநுஹதா ஸஹுஹஷா: ஸஹஹிஹி:
ஸ்ஹாவ ஸாவெஷ பரொபகாரிணாஂ ||

தமிழ்

ப$^4$வந்தி நம்ராஸ்தரவ: ப$^2$லோத்$^3$க$^3$மை:
நவாம்பு$^3$பி$^4$ர்பூ$^4$மிவிலம்பி$^3$னோ க$^4$னா: ।
அனுத்$^3$த$^4$தா ஸத்புருஷா: ஸம்ரு'த்$^3$தி$^4$பி$^4$:
ஸ்வபா$^4$வ ஏவைஷ பரோபகாரிணாம் ।।

## (06) தைரியசாலிகளைத் தடைசெய்ய முடியாது....

நெருப்பினைத் தலைகீழாக வைத்து எரிக்க முயன்றாலும் நெருப்பின் பிரதான தலையானது (சிகா) ஒருபோதும் தலைகீழாகப் போகாது. நெருப்பின் சுவாலையானது எந்தச் சந்தர்ப்பத்திலும் மேல்நோக்கியே எரிந்தவண்ணம் இருக்கும். இதேபோன்று தீரகுணமுடைய தைரியசாலியின் குணத்தை அழிக்கமுடியாது. எத்துணை தடைகள் செய்தாலும் பலவழிகளில் அழிக்க முயன்றாலும் தைரியசாலியின் குணமானது தடைகளைத் தாண்டி வெளிப்பட்டு இயங்கியவண்ணம் இருக்கும்.



கிரந்தம்

கஹஹிஹதஸ்யாபி ஹி ஹெயஹஹஹெ:
ந ஶகஹெ ஹெயஹஹஹண: ஹஹாஷஹஹ ।
அஹொஹஹஸ்யாபி ஹஹதஸ்ய ஹஹெ:
நாஹ: ஶிவா யாஹி கஹாஹிஹெவ ॥

தமிழ்

கத$^3$ர்தி$^2$தஸ்யாபி ஹி தை$^4$ர்யவ்ரு'த்தே:
ந ஶக்யதே தை$^4$ர்யகு$^3$ண: ப்ரமார்ஷ்டும் ।
அதோ$^4$முக$^2$ஸ்யாபி க்ரு'தஸ்ய வஹ்னே:
நாத$^4$: ஶிகா$^2$ யாந்தி கதா$^3$சிதே$^3$வ ।।

ஓவியங்கள் :
நன்றி – இணையம்

ஞா.பா.